பக்கங்கள்: 18 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஆனி 07 திங்கட்கிழமை 21.06.2021 கதிர் 228

### இனி இது ரகசியம் அல்ல!

‘கூடா நட்பு கேடாய் முடியும்’ என்பார்கள். சிற்றினம் சேராமை பற்றியும் பேசுவோம்.

நண்பர்களை – கூட்டணியினரை – அணி சேர்க்கின்றமை தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும்.

இலங்கை சுதந்தி

பக்கம்02

# மாகாணத்திடமிருந்து மருத்துவமனைகளை அரசு பிடுங்குவதைத் தடுத்து நிறுத்துங்கள்!

## அவைத் தலைவர் சி.வீ.கே. ஆளுநருக்கு அவசர கடிதம்





வடக்கு மாகாண சபையின் நிர்வாகத்துக்குட்பட்ட மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலைகள் மத்திய சுகாதார அமைச்சின் நேரடி நிர்வாகத்தின் கீழ் கொண்டு செல்வதற்கான முடிவை மீளாய்வுக்குட்படுத்தி நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ளுங்கள்.

– இவ்வாறு வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

☞2

## குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

வவுனியா, ஜூன் 21

வவுனியா மாவட்டம், புளியங்குளம் – பரசங்குளம் பகுதியில் கிணற்றிலிருந்து 26 வயதான இளம் குடும்பஸ்தர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் நேற்று மாலை அவரது வீட்டுக் கிணற்றில் சடலமாக மிதந்தமை கண்டறியப் பட்டது.

சடலம் அயலவர்களால் மீட்கப்பட்டு சட்டவைத்திய பரிசோதனைக்காக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக புளியங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றன எனத் தெரியவருகின்றது.

## கனடா செல்ல தமிழகத்துக்குள் ஊடுருவிய இலங்கைத் தமிழர்கள் குறித்து விசாரணை

### அடைக்கலம் கொடுத்தவரைத் தேடி வலைவீச்சு



(ந.லோகதயாளன்)

இலங்கையில் இருந்து படகு மூலம் கனடா செல்லத் தமிழகத்துக்குள் ஊடுருவிய இலங்கைத் தமிழர்கள் மங்களூரில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில், அவர்களில் நால்ரை மங்களூர் தனிப்படை பொலிஸார் வேதாளை

☞2

## வடக்கில் 37 பேருக்கு கொரோனா

வடக்கு மாகாணத்தில் மேலும் 37 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் 585 பேருக்கு நேற்று பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அவர்களில் 37 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் 27 பேரும், மன்னார் மாவட்டத்தில் 02 பேரும், வவுனியா மாவட்டத்தில் 07 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒருவரும் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

## நாள்தோறும் 2 ஆயிரத்தை தாண்டும் தொற்றாளர்கள்

### நேற்றும் 2,028 பேர் அடையாளம்

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுடன் நேற்றும் 2 ஆயிரத்து 28 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதையடுத்து கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 39

☞2

## கொரோனாவுடன் 55 இந்தியர்கள் கோப்பாய் வைத்தியசாலையில்!



(ந.லோகதயாளன்)

கம்பஹா மாவட்டத்தில் பணியாற்றும் 55 இந்தியர்களுக்குக் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்ட நிலையில் அவர்கள் யாழ்.கோப்பாய் கல்வியல் கல்லூரியில் இயங்கும் வைத்திய சாலையில்

☞2

### அனுமதிப்பத்திரமின்றி கடலட்டை பிடித்த

## 12 வெளிமாவட்ட மீனவர்கள் பருத்தித்துறையில் கைது!

பருத்தித்துறை கடற்பரப்பில் அனுமதிப்பத்திரமின்றி கடலட்டை தொழிலில் ஈடுபட்ட 12 வெளி மாவட்ட மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடற்படையினர் நேற்று நடத்திய இந்தக் கைது நடவடிக்கையில் தொழிலுக்குப்

☞2

## மேலும் 47 பேர் மரணம் கொரோனா காவு 2,581

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 47 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் இவ்வாறு உயிரிழந்தவர்களில் 20 பெண்களும், 27 ஆண்களும் உள்ளடங்குகின்றனர்.

இதன்படி நாட்டில் கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து

☞2

## பயணத்தடை இன்று தளர்வு; மாகாணம் தாண்ட முடியாது!

### நிகழ்வுகளுக்கு அனுமதி இல்லை

நாட்டில் அமுலில் இருந்த பயணக் கட்டுப்பாடு இன்று அதிகாலை 4 மணிக்கு தளர்த்தப் படுகின்றது எனக் கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான சவேந்திர சில்வா, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண ஆகியோர் கூட்டாகத் தெரிவித்தனர்.

பயணத்தடை தளர்த்தப்படும் காலப்பகுதியில் நகர்ப் பகுதிகளிலும் ஏனைய பகுதிகளிலும் பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டிருக்கும் எனவும், பொலிஸாரின் ரோந்து நடவடிக்கையும் இடம்பெறும் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர்

☞2

## வெடிக்காத நிலையில் மோட்டார் குண்டு எழுதுமட்டுவாளில் நேற்று கண்டுபிடிப்பு



(எஸ்.நிதர்ஷன்)

கொடிகாமம், எழுதுமட்டுவாள் பகுதியில் வெடிக்காத நிலையில் மோட்டார் குண்டு நேற்று கண்டுபிடிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம்

☞2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ரமடைந்த காலம் தொட்டு, இலங்கைக்கு – அதன் அபிவிருத்திக்கு – பெரிய அளவில் உதவி வந்த நாடு ஜப்பான். இந்த மிலேனியத்தின் இரண்டாவது தசாப்த காலம் வரை அதுதான் நிலைமை.

ஏன், விடுதலைப் புலிகளுடன் கொழும்பு அரசுக்கு சமரசம் ஏற்படுத்தப்பட்ட – மிலேனியத்தின் முதலாவது தசாப்தத்தில் – அந்த விடயத்தை ஒட்டிய அபிவிருத்தி வேலைகளுக்கு சர்வதேச நிதி உதவியைத் திரட்டித் தரும் பணியோடு சேர்த்துக் காரிய மாற்ற ஜப்பானின் விசேட தூதுவராக யசூஷி அகாஷி பல தடவைகள் இலங்கை வந்துபோனமையும், தலைவர் பிரபாகரனைக் கூட நேரில் சென்று சந்தித்துப் போனமையும் மறக்கக் கூடிய விடயங்கள் அல்ல.

அந்த சமரச முயற்சியை ஒட்டி சர்வதேச உதவிகளைப் பெறும் நோக்குடன் அமைக்கப்பட்ட நான்கு இணைத்தலைமை நாடுகளில் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், நோர்வே ஆகியவற்றுடன் ஜப்பானும் ஒன்றாக இருந்தது.

நாற்பதுகளின் நடுப்பகுதியில் உலக மகா யுத்தத்தில் அணுகுண்டு வீச்சுத் தாக்குதல்களை எதிர்கொண்டு அழிந்து போன ஜப்பானை மீளக் கட்டியெழுப்பும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்ட காலம். அப்போது உலக மகா யுத்தத்தில் பின்னடைவைக் கண்டு சரணடைந்த ஜப்பானை சர்வதேச உறவாடல்களில் பல நாடுகளும் கைவிட்டிருந்தன. ஐ.நா. சபையில் இலங்கை அமைச்சர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா ஜப்பானுக்கு ஆதவாகக் குரல் எழுப்பினார். அந்த நன்றிக்காக மட்டும் காலம் காலமாக இலங்கைக்கு முன்னின்று உதவியது ஜப்பான். கடந்த தசாப்தம் வரை இலங்கைக்கு உதவும் நாடுகளின் பட்டியலில் முதலிடம் ஜப்பானுக்குத்தான்.

இப்போது சீனாவுடன் உறவை இறுக்கிய கொழும்பு, அதனால் ஜப்பானின் அந்த மேன்மையான நல்லுறவை – நட்பை – இழந்துவிட்டது.

போதாக்குறைக்கு முன்னைய நல்லாட்சி அரசில் மீள மலர்ந்த இலங்கை – ஜப்பான் பொருளாதார விருத்தியையும் ஒரு தலைப்பட்சமாக நாசமாக்கியது கோட்டா அரசு.

ஜப்பானுடன் சேர்ந்து இலங்கை ஆரம்பித்த மின்சார ரயில் திட்டத்தையும் புதிய கோட்டா அரசு தன்பாட்டில் – ஒரு தலைப்பட்சமாக – ரத்துச் செய்தது. இதனால் குழப்பமடைந்த ஜப்பான், சம்பந்தப்பட்ட தனது நிறுவனம் ஊடாக இதுவரை செலவிட்ட ஐநூறு கோடி ரூபாவுக்கும் அதிகமான தொகையை மீள வழங்குமாறு உத்தரவிடக் கோரி இலங்கை அரசுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்கின்றது.

அதேநேரம் கொரோனாத் தொற்றை அடுத்து இறக்குமதிக் கட்டுப்பாடு என்ற பெயரில் ஜப்பான் வாகனங்கள் உட்பட்ட பல வர்த்தகங்களுக்குக் கதவடைப்பு செய்து விட்டது கொழும்பு.

இவை ஜப்பானை மேலும் சீற்றத்துக்குள் ஆழ்த்தியிருப்பதாகத் தெரிகின்றது.

இந்தோ பசுபிக் பிராந்தியத்தில் சீனாவின் ஆதிக்கம் – செல்வாக்கு – ஓங்கி வருகின்றமையைக் கட்டுப்படுத்துவதற்காக இந்தியா, அமெரிக்கா, ஜப்பான், ஆஸ்திரேலியா ஆகிய நான்கு நாடுகள் ஒன்று சேர்ந்து குவாட் அமைப்பு என்ற கட்டமைப்பை ஏற்படுத்தி, ஐக்கியப்பட்டு இயங்குகின்றன.

இந்த நிலையில் இந்தப் பிராந்தியத்தில் சீனா தனது வலையை விரிப்பதற்கு இடமளித்து, தாராளமாகவே நடந்து வரும் கொழும்பின் போக்குக் குறித்த ஜப்பான் உட்பட்ட அந்த நாடுகள் இயல்பாகவே வெறுப்புக் கொள்வது புரிந்து கொள்ளத் தக்கதே.

இந்தச் சீத்துவத்தில்தான், ஜப்பானிடம் கொரோனாத் தடுப்பூசி தொடர்பில் உதவி கோரியிருக்கின்றார் இலங்கை ஜனாதிபதி கோட்டா ராஜபக்ஷ.

ஏற்கனவே இந்தியாவிடம் இருந்து பெற்றுக் கொண்ட அஸ்ட்ரா ஸெனிக்கா ரகத் தடுப்பூசிகளின் முதலாம் டோஸைப் பெற்றுக் கொண்ட ஐந்து லட்சத்துக்கும் அதிகமான இலங்கையருக்கு இரண்டாவது டோஸை வழங்க முடியாது கொழும்பு தவிப்பது தெரிந்ததே.

இந்தப் பின்புலத்தில் இந்த ரக ஊசியை ஜப்பான் பல நாடுகளுக்கு இலவசமாக வழங்கி வருகின்றது என்பதை அறிந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, கொழும்புக்கான ஜப்பான் தூதுவரை அழைத்துப் பேசினார். ஊசி வழங்குமாறு கோரிக்கை முன்வைத்தார். தூது வரும் தலையாட்டி விட்டு வந்தார்.

தடுப்பூசி வழங்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடுத்த கோரிக்கையை ஜப்பான் தூதுவர் சாதகமாகப் பரிசீலிக்க இணங்கினார் என்ற பாணியில், இந்தச் சந்திப்பின் பின்னர் ஜனாதிபதியின் பேச்சாளர் தகவல் வெளியிட்டார்.

ஆனால், கொழும்பில் உள்ள ஜப்பான் தூதரகம் அதை மறுத்தது. ஆக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வின் கோரிக்கையைத் தங்கள் தூதர் செவிமடுத்தார் என்பதே உண்மை என்ற சாரப்பட தூதரகம் தகவல் தெரி வித்தது.

அத்துடன், தடுப்பூசி வழங்கும் அந்தக் கோரிக்கை விடயம் கிடப்பில் போடப்பட்டு விட்டது. கொழும்புக்கு சாதகமான பதில் ஏதும் வரவேயில்லை.

அதற்கிடையில், இதே அஸ்ட்ரா ஸெனிக்கா ரகத் தடுப்பூசியில் பத்து லட்சம் டோஸை நேற்று அன்பளிப் பாக வியட்நாமுக்கு வழங்குவது குறித்து ஜப்பான் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

ஜப்பானுக்கு வியட்நாமுடனான பொருளாதார விருத்தி மேம்பட்டு வருகையில், அதன் அடையாளமாக இந்தத் தடுப்பூசிகள் இலவசமாக – நன் கொடையாக – வழங்கப்படுகின்றன என்று ஜப்பான் அறிவித்திருக்கின்றது.

இந்த அறிவிப்பு இலங்கைக்கும், அதன் ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷ வுக்கும் ஜப்பான் கொடுத்த ஒரு சூடு, நல்ல அடி – என்றே எனக்குத் தோன்றுகின்றது. நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் வாசகர்களே...?

– மின்னல் –

## வெடிக்காத நிலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொடர்பில் தெரியவருவதாவது:-

எழுதுமட்டுவாழ் பகுதியிலுள்ள காணி ஒன்று துப்பரவு செய்யப்பட்டபோது வெடிக்காத நிலையில் குண்டு ஒன்று இருப்பது அவதானிக்கப்பட்டது.

உடனடியாகக் கொடிகாமம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதையடுத்து பொலிஸார் சம்பவ இடத்துக்கு சென்று மேலதிகவிசாரணைகளைமேற்கொண்டனர்.

## 12 வெளிமாவட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பயன்படுத்தி 4 படகுகளும் அவற்றின் வெளியிணைப்பு இயந்திரங்களும் 500 இற்கு மேற்பட்ட கலட்டைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

பருத்தித்துறை கடற்பரப்பில் மன்னார் மற்றும் புத்தளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 12 மீனவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் கடலட்டை பிடிப்பதற்கான அனுமதிப்பத்திரம் இருக்கவில்லை என்று கடற்தொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## கனடா செல்ல...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கடற்கரைக்கு நேற்று அழைத்து வந்து விசாரணை செய்தனர்.

தமிழகத்துக்குள் ஊடுருவிய இலங்கை தமிழர்களுக்குத் தங்க அடைக்கலம் கொடுத்த முக்கிய குற்றவாளி தலைமறைவானதால் அவர் குறித்தும் மங்களூர் தனிப்படை பொலிஸார் மரைக்காயர்பட்டிணத்தில் தீவிர விசாரணை நடத்திச் சென்றனர்.

புத்தளம் பகுதியில் இருந்து 34 இலங்கைத் தமிழர்கள் சட்டவிரோதமாக படகில் கனடா செல்வதற்காக கடந்த மாதம் 27ஆம் புத்தளம் கடற்கரையில் இருந்து புறப்பட்டனர். அவர்கள் மறுநாள் அதிகாலை இராமநாதபுரம் மாட்டம், இராமேஸ்வரம் அடுத்த வேதாளை கடற்கரையைச் சென்றடைந்தனர். பின்னர் வேதாளையில் இருந்து மங்களூர் சென்று கடல் வழியாக கனடாவுக்குத் தப்பிச் செல்ல முயன்றபோது இம்மாதம் 11ஆம் திகதி மங்களூர் பொலிஸாரால் 34 இலங்கைத்தமிழர்களும் கைதுசெய்யப்பட்டனர்.

இந்த வழக்கில் கைதுசெய்யப்பட்ட 34 இலங்கைத் தமிழர்களில் நான்கு பேரை மட்டும் பொலிஸ் காவலில் எடுத்த மங்களூர் பொலிஸார் அவர்களிடம் இருந்து முக்கிய ஆவணங்களை திரட்டுவதற்காக விசாரணை நடத்தி வருகின்றனர்.

## மாகாணத்திடமிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

18.06.2021 திகதியிடப்பட்ட அந்தக் கடிதத்தில் உள்ளவை வருமாறு:-

வடக்கு மாகாண சபையின் நிர்வாகத் துக்குட்பட்ட மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலைகள் மத்திய சுகாதார அமைச்சின் நேரடி நிர்வாகத்தின் கீழ் கொண்டு செல்வதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டிருப்பதாக ஊடகச் செய்திகள் மூலம் அறியப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பான எமது ஆட்சேபனையையும் அதிருப்தியையும் தெரிவிப்பதோடு இது மாகாண சபைகளுக்கு சட்டரீதியாக வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை மீறுவதாக அமைகிறது என்பதை பதிவு செய்து கொள்ள விரும்புகின்றேன்.

இந்த விடயத்தில் இந்த நாட்டின் அரசமைப்பின்படி மாகாண சபைகள் நியதிச் சட்டம் இயற்ற அதிகாரமளிக்கும் ஒன்பதாவது அட்டவணையின் நிரல் I இன் 11:1 பந்தியின் பின்வரும் ஏற்பாடுகளுக்கு தங்கள் அவதானத்தைக் கோர விரும்புகின்றேன்.

(போதனா வைத்தியசாலைகளும் விசேட நோக்களுங்களுக்காகத் தாபிக்கப்பட்ட மருத்துவமனைகளும் தவிர்) பொது மருத்துவமனைகளையும் கிராம மருத்துவமனைகளையும் மகப்பேற்று மருத்துவமனைகளையும் மருந்தகங்களையும் தாபித்தலும் பேணுதலும்.

இதன்படி போதனா வைத்தியசாலைகள் மற்றும் விசேட நோக்கங்களுக்கான வைத்தியசாலைகள் தவிர்ந்த ஏனைய வைத்தியசாலைகள் யாவும் மாகாண சபைகளின் நிர்வாகத்திற்குட்பட்டவையாகும்.

இந்த ஏற்பாட்டின் மூலம் வழங்கப்பட்ட அதிகாரத்திற்கமைய வடக்கு மாகாண சபையானது அதனது 12.01.2016 ஆம் திகதிய அமர்வில் நிறைவேற்றிய 2015 ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க சுகாதார சேவைகள் நியதிச் சட்டம் 08.02.2016 ஆம் திகதி ஆளுநரின் சம்மதம் கிடைக்கப் பெற்று சட்டமாக அமுலில் உள்ளது.

இந்த நியதிச் சட்டத்தின் பிரிவு 3 (அ) இன் கீழான அட்டவணை I இன்படி கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைகள் வட மாகாண சபையின் மாவட்ட பொது வைத்தியசாலைகளாக உள்ளடக்கப்பட்டுள்ளன. யாழ்ப் பாணம் மாவட்டம் இதில் உள்ளடக்கப்படாத காரணம் இம் மாவட்டத்தில் போதனா வைத்தியசாலை ஏற்கனவே இயங்கி வந்தமையே இந்த நிலையில் மேற்குறிப்பிட்ட மாவட்ட பொது வைத்தியசாலை எதையும் மாகாண சபையிடமிருந்து மத்திய சுகாதார அமைச்சு கையேற்பது அரசமைப்புக்கும் மாகாண சபையின் நியதிச் சட்டத்திற்கும் முரணானதாகும்.

இந்த மாவட்ட வைத்தியசாலைகளின் சேவைகளிலும் வசதிகளிலும் குறைபாடுகள் காணப்படுவதாலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்படுவதாயின் அதற்கான தீர்வு இவற்றை மத்திய மயப்படுத்துவதல்ல. அக்குறைபாடுகளை நீக்குவதற்கான நடவடிக்கைகளை மாகாண நிர்வாகம் ஊடாக மேற்கொள்வதே பொருத்தமானதாகும்.

நிர்வாகம் மத்திய சுகாதார அமைச்சின் கீழோ அல்லது மாகாண சபை நிர்வாகத்தின் கீழோ இருந்தாலும் அநேகமாக அதே ஆளணியினரே செயற்படுவர் என்பது தெளிவு. ஏனெனின் வைத்தியத்துறை சார்ந்த சகல அதிகாரிகளும் மத்திய சுகாதார அமைச்சினால் நியமிக்கப்படுவதுடன் அவர்களது ஒழுங்குக் கட்டுப்பாடும் அதனிடமே உள்ளது.

உண்மையாக இவ்வைத்தியசாலைகளுக்குத் தேவை உட்கட்டுமான மேம்படுத்தலும் பொருத்தமான நிபுணத்துவ வைத்தியர்களுமே. இவற்றை நிறைவேற்றுவதற்கான போதிய நிதியை மாகாண நிர்வாகத்திற்கு வழங்குவதன் மூலம் சகல குறைபாடுகளும் நிவர்த்திக்கப்படலாம் என்பதே எமது நிலைப்பாடாகும் என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறோம்.

மாகாண நிறைவேற்று அதிகாரியாகவுள்ள சிரேஷ்ட நிர்வாகியாகிய தாங்கள் இவற்றின் மேம்படுத்தலுக்கான நிதியை மாகாண சபை நிர்வாகத்திற்கு வழங்கினால் இனங்காணப்படும் குறைபாடுகளை நிர்வகிக்கும் ஆற்றல் தங்களுக்கு உண்டு என்பதை உயர்மட்டத்திற்கு சுட்டிக்காட்டி, இந்த முடிவை மீளாய்வுக்குட்படுத்தி நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் தங்களை அன்புடன் வேண்டுகின்றேன் – என்றுள்ளது.

## நாள்தோறும் 2...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆயிரத்து 689 ஆக உயர்வடைந்துள்ளது.

அத்துடன் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து ஆயிரத்து 389 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 35 ஆயிரத்து 719 ஆக உயர்வடைந்துள்ளது.

## கொரோனாவுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சேர்க்கப்பட்டுள்ளனர்.

கம்பஹா மாவட்டத்தில் இரும்புத் தொழிற்சாலை ஒன்றில் பணியாற்றும் இந்தியர்களுக்கே கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டு கோப்பாய் கொரோனா சிகிச்சை வைத்தியசாலைக்கு நேற்றுக் காலையில் கொண்டுவரப்பட்டனர்.

இவ்வாறு கொண்டுவரப்பட்ட அனைவரும் தனியான ஒரு விடுதியிலேயே சேர்க்கப்பட்டுள்ளனர்.

தொற்றுடன் கொண்டுவரப்பட்டுள்ள இந்தியர்கள் அனைவரும் ஹிந்தி மொழி மட்டுமே பேசுபவர்களாகவுள்ளனர்.

இவர்கள் அனைவரும் வட இந்தியாவைச் சேர்ந்தவர்களாவர்.

## பயணத்தடை இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குறிப்பிட்டார்.

பயணத் தடை தளர்த்தப்பட்டாலும் சுகாதார நடைமுறைகளையும், வழிகாட்டல்களையும் முழுமையாகப் பின்பற்றுமாறும் கொரோனாத் தடுப்புச் செயலணி கோரிக்கை விடுத்துள்ளது.

அந்தக் கோரிக்கைகள் வருமாறு:-

வீட்டிலிருந்து இருவர் மட்டுமே வெளியில் செல்ல முடியும்.

அலுவலகங்களில் பணிபுரிவதற்குக் குறைந்தளவானோரையே சேவைக்கு அழைக்க வேண்டும்.

வீடுகளிலிருந்து இணையம் ஊடாக பணிபுரிவோர் தொடர்ந்தும் அவ்வாறே செயற்படுவதற்கு நிறுவன அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பொதுப்போக்குவரத்தில் ஆசனங்களின் எண்ணிக்கைக்கு அமையவே பயணிகள் ஏற்றப்பட வேண்டும்.

பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்தும் பயணிகள், முகக்கவசம் அணிந்திருத்தல் கட்டாயமாகும்.

மாகாணங்களுக்கு இடையிலான கட்டுப்பாடுகள் தொடர்ந்தும் நீடிக்கும் நிலையில், தகுந்த காரணத்துக்காக மாத்திரம் மாகாணத்துக்குள் பயணிக்க முடியும்.

சுற்றுலாப் பயணங்கள், யாத்திரை செல்லல் மற்றும் கொண்டாட்டங்களுக்கு தடை.

இதேவேளை, எதிர்வரும் 23ஆம் திகதி இரவு 10 மணி முதல் மீண்டும் பயணத்தடை மீண்டும் அமுலுக்கு வரும். தற்போதைய சூழ்நிலையில் 25ஆம் திகதி அதிகாலை 4 மணிக்கு பயணக் கட்டுப்பாடு தளர்த்தப்படும்.

## மேலும் 47 பேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

581 ஆக உயர்வடைந்துள்ளது என்றும் அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

# பொருளாதார ரீதியில் மக்கள் பலம்பெறுவதை சுயலாப அரசியல் சக்திகள் விரும்பவில்லை

## டக்ளஸ் குற்றச்சாட்டு



மன்னார், ஜூன் 21

மக்கள் பொருளாதார ரீதியில் வளர்ச்சியடைந்து வருவதை சில சுயலாப சக்திகள் விரும்பவில்லை என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை மன்னார், இலுப்பைக் கடவைக்கு விஜயத்தை மேற்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அங்குள்ள கடற்றொழிலாளர்களின் பிரச்சினை தொடர்பாக அவர்களுடன் கலந்துரையாடினார்.

மேலும் கிராம மக்களின் பொருளாதாரத்தில் பாரிய வளர்ச்சியை ஏற்படுத்தக்கூடிய கடலட்டை பண்ணை தொடர்பாக, தவறான புரிதல் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அதாவது, மக்கள் பொருளாதார ரீதியில் வளர்ச்சியடைவதை விரும்பாத சில சுயலாப சக்திகளே கடலட்டை பண்ணை தொடர்பாக, தவறான புரிதலை ஏற்படுத்துகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு குறுகிய நோக்கங்களுக்காக மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்பட்டுள்ள முரண்பாடுகள் தீர்த்து, யாரையும் எதிர்பார்க்காமல் வாழக்கூடிய வாழ்வாதாரத்தை அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுப்பேன் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்துள்ளார்.

# ஹாட்லி கல்லூரி பழைய மாணவர்களால் பருத்தித்துறை பிரதேசத்தில் உலருணவு





ஹாட்லிகல்லூரி2010ஆம்ஆண்டுபழைய மாணவர்களால் கொரோனா தொற்றுப்பரவல் காரணமாக ஏற்பட்டிருக்கும் இன்றைய இடர்கால சூழ்நிலையை கருத்தில் கொண்டு பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்குட்பட்ட புனிதநகர், திக்கம், பொலிகண்டி, அல்வாய் கிராமங்களில் தேவையுள்ள 130 குடும்பங்களுக்கு 3 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. மேலும் நண்பர்கள் வட்டத்தால் இனங்காணப்படுகின்ற தேவையுடையவர்களுக்கான அத்தியாவசிய உதவிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

# மக்களுக்கு 2 ஆவது டோஸ் கிடைக்கின்றமை சந்தேகமே!

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 21

முதலாவது கொரோனாத் தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டவர்களுக்கு உரிய நேரத்தில் இரண்டாவது டோஸ் கிடைப்பதில் சந்தேகம் இருப்பதாக ஜே.வி.பி. குற்றம் சாட்டியுள்ளது.

கடந்த சனிக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டில் மோசமான சூழ்நிலை இருந்தபோதிலும் பொதுமக்கள் தடுப்பூசியை பெற்றுக்கொள்ள நீண்ட வரிசையில் நின்று போராடிவருகின்றனர் எனவும் அவர் கூறினார்.

மே மாத இறுதிக்குள் நாட்டில் உள்ள அரைவாசி மக்களுக்கு தடுப்பூசி போடப்படும் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்த கருத்தையும் விஜித ஹேரத் சுட்டிக்காட்டினார்.

எவ்வாறு இருப்பினும் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கையை சிறப்பாக முன்னெடுக்க அரசாங்கத்தால் முடியவில்லை என்றும் அவர் குற்றம் சாட்டினார்.






# வெட்டுக்காயங்களுக்கு உள்ளான 6 மாதக் குழந்தை பரிதாபகர சாவு!

## திருகோணமலையில் துயரம்

திருகோணமலை -கப்பல் துறை பகுதியில் வெட்டுக் காயங்களுடன் மீட்கப்பட்ட மூவரில் 6 மாதக் குழந்தையொன்று உயிரிழந்துள்ளது.

கப்பல்துறையில் குடும்பத்தகராறு காரணமாக ஏற்பட்ட மோதலில் காயமடைந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 மாதக் குழந்தை உட்பட மூவர், திருகோணமலை பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக கடந்த சனிக்கிழமை சேர்க்கப்பட்டனர்.

இந்த சம்பவத்தில் வாளால் வெட்டிய சந்தேக நபரின் குழந்தை உட்பட மாமியார் (வயது 43), மாமனார் ஆகியோரே வெட்டுக்காயங்களுடன் திருகோணமலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தனர்.

மேலும் சந்தேகநபருடைய மாமியாரின் துண்டிக்கப்பட்ட கையைப் பொலிஸார் திருகோணமலை பொது வைத்தியசாலையில் ஒப்படைத்தனர். ஆனாலும் அந்த கையை சத்திரசிகிச்சை ஊடாக பொருத்த முடியாமல் போயுள்ளதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இந்த சம்பவத்தில் வெட்டுக் காயங்களுடன் மீட்கப்பட்ட 6 மாதக் குழந்தை, சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது.

குறித்த குழந்தையின் சடலம் திருகோணமலை பொது வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தலைமறைவாகியுள்ள சந்தேகநபரைத் தேடும் தீவிரப் பணியை சீனக் குடா பொலிஸார் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அரசின் எரிபொருள்மீதான விலை அதிகரிப்பு வாகனம் இல்லாதவர்களையே தாக்குகிறது

## மூதூர் பிரதேசசபை உப தவிசாளர் ஆதங்கம்

எரிபொருள்கள் மீதான விலை அதிகரிப்பு பெரும்பாலான பொருள்களின் விலை அதிகரிப்புக்குக் காரணமாக அமைகின்றது. குறிப்பாக அத்தியாவசியப் பொருள்கள் அனைத்தினது விலையும் எவ்விதமான அறிவித்தலுமின்றி இரகசியமான முறையில் அதிகரிக்கப்பட்டு வருகின்றன. இதனால் வறுமைக் கோட்டின்கீழ் வாழும் மக்களே அதிகம் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். கொரோனா தாக்கத்தின் காரணமாக ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியில் இருந்து மக்கள் இன்னமும் மீளாத நிலையில் மீண்டும் இன்னுமொரு நெருக்கடிக்குள் மக்களை அரசு தள்ளியுள்ளது. இதனால் நாளாந்தம் உழைத்து தமது ஜீவனோபாயத்தை கொண்டு செல்கின்ற மக்கள் பாரிய சவால்களுக்கு முகம்கொடுத்து வருகின்றார்கள்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் மூதூர் பிரதேசசபை உப தவிசாளர் சி.துரைநாயகம்.

எரிபொருள் விலை அதிகரிப்பு தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு அனுப்பிய ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

எரிபொருள்களின் விலை அதிகரிப்புக்கு முகங்கொடுக்கும் முகமாக தனியார் வாகனங்களின் பாவனையை குறைத்துக் கொள்ளுமாறு வலுசக்தி அமைச்சர் கூறுகின்றமை நியாயமற்றதாகும். எரிபொருள்களின் மீதான விலை அதிகரிப்பு வாகனம் வைத்திருப்பவர்களைவிட வாகனம் இல்லாத ஏழை மக்கள்மீதே அதிக தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை அமைச்சர் உணர வேண்டும். இதனால் பெரும்பாலான ஏழைகள் மூன்றுநேர உணவைத் தவிர்த்து இரண்டு நேரமாக்கி சமாளித்து வருகின்றார்கள் என்பதையும் அமைச்சர் தெரிந்து கொள்ள வேண்டும்.

அத்துடன் அரசின் பணத்தில் சொகுசு வாழ்க்கை வாழ்பவர்களுக்கு இதன் வலிகள் தெரிவதற்கு வாய்ப்பில்லை. எனவே எரிபொருள்களின் மீதான விலையில் குறைப்பை மேற்கொண்டு அத்தியாவசிய பொருள்களின் விலையினையும் குறைத்து வறுமைக் கோட்டின்கீழ் வாழும் மக்களை பட்டினிச்சாவில் இருந்து அரசாங்கம் பாதுகாக்க வேண்டும்.

- என்றுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பாரதம் பக்கமே நாம்!

*"வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்*
*துணைவலியும் தூக்கிச் செயல்"*
– என்றார் வள்ளுவப் பெருந்தகை.

தனது எதிர்கால அரசியலுக்கு – தனது இனத்தின் இருப்புக்கு – போராடிக் கொண்டிருக்கும் தமிழினம் செந்நாப்போதகன், தமிழ் மறை தந்த வள்ளுவனின் இந்த வழிகாட்டலில் தன்னை சுயபரி சோதனை செய்து கொண்டு தன்வழியைத் தீர்மானிக்க வேண்டும்.

தான் செய்யப் போகும் செயலின் வலிமை, அதைச்செய்வதற் குத் தனக்குள்ள வலிமை, பகைவரின் வலிமை, இரு சாரருக் கும் துணையாக இருப்போரின் வலிமை ஆகியவற்றை சரியாகக் கணக்கிட்டு அறிந்து கொண்டுதான் அச்செயலில் இறங்க வேண் டும் என்பதுவே இந்தக் குறள்பா மூலம் தமிழ்க் கிழவன் நமக்குப் போதிக்கும் ஆலோசனை.

தமிழினத்துக்கு இன்று இது முக்கிய வழிகாட்டல்.

இலங்கைத் தமிழர்களின் விடுதலைப் போராட்டம் – உரிமைக் கான யுத்தம் – ஏழு தசாப்த கால நீட்சி கொண்டது.

அஹிம்சை வழியிலான அறவழிப் போராட்டமாகவும், ஆயுதம் தாங்கிய மற வழிப் போராட்டமாகவும் அது தொடர்ந்துள்ளது.

முதல் முப்பது ஆண்டுகள் காந்தீய வழியிலான அறவழிப் போர். அடுத்த மூன்று தசாப்தங்கள் ஆயுதப்போர்.

இரண்டும் முடிவுற்று கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக போரா டவும் முடியாமல், உரிமைக்காகக் குரல் எழுப்பவும் முடியாமல், தமி ழினம் தன் தாயகத்தில் சுருண்டு கிடக்கும் நிலைமை. இருப்பே இனி இலையோ எனப் பரிதவிக்கும் இக்கட்டு.

இச்சமயத்தில்தான் வள்ளுவப் பெருந்தகையின் இந்த வழிகாட் டுதலைக் கவனத்தில் எடுக்க வேண்டியவர்களாகிறோம் நாம்.

அகப்பலமாக எமது இனத்திற்கு உள்ளேயே உருவெடுத்த விடு தலைப் புலிகளின் பரிணாம வளர்ச்சி – விஸ்வரூப எழுச்சி – இன்று அடியோடு அடக்கப்பட்டு விட்டது. எதிரி தனித்து இதனை அடக்க வில்லை. உலக நாடுகள் பலவற்றைத் துணை சேர்த்ததால் இது அவனுக்குச் சாத்தியமாயிற்று. தன்வலியும், மாற்றான் வலியும், துணை வலியும் தூக்கிக் கணக்கிட்டு, காய் நகர்த்தி, அவன் நம்மை வீழ்த்தியுள்ளான் என்பது தெளிவு.

இனி நாம் என்ன செய்யப் போகின்றோம் என்பதுதான் கேள்வி.

ஏற்கனவே இப்பத்தியில் சில தடவைகள் நாம் சுட்டிக்காட்டியமை போல எம்மிடம் சுயபலமாக எஞ்சியிருக்கக் கூடிய ஜனநாயகப் பலம் என்பது, இலங்கையில் வியாபித்து நிற்கும் சிங்கள, பௌத்த பேரினவாதத்தின் ஜனநாயகப் பலத்துக்கு முன்னால் நின்று பிடிக் கக் கூடிய தகைமை கொண்டதல்ல.

ஆகையினால், நம்மைக் காப்பதற்கு, நமது இலக்கை அடைவ தற்கு, புறப் பலத்தில் மட்டுமே தங்கியிருக்க வேண்டிய கட்டாயம் நமக்கு.

அந்தப் புறப்பலத்தை தந்திரோபாயமாக – மதிநுட்பத்துடன் – கையாண்டு, நமக்கு அணிகலனாக்கிக் கொள்வது நமது திறமை யில்தான் தங்கியுள்ளது.

இன்றைய நிலையில் எமக்குக் கிட்டியிருக்கும் ஒரே புறப்பலம் சர்வதேச ஆதரவு என்ற ஒன்று மட்டுமே.

அதுவும், நமது இலங்கை அமைந்திருக்கும் பூகோளச் சூழமை வில், எமது பிராந்திய வல்லாதிக்க நாடான இந்தியாவின் பங்களிப்பு இதில் மிக முக்கியமானது.

இந்தியாவின் தலையீடு – பங்களிப்பு – என்பது எமது உரிமைப் போராட்டத்தில் தவிர்க்க முடியாத ஒரு வரலாற்று நியதியாகப் பிணைக் கப்பட்டிருக்கின்றது. அதிலிருந்து உதறி நாம் வெளியேறுவது இய லாத விவகாரம் என்பதைப் பட்டறிவாக – அனுபவப் பாடமாக – நாம் கண்டறிந்திருக்கின்றோம். எமது விருப்பு, வெறுப்புக்கு அப்பால் கட்டாயக் கோலமாக இந்தப் பிணைப்பு இருக்கப்பட்டிருக்கின்றது.

சர்வதேசப் பரிமாணங்களுடன் பிறந்திருக்கின்ற புதிய உலக சூழலில் – புதிய உலக ஒழுங்கில் – சர்வதேசத்தினதும், இந்தியாவி னதும் அனுசரணைப் பக்கபலத்துடன் எமது உரிமைப் போராட் டத்தை முன் நகர்த்திச் செல்வதே நாம் இன்று கைக் கொள்ளக் கூடிய உசிதமான வழியாகும்.

வள்ளுவப் பெருந்தகை கூறுவதுபோல மாற்றான் வலியையும், அவனின் துணை வலியையும் கூட நாம் எடை போட வேண்டும்.

அப்படி எடை போடும் போது மாற்றானுடன் அணி வகுத்து நிற்கும் சீனத்தின் பலம் அதில் முக்கியமாக வரும்.

என்ன தந்திரோபாயத்தை நாம் பிரயோகித்தாலும் மாற்றான் பக்கம் நிற்கும் சீனம், நம் பக்கம் வருவதற்கான சாத்தியக் கூறுகள் கிஞ்சித்தும் இல்லை என்பதையும் –

நம்முடன் முரண்பட்டு, முட்டுப்பட்டு நின்றாலும் நமது தொப்புள் கொடி உறவுகளான தமிழகத்தையும் உள்ளடக்கிய பாரதம் நம்மை விட்டுத் தூர விலக முடியாது என்பதையும் –

நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். இந்தியாவையும், சீனாவையும் ஒன்றாக – ஒரே மாதிரி – தமிழர் தரப்புக் கருதி, அணுக வேண்டும் என்ற ஒரு பிரசாரம் தமிழர் தரப்புக்குள் இருந்து இப் போது முகிழ்ந்திருப்பதாகத் தெரிகின்றது.

இது ஆபத்தான அணுகுமுறை. பாரதம் நம்மை அரவணைத் தாலும் உதாசீனம் செய்தாலும் அதுதான் நமது பிரிக்க முடியாத பங்காளி. அதனுடன் நிற்பது மட்டுமே தமிழருக்கு ஒரே வழி. மார்க் கம். சீனத்துடன் அல்ல.

# சாரா உயிருடன் இல்லையாம் வீரசேகர அடித்துக் கூறுகிறார்



உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்கு தலுடன்சம்பந்தப்பட்ட ஒருவரின்மனைவியான இந்தியாவிற்குதப்பிச்சென்றார்எனக்கூறப்படும் சாரா என்கிற புலஸ்தினி உயிரோடு இருப்பதற் கான சாட்சியங்கள் இல்லை எனத் தெரிவிக் கப்படுகின்றது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும், குண்டுதாரிகள் புலனாய்வுப் பிரி வினருடன் தொடர்பு வைத்திருந்தனர் என வெளியாகும் தகவலை நிரூபிக்கவும் சாட்சிகள் இல்லை. இவை வெறும் வதந்திகளே.

சாரா உயிர்வாழ்கிறார் எனக் கூறப்படும் சாட்சிகள் அனைத்தும் ஒன்றுக்கொன்று முரண்பாடானவை. இரண்டு தடவைகள் டி.என்.ஏ. பரிசோதனை செய்யப்பட்டுள்ளது.

மூன்றாவது தடவையும் முன்னெடுக்க நீதி மன்றிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது.

குண்டுதாரியின் மனைவியான காதி யாவிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் இதில் தொடர்பு பட்டுள்ளனர் எனக் கூறப்படும் குற்றச்சாட்டை நிரூபிக்க சாட்சிகள் எதுவும் இல்லை.

சந்தேகநபர்களை மறைக்க வேண்டிய அவசியம் இந்த அரசாங்கத்துக்கு இல்லை என அமைச்சர் சரத் வீரசேகர தொடர்ந்தும் குறிப்பிட்டுள்ளார்.

# வவுனியாவில் தபால் மூலம் வீடுகளுக்கு மருந்துப் பொருள்கள் விநியோகம்

வவுனியா மாவட்ட பொது வைத்தி யசாலையில் கிளினிக் சிகிச்சை சேவை பெறும் நோயாளிகளுக்கான மருந்துகள் தபால் மூலம் அனுப்பி வைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளன என வைத்தியசாலையின் பணிப்பாளர் க.ராகுலன் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலை கிளினிக்வைத்தியசேவைபெறும்நோயாளர்கள் தற்போது நாட்டில் நிலவும் அதிகரித்த கொவிட் தொற்றுத் தாக்கத்தின் காரணமாக பொது மக்களை நோய் தொற்றிலிருந்து பாதுகாக்கும் முகமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனவே வவுனியா மாவட்ட வைத்தி யசாலையின் கிளினிக் பிரிவில் வைத்திய சேவை பெறும் நோயாளர்கள் தமக்குரிய மருந்துப் பொருள்களை 074 010 4936 மற்றும் 076 100 1936 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்வதன் மூலம் தபால் மூலம் வீடுகளில் இருந்தவாறு தமக் குரிய மருந்துகளைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் வைத்தியசாலையின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

# சர்வாதிகாரத்தை நோக்கி நகர்கின்றது எமது நாடு

## இம்ரான் எம்.பி. காட்டம்



ஏறாவூர் பொதுமக்கள் வீதியில் முழங்காலில் நிற்க வைக்கப்பட்ட சம்பவம் நாடு சர்வாதி காரத்தை நோக்கிப் போகின்றமையை எடுத்துக்காட்டுகின்றது என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு–

ஏறாவூரில் தமது அத்தியாவசியத் தேவை களை நிறைவேற்றுவற்காக வீதிக்கு வந்த சில பொது மக்களை பாதுகாப்புக் கடமையில் இருந் தவர்கள் வீதியில் இருகைகளையும் உயர்த்தி முழங்காலில் நிற்க வைக்கப்பட்ட சம்பவம் தொடர்பான படங்கள் சமூக வலைத் தளங்களிலும், ஊடகங்களிலும் வெளிவந்துள் ளன.

இந்த நாடு ஜனநாயக நாடு. சட்டவாட்சி அமுலில் உள்ள நாடு. எனவே, எல்லாவற் றையும் சட்டரீதியாகவே அணுக வேண்டும். அதுவும் சட்டத்தின் முன் யாவரும் சமன் என்ற அரசமைப்பு வாசகத்துக்கமைய எல்லோ ருக்கும் சட்டம் அமுல்படுத்த வேண்டும். சட்டம் பாரபட்சமாக அமுல்படுத்தப்படக்கூடாது என்பதையே இந்த வாசகம் எடுத்துக்காட்டு கின்றது.

ஏறாவூர் சம்பவம் சட்டத்துக்கு புறம்பானது மனிதாபிமானமற்றது. ஒவ்வொருவருக்கும் சுய கௌரவம் உள்ளது. வீதியில் முழங்காலில் நிற்க வைக்கப்பட்ட இந்தச் சம்பவம் அவர்களது சுயகௌரவத்தைக் கொச்சைப்படுத்துகின்றது.

பயணத்தடை அமுலில் இருப்பதாக சொல் லப்பட்டாலும் நாடு முழுவதும் நாளாந்தம் பல்லாயிரக்கணக்கான வாகனங்கள் வீதி களில் நடமாடுகின்றன அதேபோல பல்லாயி ரக்கணக்கான பொதுமக்களும் வீதிகளில் பயணிப்பதை நாம் காண்கிறோம்.

இந்நிலையில் ஏறாவூரில் தமது அன்றாடத் தேவையை நிறைவேற்ற வந்த பொதுமக் களை மட்டும் வதைக்கின்ற செயல் நாட்டில் நியாயமான சட்டவாட்சி இல்லை என்பதை உறுதிப்படுத்துகின்றது.

சட்டம் பொதுவாக எல்லோருக்கும் தான் அமுல்படுத்தப்பட வேண்டும் ஆனால் இந்த நாட்டில் சட்டம் பாரபட்சமாக அமுல்படுத்தப் படுவதை இச்சம்பவம் எடுத்துக் காட்டுகின் றது.

நாட்டில் நீதிமன்றக் கட்டமைப்பு மிகத் தெளிவாக செயற்படுகின்ற நிலையில் சட்டத்தை தமது கையில் எடுத்து தண்டனை வழங்கும் அதிகாரத்தை இந்த அரசு காவல் கடமைகளில் ஈடுபட்டவர்களுக்கு வழங்கியுள்ளமையையே இது எடுத்துக் காட்டுகின்றது.

அரசின் பக்கச்சார்பான இந்தச் சர்வாதி காரப் போக்குத் தொடர்பாக அனைவரும் கவனம் செலுத்த வேண்டும். இந்த அப்பாவி மக்கள் இவ்வாறு வீதியில் தண்டிக்கப்பட்ட போதும் கூட 20 முதல் அரசுக்கு புதிதாக ஆதரவு தெரிவித்து வருகின்றவர்கள் இது தொடர்பாகமௌனம்சாதிக்கின்றமை தொடர்பாக நான் மிகவும் கவலையடைகிறேன்.

அவர்களுக்கு இந்த மக்கள் மீது உண்மை யான அன்பு இருக்குமாயின் சட்டத்துக்குப் புறம்பாக இந்த நடவடிக்கையில் ஈடுபட்ட வர்களுக்கெதிராக நடவடிக்கை எடுக்க அவர்கள் முன்வர வேண்டும் என்று அவர் தெரிவித்துள் ளார்.




இந்த கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்தில் வீட்டில் மூழ்கிக் கிடக்கும் உங்களுக்கு அறிவைத் தூண்டும் ஒரு பொது அறிவுப் பரீட்சையை அறிமுகம் செய்கின்றோம்.
தினமும் பத்துக் கேள்விகள் இப்பகுதியில் இடம் பெறும்.அன்றன்று கேள்விக்குரிய உங்கள் பதில்களைத் தேடிக் கண்டுபிடித்து தயார் செய்யுங்கள்....
அதனை அடுத்த நாள் காலை 8 மணிக்கு முதல் **Kalaikkathiredu@gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரி மூலம் எங்களுக்கு அனுப்பி வையுங்கள்.
கேள்வி பிரசுரமாகி இரண்டாவது நாளில் அக் கேள்விக்குரிய விடைகளும், சரியாக விடையளித்த பத்துப் பேரின் விவரங்களும் பிரசுரமாகும்.
தொடரின் முடிவில் அதிக எண்ணிக்கையான தடவைகள் சரியான பதிலை அனுப்பியவர்களுக்கு தகுந்த பரிசில்கள் காத்திருக்கின்றன.
உங்கள் பதிலை அனுப்பும்போது உங்கள் பெயர், முகவரி, அடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றை குறிப்பிடத்தவறாதீர்கள்.

தொகுப்பு:-
எஸ். வனோஜா

## 27ஆவது போட்டிக்குள் நுழைவோமா?

**261.உலகின் அனைத்துப் பகுதிகளிலும் முதலாவது யோகா தினம் எப்போது கொண்டாடப்பட்டது?**

**262.உலகில் எத்தனை நாடுகளில் யோகா தினம் கொண்டாடப்படுகிறது?**

**263.‘டெல்டா’ வைரஸ் எந்த நாட்டில் முதன் முதலில் கண்டறியப்பட்டது?**

**264.இலங்கையின் முதலாவது பிரதமர் யார்?**

**265. இலங்கையில் உயர்ந்த நீர்வீழ்ச்சி எது?**

**266. இலங்கை கிரிக்கெட் அணி சர்வதேச உலகக் கோப்பையை கைப்பற்றிய போது அணியின் தலைவர் யார்?**

**267. அதிக டெஸ்ட் போட்டிகளுக்கு தலைமை தாங்கிய தலைவர் யார்?**

**268.மனிதக் காதின் கேள்தகு வீச்சு யாது?**

**269.W.W.W. இன் விரிவாக்கம் யாது?**

**270. கணணியின் மூளை என அழைக்கப்படுவது எது?**

பெயர் :- ..................................................... அடையாள அட்டை:- ................................
முகவரி :- ..................................................... மின்னஞ்சல் முகவரி:- ................................
தொலைபேசி இலக்கம்:- ...........................

## 25ஆவது போட்டிக்குரிய பதில்கள்

**241. டொக்டர்-மரியாமாண்டிசோரி**
**242. பொட்ஸ்வானா**
**243. நீளம்,திணிவு,நேரம்,மின்னோட்டம்,வெப்பநிலை, பதார்த்தத்தின் அளவு,ஒளிச்செறிவு மட்டம்**
**244. 7**
**245. முதலாவது**
**246. C.W.W.கன்னங்கரா**
**247. 1658-1796**
**248. O ⁻**
**249.3 $\sqrt{2}$ அலகுகள்**
**250.2020.பெப்ரவரி 28**

## 19ஆம் திகதி வெளியான 25ஆவது போட்டிக்கு சரியான விடையளித்தோர் விவரம்

1. ஐ. கார்த்திகன் (9சரி)
2. ஆ.கா.ஸ்ரீதரன் - கொழும்பு (08 சரி)
3. வை. அபிமாறன் - கரவெட்டி (7சரி)
4. செ.ஸ்ரீஇராமச்சந்திரன் - வத்திராயன் (07 சரி)
5. கே. அனுஷன் - ஏழாலை (06 சரி)

## ஜனாதிபதி கோட்டாவுக்கு நேற்று பிறந்தநாள் சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபுசர்மா ஆசி

கொழும்பு, ஜூன் 21

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் 72 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு இந்துமத பீடம் சார்பாக பிரதமரின் இந்துமத விவகாரங்களுக்கான இணைப்பாளர் சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபுசர்மா ஆசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் –

இலங்கை வாழ் மக்கள் அனைவரும் ஒரு தாய் மக்களாக வாழ வேண்டும், அனைத்து மதங்களும் போற்றப்பட வேண்டும் என்ற உயரிய கொள்கையும் சிந்தனையும் கொண்டவர் ஜனாதிபதி.



நாட்டின் வளர்ச்சிக்கான ஜனாதிபதியின் சேவைகளுக்கு இறைவன் அருள வேண்டுமென ஆசிகளையும் வாழ்த்துகளையும் இந்து மத பீடம் சார்பாக தெரிவித்துக்கொள்கின்றேன் – எனத் தெரிவித்துள்ளார்.

## இரண்டாவது டோஸ் தடுப்பூசி போட்ட பலருக்குத் தொற்று

குருநாகல் மாநகர சபையின் பிரதேசத்திற்கு அருகில் கடந்த சனிக்கிழமை அடையாளம் காணப்பட்ட கொவிட் தொற்றாளர்களில் பலர் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

அத்தியாவசிய சேவைக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்த அரச ஊழியர்களுக்கு அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசிகள் வழங்கப்பட்டன. அவ்வாறு இரண்டு தடுப்பூசிகளும் பெற்ற நகர ஊழியர்கள் சிலர் கொவிட் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

சனிக்கிழமை அடையாளம் காணப்பட்ட தொற்றாளர்களில் பெரும்பான்மையானோர் குருநாகல் நகர சபையில் பணியாற்றும் ஊழியர்கள் எனத் தெரியவந்துள்ளது. குருநாகல் மாநகர சபை எல்லையில் வாழும் மக்களில் 90 வீதமானோர் முதலாவது தடுப்பூசியைப் பெற்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## கொழும்பில் திரிவுடைந்த வைரஸ்; பாதிக்கப்பட்ட மூவர் குணமடைவு

கொழும்பில் தெமட்டகொட பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்ட டெல்டா வைரஸால் பாதிக்கப்பட்ட ஐவரில் மூவர் குணமடைந்துள்ளனர்.

இருவர் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர் என கொழும்பு மாநகரசபையின் பிரதம மருத்துவ அதிகாரி வைத்தியர் ருவான் விஜயமுனி தெரிவித்துள்ளார்.

அதேவேளை, டெல்டா திரிவுடன் அடையாளம் காணப்பட்ட யாரும் கொரோனாத் தடுப்பூசியை செலுத்திக் கொண்டவர்கள் அல்லர். எனவே பொதுமக்கள் கொவிட் தடுப்பூசியை பெற்றுக் கொள்வதை புறக்கணிக்க வேண்டாம் எனத் தெரிவித்துள்ளார்.

இந்திய கொவிட் திரிவான டெல்டா திரிவுடன் தெமட்டகொடை பகுதியில் 5 பேர் அடையாளம் காணப்பட்டமையை அடுத்து குறித்த பகுதியில் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## டெல்டா வகை கொரோனா தொற்று கண்டறிய விசேட பரிசோதனைகள்

இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் டெல்டா வகை கொரோனா வைரஸ் தொற்று பரவியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளதாக ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நோய் எதிர்ப்பியல் மற்றும் மூலக்கூறு மருத்துவ திணைக்களத்தின் பணிப்பாளர் கலாநிதி சந்திம ஜீவந்திர தெரிவித்துள்ளார்.

இதனால் எதிர்வரும் வாரங்களில் நாடு முழுவதும் விசேட பரிசோதனை நடவடிக்கையை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளோம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவில் கண்டறியப்பட்ட டெல்டா வகை கொரோனா வைரஸ், முதல் முதலாக கொழும்பிலேயே கண்டறியப்பட்டிருந்தது.

இதேவேளை இதுவரை காலமும் பரிசோதனைக்கு பயன்படுத்திய கருவிகளுக்கு மாறாக, ஒக்ஸ்போர்ட் நனோ தொழிநுட்பத்தை முதன் முறையாக பயன்படுத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தள மாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங் காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில் மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அங்கம் 42



# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**133. குற்றச்சாட்டுக்கு இலக்காகித் தண்டிக்கப்பட வேண்டிய இரு போராளிகளை கிட்டு நாசூக்காக விடுவித்த இந்தச் சம்பவத்தை பற்றி ஏன் சொல்வதற்கு விளைகிறீர்கள்?**

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் சொல்லும் என்பார்கள். நாட்டிலும் வெளியிலும் ஒரே வடிவான இராணுவக் கட்டுப்பாட்டை – விடுதலை என்பதற்காக, அந்த இலட்சியம் மக்களுக்கு இருந்தாலும், அதனை திணிக்க முயன்றால் – சர்வதேச மக்களின் பார்வை எப்படி இருக்கும், இருந்தது என்பதை புரிந்து கொள்வதற்காகவே இதனை எடுத்தேன்.

83, 84 இல் இளைஞர்கள் ஏதோ ஓர் இயக்கத்தில் சேருவதற்கென சுயவிருப்போடு பெற்றோருக்கு கடிதங்கள் எழுதிவைத்து விட்டுப் புறப்பட்ட காலங்கள். பல உணர்ச்சியில் தோய்ந்த மடல்கள்.

86 காலங்களில் – முக்கியமாக ரெலோ, ஈ.பி.எல். ஆர்.எல். எவ்.,புளொட் போன்ற அமைப்புக்களை விடுதலைப் புலிகள் தடை செய்து, வேட்டையாடி அழித்த போதும் – முக்கியமாக அது நடந்த முறையிலும் – மக்கள் செய்வதற்கு வழியேதுமின்றி வாய்மூடி நின்றனர். ஆயுதங்கள் பேசின. இவற்றால் இளைஞர்கள் துவண்டு இது விடுதலையா, வெறியா என்று திக்கு முக்காடினார்கள். அவற்றைத் தொடர்ந்து விடுதலைக்காக வீட்டுக்கு ஒரு பிள்ளை வர வேண்டும் என்று கோரி, பின் அது கண்டிமைப்படுத்தப்பட்டு வீட்டுக்கோ, மறைவிடங்களுக்கோ சென்று பலவந்தமாகக் கூட்டிச் சென்றமை எல்லாம் அரங்கேறின. இவற்றுக்குப் பயந்து தம் பிள்ளைகளை லட்சங்கள் செலவழித்து வெளிநாடுகளுக்கு,எங்கெல்லாமோ அனுப்பியதும் நடந்தது. அது மாத்திரமல்ல. பெண் குழந்தையானால் திருமணம் கூட நடத்தி, அது காரணமாக்கப்பட்டு ஆட்சேர்ப்பு தவிர்க்கப்பட்டது. மனித உரிமையாளர் மத்தியிலே இப்படியான ஆட்சேர்ப்பு முறைகளும், வயது குறைந்த இளைஞர்கள் ஆயுதப் பயிற்சிக்கு உட்படுத்தப்படுவதும், விருப்பமில்லாத திணிப்புக்களும் பலத்த கண்டனத்துக்கு உள்ளாக்கின. அது பற்றி பல அறிக்கைகள்,தீர்மானங்கள்,கட்டுரைகள் சர்வதேச ரீதியில் பலம் வாய்ந்த மனித உரிமைகள் அமைப்புக்களிடமிருந்து வந்தாலும் தூரநோக்கில் அதன் பாதிப்பை உணர்ந்தவர்களாகவில்லை.

விடுதலை எல்லாவற்றையும் நியாயப்படுத்தியது என்றும் அவர்கள் விரும்பியே – பெற்றோர் ஏற்றுக் கொண்டே – வருகிறார்கள் என்றும் தெரிவிக்கும் பிரச்சாரங்களே அவர்களது ஊடகங்களில் வெளிவந்தன.

இதனைப்பற்றிய பேச்சுக்களும் இதனை கிட்டுவுடன் அவர் சார்ந்த இந்த சம்பவத்தை எடுத்தேன். அவர்களோடு ஆதரவாக இயங்கிய புத்திஜீவிகள் கூட இவற்றைப் பொது வெளியில் கண்டிக்காது ஏனோ தானோ என்று விடுதலைக் குடையின் கீழே ஏதோ சாக்கு போக்கு சொல்லி தொடர்ந்த போராட்டத்தில் இவை இளைஞர்களின் – மக்களின் – பங்கு என்ற வாதத்தை கட்டி எழுப்பினர்.



**134. இவருக்கு நடந்ததென்ன?**

ஆஸ்திரேலிய அமைப்பினரோடு கிட்டு பேசிய போது இயக்கத்திற்கு முழுமையாக இயங்க கூடிய விசுவாசிகள், முழுநேரமும் பங்குபற்ற முடியாமலிருப்பவர்கள், அகதி அந்தஸ்து கேட்டு வாழ்பவர்கள், தமது வாழ்க்கைக்காக உழைக்கும் தேவையினால் முழுநேரமும் இவற்றில் ஈடுபடமுடியாமை பற்றி பேச்செழுந்தது.

அவ்வேளையில் அவர் தனக்கு தெரிந்த இந்த இளைஞர் ஆஸ்திரேலியாவில் இருக்கிறார் என அறிகிறேன். அவரைத் தொடர்பு கொண்டால் தான் பேசுகிறேன் எனக் கூறும்படி தெரிவித்ததனால் இவரை இங்கிருந்தவர்கள் கண்டு கொண்டனர்.

அவரை அணுகி அவர் இயக்கத்திற்கு மாறாக நடக்கிறார் எனக் கிட்டு சொல்கிறார் எனவும், அவர் சேர்ந்து உதவிகள் செய்யாவிட்டால் நாட்டிலே அவரது பெற்றோர்களைத் தண்டிப்பது கஷ்டமல்ல என்று கூறி அவரது விருப்பமின்றி இழுக்கப்பட்டார்.

அந்தச் சமயம் அவர் தனது காதலியையும் இங்கு அழைத்துத் திருமணம் செய்து, குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டு, தானும் தன்பாடும் என்றிருந்தவர். கூட்டிச் சென்றவர்கள் இயக்க ஈடுபாடில்லாமல் ஒளிந்திருந்ததிற்குத் தண்டனையாக இங்குள்ள கோவில் வாசலில் முன் நின்று நான்கு, ஐந்து வாரங்கள் பிரச்சாரத் துண்டுப் பிரசுரங்களும் கலண்டர்களும் விநி யோகிக்க வேண்டும் என்றும், பின் படிப்படி யாக வேறு உதவிகளில் ஈடுபடலாம் என்றும் பணித்தனர். அவருக்கு பயங்கர உள்ளக் குமுறல். ஆனால் பெற்றோரை எண்ணி செய்ய வேண்டிய நிர்பந்தம். இவர் கோவில் முன்றிலில் நிற்கின்றார் என்று செய்தியில் பல சுவாரசியமான வியாக்கியானங்கள். ஒதுங்கியிருந்த பழைய இயக்ககாரருக்கும் யோசனை. என்னை கண்டு தனது ஆதங்கத்தைச் சொல்லி இங்குள்ள அமைப்பாளரிடம் பேசித் தன்னைக் கோவில் முன் விடாது வேறு வித உதவிகள் செய்ய வேண்டும்படி கோரினார்.



இங்குள்ள அமைப்பாளர்களை நான் அறிந்திருந்தேன். அவர்களுடன் கருத்து வேற்றுமைகளிலிருந்தாலும் அவர்கள் என் மீது மரியாதையும் நட்பும் கொண்டவர்கள். ஆனால் யாரிடமும் பேசினாலும் ஒருவர் ஒருவரிடம் சொல்லிப் பார்க்கிறோம் என்பார்கள், பின் மண்ணிலிருந்து வந்த உத்தரவு என சொல்லப்படும் என்ற அறிவு எனக்கிருந்தது.




ஆகவே தமிழர் தகவல் நிலையத்தில் எனது நண்பர் வரதகுமாருடன் பேசி கட்டாய ஆட்சேர்ப்பினால் வரும் சர்வதேச தாக்கங்களையும் கிட்டு உணர்ந்து கொள்ள வேண்டும் என கூறி வைத்தேன். அவர் இப்படியான சின்னத்தனமான செய்கைகள்தான் தங்களது அதிகாரத்தை நிலைப்படுத்த சேர்ந்து இயங்குவோர் செய்கின்றனர் எனவும் பல பிரச்சினைகள் கிட்டுவுக்கே அவற்றால் உண்டு எனவும் சொன்னார்.

(வளரும்...)

# மெய்நிகர் வகுப்பறை 25

## Online Classroom


ஜனனீ தேவானந்த்
(முதுநிலை விரிவுரையாளர் -
(தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)




மெய்நிகர் வகுப்பறைகளை முன்னெடுப்பதில் சூம் தன்னை உலகெங்கும் நிலைநிறுத்தி வருகின்றது. இதற்கு நிகராக வேறு மெய்நிகர் கற்றல் தளங்கள் இல்லையா என்ற கேள்வி உண்டு. சூம் தற்போது பல்கலைக்கழகங்கள் மற்றும் பள்ளிகளுக்கான கல்வித் திட்டங்களைக் கொண்டுள்ளது, சிறந்த கற்றலுக்கான வகுப்பறைகள் மற்றும் நிர்வாகக் கூட்டங்கள், வணிகம் போன்றவற்றுக்கான சிறந்த சேவையை வழுங்கிவருகின்றது.

சூம் தவிர, ஒன்லைன் வகுப்புகளுக்கு ஏராளமான மாற்று வழிகள் உள்ளன என்பது உங்களுக்குத் தெரியுமா? ஒன்லைன் பாடங்களை நடத்துவதற்கு ஆசிரியர்கள் எதிர்நோக்கும் சவால்களைப்பற்றி சென்ற தொடர்களில் பார்த்தோம். அதில் சூம் கட்டணச்சேவை அதிக செலவு மிக்கது என்ற கருத்து நிலை காணப்படுகின்றது. இதனால் பல தனியார் கல்வி ஆசிரியர்கள் தமது வகுப்புக்களை இலவச சூம் வசதியைப்பயன்படுத்தி மேற்கொள்கிறார்கள். இதனால் நாற்பது நிமிடங்களுடன் பாடத்தை நிறுத்தி மீண்டும் இணைப்பை ஏற்படுத்துமாறு மாணவர்களுக்கு அறிவுறுத்த வேண்டியுள்ளது. இது கற்றலில் ஓர் இடையூறாக காணப்படுகின்றது. அத்தகைய ஒரு சூழலில் ஒன்லைன் தளங்கள் வழியாக கற்பிக்கும் போது தொழில்நுட்ப சிரமம், தொழில்நுட்ப சிக்கல்கள் வகுப்புகளை இடையூறு செய்கின்றன. இதனால் தகவல்தொடர்பு முறிவு மற்றும் பாடம் ஓட்டத்திற்கு இடையூறு ஏற்படுகிறது. சில ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஒன்லைன் வகுப்புகளை சிறப்பாகக் கையாள போதுமான டிஜிட்டல் கல்வியறிவைக் கொண்டிருக்கவில்லை, எனவே இப்போது மேலும் எளிதான இலவசமான அல்லது மலிவான கற்றல் தளங்களைத் தேட ஆரம்பிக்கிறார்கள். எதிர்காலத்தில் வழமையாக எல்லா வணியகத் தளங்களும் செய்வது போன்று சூமின் இலவச வசதிகள் எதிர்காலத்தில் மறுக்கப்படலாம். இதனால் மாற்றுவழிகள் பற்றிய சிந்தனை தேவையாகவுள்ளது. எளிதான ஒன்லைன் தளங்கள் அவர்களுக்கு உதவியாக இருக்கும்.

வெவ்வேறுஒன்லைன் வகுப்புகள் இயங்கு தளங்கள் கல்வியாளர்களிடம் உள்ள குறிப்பிட்ட தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு, மாணவர்களுக்கு சிறந்த கற்றல் சூழலையும் உருவாக்க முடியும். இதற்கு சிறந்ததாக குறிப்பிடப்படுவது கிட்டத்தட்ட சூம் வசதிகளுக்கு இணையானது சூம் சலுகைகளை மிக நெருக்கமாக பொருந்தக்கூடிய இந்த மாற்றுகளில் ஒன்றைத் தேர்வுசெய்வதானால், அது டெமியோவாக இருக்கலாம், இது மிகவும் நல்ல பயனர் இடைமுகத்தையும் கொண்டுள்ளது. உண்மையில் சூம் விட மிகவும் சிறந்த வசதிகளைக்



கொண்டுள்ளது.

கொரோனாப் பெரும் தொற்றுக்காலத்தில் காணப் பட்ட நிலைமை ஒரு வகை அதிர்ச்சியான, பதற்றமான மெய்நிகர் நுழைவுக்கு எம்மை இட்டுச்சென்றது. இப்போது பதற்றம் குறைந்து ஒரு நிலைத்த தன்மையை நோக்கி உலகம் நகர்கிறது. சீரோட்டமான, நிலையான தன்மையை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கின்ற இந்தக்காலகட்டத்தில் மெய்நிகர் வகுப்பறைகளுக்கான மாற்று வழிகளைத் தேடத் தொடங்க வேண்டிய நேரம் வந்துவிட்டது. தனிமுதன்மையான ஏகபோகநிலைமைகளை தாண்டி பலவை மாற்றுக்களுக்கான வாய்ப்புக்கள் உள்ளன.

மெய்நிகர் கற்பித்தல் தளத்தில் அந்த உலகிற்கு நீங்கள் உண்மையிலேயே நிலைத்திருக்க விரும்பினால் தொடர்ச்சியாக மாறிவரும் தொழில்நுட்பத்தை அவதானிக்க வேண்டியுள்ளது.

இன்று மெய்நிகர் வகுப்புகளை கற்பிப்பதற்கான சூமிற்கான சிறந்த மாற்றுகளில் டெமியோவும் ஒன்றாகும். வேறு சில வெபினார் தளங்கள் சந்தைப் போட்டியில் பின்தள்ளப்பட, அதாவது மெல்லக் காலாவதியாகிவரும் நிலையில், டெமியோ நவீன மற்றும் புதுப்பித்த நிலையில் உள்ளது. டெமியோ நிறைய நெகிழ்வுத்தன்மையை வழுங்குகிறது. குறிப்பாக மாணவர்களுக்கு நேரடி மற்றும் முன்பே பதிவுசெய்யப்பட்ட வெபினார்கள் கிடைக்கச் செய்யலாம். எனவே, ஓர் ஆசிரியரின் நேரடி வகுப்பை யாராவது தவறவிட்டால், திரும்பிச் சென்று பின்னர் பார்க்கும் விருப்பத்தை அவர்களுக்கு வழுங்கலாம். இன்னும் மேம்பட்ட அம்சங்களைத் டெமியோ உள்ளடக்கியுள்ளது. அழைப்புக்கு – செயல் பொத்தான்கள், நேரடி வாக்குப்பதிவை இயக்கும் திறன், ஆவணங்களை நேரடியாகப் பகிர்தல், கேள்வி பதில் அமர்வுகள் மற்றும் பலவற்றிற்கான அணுகலைப் பெறலாம். திரைக்குப் பின்னால், உங்கள் வெபினார் எவ்வாறு செயல்படுகிறது என்பதைக் காண டெமியோ ஒரு பகுப்பாய்வு பக்கத்திற்கும் அணுகலை வழுங்குகிறது.

டெமியோ என்பது ஓல் இன் ஒன் வெபினார் தீர்வாகும், இது நேரடி வெபினார்கள், தானியங்கி வெபினார்கள், ஹைப்ரிட் வெபினார்கள் மற்றும் தேவைக்கேற்ப வெபினார்கள் ஆகியவற்றை ஹோஸ்ட் செய்ய உங்களை அனுமதிக்கிறது.

ஆனால், சூம் உங்களை நேரடி வெபினார்கள் மற்றும் உங்கள் நேரடி வெபினார்கள் தேவைக்கேற்ப மறுதொடக்கம் செய்ய மட்டுமே அனுமதிக்கிறது. ஓட்டோ பைலட்டில் வாடிக்கையாளர்களாக மாற்றுவதற்கு தானியங்கி முன்பே பதிவுசெய்யப்பட்ட வெபினார்கள் இயக்க விரும்பினால், நீங்கள் அதை டெமியோ மூலம் செய்யலாம், ஆனால் சூமில் அது முடியாது. மேலும், எந்தவொரு சாதனத்திலிருந்தும் இணைய உலாவியில் ஒரே கிளிக்கில் உங்கள் பங்கேற்பாளர்களை உங்கள் வெபினாரில் சேர டெமியோ அனுமதிக்கிறது. மறுபுறம், சூம் பங்கேற்பாளர்கள் கலந்துகொள்ள சூம் பயன்பாட்டைப் பதிவிறக்கி நிறுவ வேண்டும். வெபினார் அம்சங்களைப் பொறுத்தவரை, டெமியோ அழகாக வடிவமைக்கப்பட்ட பதிவு வார்ப்புருக்களை வழுங்குகிறது, அவை தேவைக்கேற்ப பொருந்தும்படி தனிப்பயனாக்கலாம். உங்கள் வெபினாரில் பதிவு பக்கத்தை உட்பொதிக்கவும் இது உங்களை அனுமதிக்கிறது. ஆனால், சூம் அதை வழுங்காது.

மேலும் விளக்கக்காட்சி ஸ்லைடுகளைப் பதிவேற்ற டெமியோ அனுமதிக்கிறது, அதே நேரத்தில் சூம் டெஸ்க்டாப்பில் இருந்து ஸ்லைடுகளைப் பகிர மட்டுமே அனுமதிக்கும். டெமியோ கையேடுகள் மற்றும் பரிசுகளை அனுப்ப அனுமதிக்கிறது, ஆனால் சூமில் அந்த வசதியில்லை. ஆனால், சூம் பேஸ்புக் லைவ் மற்றும் யூடியூப் லைவ் போன்ற சமூக ஊடக தளங்களுக்கு லைவ் ஸ்ட்ரீம் செய்ய சூம் அனுமதிக்கிறது. எனவே, நீங்கள் பெரிய அளவிலான மாநாடுகள் அல்லது நிகழ்வுகளை மட்டுமே நடத்துகிறீர்கள் என்றால் சூம் வீடியோ வெபினார் உங்களுக்கு சிறந்தது என்று கூறலாம்.

தற்போது மெய்நிகர் வகுப்புக்களுக்கு சூம் தளத்தின் வசதிகளை விட டெமியோ சிறந்த தெரிவாக சுட்டிக்காட்டப்படுகின்றது. வேகமாக மாறிவரும் தொழில்நுட்பத்தில் மேலும் பல மாற்றங்களை எதிர்பார்க்கலாம். மெய்நிகர் வகுப்பறைகள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக மாறிவருகின்றன.

(தொடரும்.....)



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
(மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குனர்,
மெல்பேண், ஆஸ்திரேலியா)

# வாழ்வில் வரமாக வந்த யோகமே யோகா!

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். ஆனால் அதற்காக நாங்கள் எவற்றையெல்லாம் தேர்ந்தெடுத்து இருக்கின்றோம் என்பதை எவருமே கவனத்தில் கொள்ளுவதில்லை. நோய்கள் வந்தவுடன் வைத்தியரை நாடுவோம். அவர் பல மருந்து மாத்திரைகளையெல்லாம் எழுதித் தருவார். அத்துடன் விடவும் மாட்டார். அந்தப் பரிசோதனை, இந்தப் பரிசோதனை என்று சொல்லி அங்குமிங்கும் இருக்கின்ற நோயியல் ஆய்வுகூடங்களுக்கு அனுப்பிப் படாதபாடு படுத்திவிடுவார். பணமும் செலவழிந்து, நோயும் மாறாத நிலையில், என்ன செய்வது என்று அறியாமல், புரியாமல், வேறொரு விசேட வைத்திய நிபுணரைப் பார்ப்பதற்கு ஆயத்தமாகி விடுவோம்.

இதுதான் பலரது வாழ்வில் நிகழும் பரிதாபகரமான சம்பவமாகிவிட்டது. இப்படியெல்லாம் நொந்து, வெந்து, போகாமல் இருப்பதற்கு மிகவும் அருமையான வழி ஒன்றை எமது முன்னோர்கள் ஆக்கி அளித்துச் சென்றுள்ளார்கள். அதுதான் யோகம் தருகின்ற யோகாவாகும்.

சுவர் இருந்தால்த்தான் சித்திரம் வரைய முடியும். அந்தச் சுவரும் இடிந்து விழும் நிலையிலோ உடைசலாய் ஓட்டையாய் இருக்கும் நிலையிலோ அங்கு சித்திரத்தை வரைய முடியுமா? முடியவே முடியாது! இங்கே சுட்டப்படுவது எங்களது உடம்பினையே. ஆகையால் உடலை என்றும் ஆரோக்கியமாக வைத்திருப்பதற்கு யாவரும் தயாராக வேண்டும் என்பது மிகவும் கட்டாயமானதாகும்.

நோய் வராமலும் தடுக்க வேண்டும். நோய் வந்தாலும் அதனால் தாக்கப்படாமலும் எம்மைக் காத்துக் கொள்ளவும் வேண்டும். இவையெல்லாம் நடைமுறைக்குச் சரிவருமா என்ற எண்ணம் கூடத் தோன்றுகிறதல்லவா? இவற்றுக்கெல்லாம் வழிவகைகளை எமது முன்னோர்களான சித்தர்களும் முனிவர்களும், யோகிகளும் வகுத்துவைத்து விட்டுத்தான்



போயிருக்கிறார்கள்.

அவைதான் யோக என்னும் வரமாகும். இந்த யோகம் என்பது மதம் சார்ந்தது அல்ல. இனம் சார்ந்ததும் அல்ல. மனிதம் சார்ந்ததே என்பதை உணர்வது மிகவும் இன்றியமையாததாகும்.

இறைவனது படைப்புக்கள் எண்ணிறந்தன. அவற்றுள் மனிதப் படைப்பே மிகவும் அரியதும் பெரியதுமாகும். உலகினை அடக்கியாளும் ஆற்றலை மனிதன் தனது அறிவாற்றலினால் ஏற்படுத்தி இருக்கின்றான். அப்படிப்பட்ட மனிதன் நோயால் படும் அவஸ்தையும் அதைப் போக்க எடுக்கும் பிரயத்தனங்களும்தான் மனிதனது முயற்சியில் பெரும் பிரச்சினையாக இருக்கின்றன.

இதற்குக் காரணம்தான் என்ன? மனம் போன போக்கிலே போவது. மதுவுக்கு அடிமையாவது. அளவுக்கு மிஞ்சியே உண்பது. உடலினைப் பாராது இருப்பது. ஒழுக்கத்தை ஒதுக்கியே வைப்பது.

மனிதனுக்குள்ளேயே தெய்வமும் இருக்கிறது. தேவையற்ற பிசாசும் குடி கொண்டும் இருக்கிறது. பிசாசின் எழுச்சி கூடும் பொழுது மனமானது தன்னிலையை இழக்கிறது. வாழ்வு தடுமாறுகிறது. மனத்தினிலே சாந்தியும்,சமாதானமும் எழுகின்ற வேளையிலே தெய்வம் அங்கே தோன்றி சிறப்பு எல்லாம் வந்து ஏறுகிறது.

யோகம் பற்றிக் கூறவந்துவிட்டு சமயமும் சன்மார்க்கமும் போதிக்கப்படுகிறது என்று எண்ணத் தோன்றுகிறதா?

யோகமானது ஒருவாழ்க்கை. யோகமானது ஒரு மிகச்சிறந்த வாழும் கலை. யோகம் என்பது வளத்தை, வலிமையை, வாலிபத்தை, மகிழ்ச்சியை, நிம்மதியைத் தரக்கூடியது. இதனால்த்தான் யோகக் கலை சாகாக் கலை என்றார்கள்.

எமக்குக் கடவுளால் கிடைக்கப் பெற்ற இந்த உடம்பினைக் கவனமாகப் பார்க்காவிட்டால் கவலைப் பட்டே ஆகவேண்டும். ஆகையால் உடம்பினைக் காக்கவேண்டியது ஒவ்வொருவரினதும் கட்டாயமாகிறது.

**உடம்பார் அழியின் உயிரார் அழிவர்**
**திடம்பட மெஞ்ஞானம் சேரவும் மாட்டார்**
**உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தேன்**
**உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே !**

**உடம்பினை முன்னம் இழுகென்றிருந்தேன்**
**உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்**
**உடம்புளே உத்தமன் கோவில்கொண்டானென்று**
**உடம்பினை யானிருந் தோம்புகின்றேனே!**

இதனை இவ்வாறு கூறியவர் சித்தரும் யோகக் கலையில் வல்லவருமான திருமூலராவார். திருமூலரே இந்த உடம்பின் அருமையைப், பெருமையை, உயர்வை, அவசியத்தைக் காட்டிய பின்னாவது எங்களது உடம்பை நாங்கள் பேணாமல் விட்டுவிடுவது முறையாகுமா? யாவரும் சிந்திப்பது அவசியம்.

பிராணாயாமம் என்பது மனித வாழ்வுக்கு இன்றியமையாததாகும். இதனை வழங்கியது யோகமாகும். காற்றை வெளியே விட்டு உள்ளிழுத்துச் சிறிது நேரம் அடக்கினால் மனம் சற்று அமைதியடையும் முறையான பிராணாயாமப் பயிற்சியினால் உடலின் வெவ்வேறு இயக்கங்களையும், நரம்பு ஓட்டங்களையும், நாம் அடக்கி ஆளலாம். உடலில் செல்லும்

“யோகப் பயிற்சியின் மூலம் உடலில் வேறுபாடுகள் அமைகின்றன. ஒவ்வொரு புது எண்ணமும் மூளையில் ஒரு பாதையை உண்டு பண்ணுகிறது. மானிட அமைப்பை முற்றும் காப்பதற்கு இந்த எண்ணப் பாதைகளே காரணம்.

உணர்ச்சி ஓட்டங்களையும் நாம் வசப்படுத்தலாம்.

“யோகப் பயிற்சியின் மூலம் உடலில் வேறுபாடுகள் அமைகின்றன. ஒவ்வொரு புது எண்ணமும் மூளையில் ஒரு பாதையை உண்டு பண்ணுகிறது. மானிட அமைப்பை முற்றும் காப்பதற்கு இந்த எண்ணப் பாதைகளே காரணம். இப்படிப் பாதைகள் அமைவதால்த்தான் ஞாபக சக்தியே மனித இனத்துக்கு அமைந்திருக்கிறது.

“உடலைப் பேண, ஆரோக்கியமாக விளங்க, யோகப் பயிற்சிகள் உதவுகின்றன. எப்போதும் மகிழ்ச்சியாக இருக்க முடிகிறது. எல்லாவற்றிலும் சமநிலை கடைப்பிடிப்பது யோகசாதனையால் சாத்தியமாகின்றது. – இவ்வாறு சுவாமி விவேகானந்தர் அவர்கள் யோகத்தின் மகத்துவம் பற்றி எடுத்துச் சொல்லி இருக்கின்றார்.

உடல் என்பது தனிப்பட்ட பொருள் அல்ல. ஐம்பெரும் தத்துவங்களால் ஆன ஒரு தொகுப்பு. இந்தத் தொகுப்பு தனித்து இயங்க முடியாது. அது இயங்க வேண்டுமானால் அதற்கு ஒரு முக்கியமான பொருள் தேவை. அதுதான் உயிர்.

இந்த உயிர் இருந்தால் மாத்திரம் போதாது. உயிர் இருப்பதை உணர்த்தும் கருவியாக மனமும், அதிலே தோன்றக்கூடிய எண்ணங்களும், அந்த எண்ணங்களுக்கு ஏற்ப இயங்கும் உடல் உறுப்புக்களும் இருந்தால்த்தான் உடலினது இயக்கம் முழுமை பெறும். இவை அனைத்தும் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடையவை. இதில் எதுவொன்று பழுதானாலும், இன்னொன்றின் இயக்கம் பாதிக்கப்படும். உடலும்,அதன் உறுப்புக்களும் சரியாக இயங்க வேண்டுமானால், மனமும், அதன் எண்ணங்களும் சீராக இருக்க வேண்டும். மனம் சீர்கெட்டு நோயுறும் பொழுது உடலும், அதன் உறுப்புகளும் பெருமளவில் பாதிக்கப்படுகின்றன.

(11ஆம் பக்கம் பார்க்க)



- ஸ்ரீ.நதிபரன் -

> மனித வாழ்வை மேலுயர்த்தி ஆன்ம ஈடேற்றம் பெற வைப்பதற்கு உயர் தரமான கருவி இன்றியமையாததாகும். சாதாரணமாக இயல்பாகவே மனிதனிடமிருக்கின்ற மிருகத்தனமான குணத்தை நீக்கி அவனை தெய்வீக நிலைக்கிட்டுச் செல்வதற்கான நற் கருவியாக யோகமானது திகழ்கின்றது.

# யோகக் கலையின் மகத்துவப் பெருமையை பறைசாற்றும் சர்வதேச யோகா தினம் இன்று

இந்தியப் பெருங் கலைகளுள் மிகப் புராதனமானதும் தற்காலத்தில் பெரிதும் முக்கியத்துவம் பெற்றுத் திகழ்ந்து வருகின்ற இந்து மதச்சார்புடைய பாரம்பரிய கலையாகவும் மிளிர்ந்து வருகின்ற யோகக் கலையானது மனித வாழ்க்கை நெறிமுறைகள் பற்றித் தத்துவார்த்த ரீதியாகத் தெளிவுற விளக்கி நிற்கின்றது.

இற்றைக்கு சுமார் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னெழுந்த இக்கலை, நீண்ட வரலாற்றுப் பின்னணியுடையது. இறைவனால் மனிதனுக்காக உவந்தளிக்கப்பட்டு இறையருள் பெற்ற அருளாளர்கள் மூலம் இது வெளிப்படுத்தப்பட்டது.

வேற்று மதப்பிரிவினரால் இக்கலை பற்றிய பல்வேறு விமர்சனங்கள், எதிர்ப்பிரசாரங்கள், எதிர்க் கருத்துக்கள் எல்லாம் பல்வேறு கோணங்களில் முன்னெடுக்கப்பட்டு வந்த போதிலும் அவற்றையெல்லாம் முறியடித்து காலம் கடந்தும் தற்போதும் தன்னிலை மாறாது பேண்தகு நிலையில் வாழ்ந்து வருகின்ற இக்கலை பற்றிய உலக மக்களது பார்வையானது விசாலமானதாகும். இதனடிப்படையில் நோக்கின் காலத்தின் தேவை கருதியும் அதன் முக்கியத்துவம் உணர்ந்தும் உலக அரசியல் தளத்தில் உயர் பீடமாக விளங்கும் ஐ.நா. சபையால் கடந்த 2015 ஆம் பிரகடனம் செய்யப்பட்டு உலகெங்கும் புத்தெழுச்சியுடன் கொண்டாடப்பட்டு வருகின்ற தினமாக சர்வதேச யோகா தினமானது அமைகின்றது.

வழமையாக கொண்டாடப்பட்டு வருகின்ற ஏனைய சர்வதேச தினங்களைப் போலல்லாது இது தனித்துவமும் புனிதத்துவமும் பெற்று நிற்கிறது. இக் கலைக்கு நீண்ட வரலாறுண்டு. சனாதன தர்மம் எனப் போற்றப்படுகின்ற இந்து மதத்தின் வேரிலிருந்து முகிழ்த்த பெருமையுடையது. உலகில் வழங்கி வருகின்ற மதப் பிரிவுகளுக்கெல்லாம் ஆதியாய், அநாதியாய் விளங்கும் இந்து மதமானது பல்வேறு அரும் பெரும் கலைகளின் ஊற்றுக்கண்ணாக விளங்குகிறது. அத்தகைய சிறப்பிற்குரிய, மக்களது வாழ்வியற் செல்நெறிக்கு மிகவும் அவசியமான கருத்துக்களை தன்னகத்தே கொண்டமைந்துள்ள, இன்றைய மருத்துவ விஞ்ஞானத்தால் கூட வியந்து நோக்கப்படும் புனிதமான கலையாக யோகக் கலை விளங்குகிறது.

தற்போது மனித வாழ்வியலானது சகல விதத்திலும் மாற்றம் கண்டுவருகிறது. இயற்கையை புறமொதுக்கி நவீன அறிவியலுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுக்கும் நாம் அதனால் விளைகின்ற எதிர்மறையான பின் விளைவுகள் பற்றியெல்லாம் கிஞ்சித்தும் அக்கறை கொள்வதில்லை. நம்மைத் தாக்கிவருகின்ற நோய்களுக்கெல்லாம் முக்கிய காரணமாக எமது அன்றாட நடவடிக்கைகளே அமைகின்றன. எமது இயற்கையை விரோதிக்கும் செயற்பாடுகளால் தான் இவ்விதமான எதிர்மறையான தாக்கங்கள் ஏற்படுகின்றன என்பதை உணர வேண்டும். யோகம் சார்ந்த வாழ்க்கை முறையானது இயற்கையோடு இணைந்த அறிவியலாகவே வளர்க்கப்பட்டது. முற்காலத்தில் வாழ்ந்த மெஞ்ஞானிகள் அறிவில் தற்கால விஞ்ஞானிகளையும் விஞ்சிய நுண்மாண் நுழைபுலமுடையவர்களாக விளங்கினார்கள். இவர்களது ஆய்வு முடிவுகள் தந்த தத்துவங்கள் யாவும் காலம் கடந்து நிற்கும் அழியாச் சிறப்புடையவையாகும். அவ்வகையினதாக யோகக் கலையும் நோக்கற்பாலது. இன்றைய நவீன விஞ்ஞானத்தின் ஆய்வுப் புலத்தில் மெச்சத்தக்க விதத்தில் அதன் தத்துவ விசாரம் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இக்கலை பற்றிய கருத்துக்கள் பல்வேறு நூற்பரப்புக்களில் காணப்படினும் யோகக் கலையின் தந்தையாக போற்றப்படும் பதஞ்சலி மாமுனிவரது யோக சூத்திரமே இக் கலை சார் கருத்துக்களை தெளிவுற விளக்கி நிற்கும் முக்கியமான மூல நூலாகக் கொள்ளப்படுகிறது. இதில் காணப்படும் 196 சூத்திரங்களும் நான்கு பாதங்களாக வகுக்கப்பட்டு இரத்தினச் சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளன. இதில் வருகின்ற அட்டாங்க யோகம் எனும் பகுதி மனித வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாத எட்டுப் படிநிலைகள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி போன்ற எட்டு நிலைகளே அவையாகும்.



மனித வாழ்வை மேலுயர்த்தி ஆன்ம ஈடேற்றம் பெற வைப்பதற்கு உயர்தரமான கருவி இன்றியமையாததாகும். சாதாரணமாக இயல்பாகவே மனிதனிடமிருக்கின்ற மிருகத்தனமான குணத்தை நீக்கி அவனை தெய்வீக நிலைக்கிட்டுச் செல்வதற்கான நற் கருவியாக யோகமானது திகழ்கின்றது.

யோகம் என்பது ‘யுஜ்’ என்ற வினையடியால் எழுந்தது. இதற்கு இணைதல் அல்லது ஒன்று சேர்தல் என்ற பொருள்தரும். இதன் படி நோக்கின் உடல், மனம், ஆன்மா என்பவற்றை ஒன்று சேர்க்கும் கருவியாக இது தொழிற்படுகின்றது. இதன் உள்ளார்ந்த விளக்கத்தைப் பார்த்தால் எமது தூல உடலானது தானாகத் தொழிற்படமாட்டாது, அதன் தொழிற்பாட்டிற்கு சூட்சுமப் பொருளான மனதின் சக்தி இன்றியமையாதது. அதேபோல் மன இயக்கப்பாட்டிற்கும் ஏதோவொரு எத்தன சக்தியானது மிக அவசியம் எனத்துணிந்தால் அதுவே ஆன்மா எனும் வகுதிக்குள்ளடங்கும். எனவே இம் முப்பொருள்களதும் பரஸ்பர இயக்கப்பாட்டிற்கான இணைப்புக் கருவியாக யோகம் தொழிற்படுகின்றது.

பொதுவாக, யோகம் என்பதற்கு இந்து தத்துவம் சார்ந்த பலவித நூல்களிலும் பலவிதமான விளக்கங்கள் அளிக்கப்பட்டிருப்பினும் யோகத்தின் தந்தையாக விளங்கும் பதஞ்சலி யோக சூத்திரத்தில் சமாதி பாதத்தில் வருகின்ற முதற் சூத்திரம் இதற்கு தெளிவான விளக்கம் தருகிறது. அதாவது ‘யோக சித்த விருத்தி நிரோதக...’ எனும் சுலோகம் ஆழ்ந்த தத்துவ உட்பொருள் கொண்டது. யோகம் சித்த விருத்திகளை அழிக்கும் தன்மை வாய்ந்தது. அதாவது சித்தம் என்பது எண்ணங்களின் – சிந்தனைகளின் ஒட்டுமொத்த இருப்பிடமாகும். இது பல நிலைகளில் பலவாறு செயற்படும் தன்மையுடையது. நான், எனது எனும் அகங்கார, மமகாரங்களும் சேர்ந்தியங்கும் முனைப்புறு தன்மையே சித்தமாகும். இதுவே மனித வாழ்வைச் சீர்ப்படுத்தவும் சீரழிக்கவும் காரணமாகிறது. துன்பம், விரக்தி, வெறுப்பு, கவலை போன்ற பல விரும்பத்தகாத எதிர்மறையான விளைவுகளுக்கும் மகிழ்வு, இன்பம், வெற்றி, களிப்பு முதலிய பல விரும்பப்படுகின்ற நேர்மறையான சம்பவங்களுக்கெல்லாம் காரணம் மனமாகும். எனவே முதலில் ஐம்புலன்களிடமிருந்தும் மனதை பிரித்தெடுத்து எதுவும் நிலையற்றது என்ற யதார்த்தத்தை உணர்ந்து மெய்யெது, பொய்யெது என்றாய்ந்துணரும் வேளை மனதை எண்ணங்களற்றதாக்குவது மிக எளிது. எனவே நமது மனதில் பதிந்துள்ள எண்ணங்களின் முழுத் தொகுதிகளின் ஒட்டுமொத்த எழுச்சி நிலைகளே சித்த விருத்தியாகும். அவற்றை மனதினின்றும் அழித்தலே சித்த விருத்தி நிரோதக என்பதன் பொருள் விளக்கமாகும்.

தற்காலத்தில் யோகப்பயிற்சிகளின் தேவைப்பாடுகள் மேலெழுந்துள்ள சூழ்நிலையில் காலத்தின் தேவையறிந்து 2015 ஆம் ஆண்டிலிருந்து ஐ.நா. சபையால் யோகா தினம்,சர்வதேச ரீதியாக பிரகடனப்படுத்தப்பட்டு கொண்டாடப்பட்டு வருகின்றமை சாலவும் பொருத்தமான நடவடிக்கையாகும். மனித வாழ்க்கைக்கு மிகவும் அவசியமான வரன்முறைகளை படிமுறையாகவும் தத்துவார்த்த ரீதியாகவும் விளக்கியுள்ள இக் கலையானது மேம்பட்ட வாழ்க்கைக்கு சில விதிமுறைப்பயிற்சிகளை பெறல் வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. உடல், மனம், ஆன்மா ஆகிய மூன்றையும் பண்படுத்த வல்ல இக்கலையை மக்களனைவரும் இன, மத பேதம் கடந்து பின்பற்றத் தலைப்படுவதுடன் அதனை புனிதத்துவம் கெடாது தொடர்ந்து பேணுவதற்கான முயற்சிகளை எடுக்கவேண்டும் என்பதே இத்தினமானது சொல்லும் செய்தியாக அமைகின்றது. வழமை போலவே நாம் ஒவ்வொரு உலக தினம் வரும் போதெல்லாம் பெரும் பணச்செலவுடனும் ஆரவாரத்துடன் பகட்டாகக் கொண்டாடி வருவது வழமையென்றாகி விட்ட நிலையில் அத்தினங்கள் வெளிப்படுத்தி நிற்கும் தாற்பரியங்களறியாது, அர்த்தங்கள் புரியாது, வெறும் ஆடம்பரமான கொண்டாட்டங்களிலேயே கவனம் செலுத்தி எமது நேரத்தையும் பணத்தையும் வீணடித்து வருகிறோம்.

(11ஆம் பக்கம் பார்க்க)



# யோகா; ஆரோக்கிய வாழ்வின் குறிகாட்டி

திரு. சி. ரமணராஜா
(சிரேஷ்ட விரிவுரையாளர்,
இந்துநாகரிகத்துறை,
இந்துக்கற்கைகள் பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

> யோகமானது உயிருள்ள உடலின் இந்த உறுப்புக்களின் அனைத்துப் பகுதிகளிலும் முழுமையாகச் செயலாற்றி அவ்வுறுப்புக்களை சமநிலையிலும் முழுத்திறமையுடனும் தொழிற்பட வைக்கிறது. மனமும், ஆன்மாவும் யோகத்தில் மிக முக்கியமான இரு கூறுகள். உடலென்பது ஆரோக்கியத்தின் ஒரு பகுதி. உடலின் ஆரோக்கியத்தில் மன ஆரோக்கியம் அடிப்படையானது.

'இளைஞர், முதியவர், மிகவும் வயதானவர், பலவீனர், நோயாளி போன்ற அனைவரும் (தமது உடல்நிலை செயலாற்றலுக்கு ஏற்ப) தொடர்ந்து யோகப்பயிற்சி செய்து வந்தால் (யோகத்தில் விரும்பிய) சித்தியைப் பெறமுடியும். இத்தகைய சித்திகள் படிப்பதால் அல்ல தொடர்பயிற்சியினால் மட்டுமே கிடைக்கக்கூடியன' - ஹடயோகப் பிரதீபிகை

### மனவிஞ்ஞானம்

இந்தியாவில் மிகவும் புராதன காலத்திலிருந்தே குருகுலக் கல்வி முறையில் கற்பிக்கப்பட்டு வருகின்ற யோகாவானது, மனதினைப் பற்றிய விரிவான ஆராய்ச்சியும், மன ஆற்றலால் உண்டாகின்ற பல்வேறுபட்ட சாதனைகளும், மனம், உடல், செயலுணர்வுகளின் கட்டுப்பாடு, மற்றும் இயற்கைக்கும் மனிதனுக்குமான ஒத்திசைவு முதலியனவும் இணைந்தவொரு உருவாக்கமாக உள்ளது. இதனால் இதனை 'மனவிஞ்ஞானம்' (Science of mind) எனவும் கூறுவர். உடல் மற்றும் மனத்துடன் நெருக்கமான தொடர்பினைக் கொண்டுள்ள யோகக் கலையானது சமகாலச் செல்நெறியில் இன்றியமையாத ஒன்றாக மக்களின் வாழ்வியலுடன் ஒன்றித்துவிட்டது. இதன் தேவை இன்று உலகளவில் உணரப்படும் நிலையில் அதனை முன்னிறுத்தியாக இக்கட்டுரை அமைகிறது.

யோகம் என்பது சேர்தல், இணைதல் அல்லது பிரிதல் என இருநிலையில் பொருள் கொள்ளப்படுவதுண்டு. பிரிதல் என்பது உயிர்களின் துன்பத்திற்கு காரணமான உலகத் தொடர்புகளிலிருந்து நீங்குதலாகும். இணைதல், சேர்தல் என்பது உலகத் தொடர்புகளிலிருந்து நீங்கிய ஆன்மாக்கள் பரம்பொருளுடன் ஒன்றித்தலைக் குறிக்கின்றது. சீவனும் பரம்பொருளும் இணைதலாகிய ஆன்மிகப் புணர்ப்பினை (Spiritual Union) யோகமெனும் சொல் சுட்டித்து நிற்பதாக ஞாக்யவல்கியர் குறிப்பிடுகின்றார்.

துன்பத்திற்குப் பிரிவு அடிப்படை என்றும், அத்துன்பத்தினை நீக்க வேண்டுமாயின் ஆன்மிகப் புணர்ப்பு அடைதல் வேண்டுமென்றும் தத்துவவாதிகள் எடுத்துரைப்பர். ஆகவே, பல்வேறு உருவங்களை எடுக்கும் சித்தத்தினைக் கட்டுப்படுத்தி தடுத்து நிறுத்துதலே யோகம் எனவும், மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரண விருத்தி, தூய்மை முதலியவற்றை மேம்படுத்துவதற்குரிய வழிகள் யோக தத்துவத்தினூடாக விளக்கப்பட்டுள்ளன என்பதனையும் அறிந்துணரலாம்.

### தத்துவமும் கலையும்

யோக தத்துவத்தில் மந்திர யோகம், இலய யோகம், ஹட யோகம், இராஜ யோகம் முதலியன முதன்மைக் குரியனவாகப் பேசப்படுகின்றன. இராஜயோக முறைமைகள் யோகசூத்திரத்தில் விரிவாக்கப்பட்டுள்ளன. இலயயோகம் என்பது மூலாதாரத்தில் இருக்கும் குண்டலினி சக்தியை படிமுறையில் ஆறாதாரங்களினூடாக சித்தத்தின் உச்சியிலிருக்கும் சிவத்தோடு இணைப்பது என்பர். நம்பிக்கை மருத்துவம் என சுட்டப்படுவதும் நரம்பு, மனம் முதலியவற்றால் பாதிப்புற்றவர்க்கு மந்திர சிகிச்சை அளிப்பதுமே மந்திர யோகத்தில் உள்ளடங்கும். உடலியற் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தும் அப்பியாச முறைமையே ஹடயோகம் ஆகும். இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்னும் அட்டாங்க யோகமுறைமைகளும் யோகதத்துவத்தில் முதன்மை பெறுகின்றன. யோகத்தின் அங்கங்களாகச் சொல்லப்பட்டனவற்றை அப்பியாசம் செய்து மனமாசுகளை அகற்றுகின்ற போது, அங்கே மெய்மையின் விழிப்புணர்வை வளர்க்கின்ற ஆன்மா சார்ந்த பிரகாசம் மேலெழும் என்கிறது பதஞ்சலி சூத்திரம்.

இந்து சமயப் புலத்தில் யோகம் என்பது ஒரு தத்துவ முறையாக விருத்தியுற்றிருப்பினும், அது ஒரு கலையாக மக்களின் வாழ்வியலோடு ஒன்றித்துவிட்டமை சிறப்பான அம்சமாகும். அறிவியலின் அதியுன்னத வளர்ச்சியும், தொழிநுட்ப சாதனங்களின் அதிகரித்த பாவனைகளும் மனித இனத்தை முன்னேற்றப் பாதைக்கு இட்டுச்செல்கின்றன எனக் கூறப்பட்டாலும் அவை வாழ்வின் இருப்புக்கும் மேம்பாட்டிற்கும் அச்சுறுத்தலாக - சவால்களாகவே உள்ளன. நிலையான அபிவிருத்தி என்ற தோரணையில் பல கைங்கரியங்கள் பொதுநல நோக்கில் அல்லது சுயநல அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டாலும் விழுமியங்களற்ற, உடலுள ரீதியாக நோயுள்ள, முரண்பாடு, போட்டி முதலியன வாழ்வாகிவிட்ட சமூகத்தில் அவை எத்துணை பொருத்தப்பாடுடையதாக அமையும்?

### உடல் ஆரோக்கியம்

மனிதர்கள் யாரும் பலவீனமானவனாகவோ, நோயாளியாகவோ, மனவலிமையற்றவனாகவோ இருக்க விரும்புவதில்லை. சிறந்த உடல் ஆரோக்கியத்துடன் (நீண்டகாலம்) இருக்கவேண்டும் என்பதே ஒவ்வொருவருடைய விருப்பமும் இலக்குமாகும். ஆனால் நம்மில் எத்தனை பேர் உடல், உள ஆரோக்கியத்துடன் இருக்கிறோம்? மிகக் குறைவுதான். இந்த நிலைக்கு மூன்றுவித காரணங்களைக் குறிப்பிடலாம் என்கிறார் யோகி சிவானந்தர்.

மக்களில் அனேகருக்கு உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்வதற்கான வழிமுறைகள் தெரியாமலிருப்பது.

உடல் ஆரோக்கியம் சீர்குலையும் வரை உடல் நலனில் உதாசீனம் காட்டுவது.

உடலாலும் மனதாலும் ஒழுக்கமற்ற வழிகளில் சென்று வாழ்க்கையை அனுபவிக்க முயல்வது.

இத்தகைய வாழ்வியல் முறையினால் உடல், பிராணன், மனம் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த செயற்பாடுகள் பாதிக்கப்படுகின்றன. அதன் விளைவே நோய் உருவாக்கம். உடல், மூச்சு, மனம் ஆகியவற்றின் சேர்க்கையே உயிர்வாழ்க்கையாகும். இவை ஒன்றையொன்று பாதித்து விடும். பாதிப்புக்களை சீர்படுத்துவதில் ஹடயோகம் பெருந்துணை புரிகிறது.

உடல், மூச்சு (பிராணன்) மனம், மற்றும் ஆன்மா தொடர்பான விஞ்ஞானமாக ஹடயோகம் இந்திய யோகிகளால் வளர்க்கப்பட்டு வந்துள்ளது. இவ்வகையில் ஹடயோகம் என்பது ஆசனம், பிராணாயாமம், முத்திரை, பந்தம், ட்கர்மா, தியானம் எனும் முக்கியமான ஆறு அங்கங்களைக் கொண்டு திகழ்கிறது. 'மனித நடத்தைகள்' இயம நியமங்களாலும், 'உடலியக்கச் செயற்பாடுகள்' ஆசனத்தினாலும், 'சுவாச ஒழுங்குகள்' பிராணாயாமப் பயிற்சியினாலும், 'மன ஒருங்குவிதல்' தாரணை மற்றும் தியானச் செயற்பாடுகளாலும் நிகழ்வன.

### உடல், உள ஆரோக்கியம்

மனித உடலானது தசைகள், என்பு மச்சைகள், நரம்புகள், திசுக்கள் முதலான கூறுகளால் ஆனது. உடலில் சுவாசித்தல், உணவுப் பொருள்களின் சீரணம், இரத்த ஓட்டம், நாடி,நாளத் தொழிற்பாடுகள், கழிவுப் பொருள்களின் வெளியேற்றம், மனதின் இயக்கங்கள் முதலான செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. உடலிலுள்ள சுரப்பிகள் மற்றும் தனித்தனியாக உள்ள உறுப்புகள் என்பனவற்றின் தொழிற்பாட்டில் மேற்படி செயற்பாடுகள் தொடர்ச்சியாக நிகழ்ந்துவருகின்றன. யோகமானது உயிருள்ள உடலின் இந்த உறுப்புக்களின் அனைத்துப் பகுதிகளிலும் முழுமையாகச் செயலாற்றி அவ்வுறுப்புக்களை சமநிலையிலும் முழுத்திறமையுடனும் தொழிற்பட வைக்கிறது. மனமும், ஆன்மாவும் யோகத்தில் மிக முக்கியமான இரு கூறுகள். உடலென்பது ஆரோக்கியத்தின் ஒரு பகுதி. உடலின் ஆரோக்கியத்தில் மன ஆரோக்கியம் அடிப்படையானது. 'உடம்பார் அழியின் உயிரார் அழிவர்' என்பதும் 'உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே' என்பதும் திருமூலரின் ஆன்மஞானமகும். மேலைநாட்டு மருத்தவ செல்நெறி மனதின் ஆரோக்கியத்திலேயே உடலின் ஆரோக்கியம் உள்ளதாக உணர்ந்திருக்கிறது.

உடலிலும் மனதிலும் ஏற்படுகின்ற குறைகளுக்கு தனித்தனியாக சிகிச்சையளிக்கும் முறைகளை மேலைத்தேய மருத்துவம் தனித்தனியாக கடைப்பிடித்து வருகின்றது. ஆயினும் பூரணமாக அந்நோய்களை குணப்படுத்த அவற்றால் முடியவில்லை. ஆனால் யோகம் என்பது விஞ்ஞானத்தின் விஞ்ஞானமாக இருப்பதனால் உடல் மற்றும் உள நோய்களை ஒருங்கே நீக்கவும், அவற்றின் ஆரோக்கியத்தை பேணுவதிலும் உறுதுணை புரிகிறது.

### யோகக் கலையில் ஆசனம்

எலும்பு மண்டலம், தசைமண்டலம், சுவாச இயக்கம், இரத்தசுழற்சி, உணவூட்டல்சுழற்சி, கழிவுநீக்கல் மண்டலம், நரம்பு மண்டலம், நாளமில்லாச் சுரப்பிகள், பிட்யூட்டரி சுரப்பி, தைராய்டு மற்றும் பராதைராய்டு சுரப்பிகள், பன்கிரியாஸ், அட்ரீனல் சுரப்பி, தைமஸ் சுரப்பி, பெண், ஆண் இன ஹார்மோன்கள் முதலியன இயங்குவதற்கு ஆசனப்பயிற்சிகள் துணையாகின்றன. சான்றாக தைமஸ் சுரப்பி என்பது ஒரு முதன்மை நிணநீர் சுரப்பியாகும். நோய்த் தடுப்பாற்றலுக்கு காரணமான எதிர்ப்புப் பொருள்களை உற்பத்தி செய்யக் கூடிய ஆற்றல் இச்சுரப்பிக்கு உண்டு. வெள்ளை அணுக்களை பெருக்கம் செய்வது மட்டுமன்றி புற்றுநோய்க் கிருமிகளின் உற்பத்தி மற்றும் பெருக்கத்தை அழிக்க தைமஸ் சுரப்பி உதவுகின்றது. இச்சுரப்பியானது, மார்புக் கூட்டினுள் மூச்சுக் குழல் பிரியுமிடத்தில் இதயத்தின் முன்புறம் காணப்படும் இரு கதுப்புகளை உடைய சுரப்பி ஆகும். தைமஸ் சுரப்பியின் இயக்கப் பெருக்கத்துக்கு உட்ராசனம், மத்யாசனம் முதலியன ஆசனங்கள் துணைபுரியக் கூடியன. அவ்வாறே மயூராசனம், புஜங்காசனம், தனுராசனம், அர்த்தக்கட்டிச் சக்ராசனம், நவாசனம், சக்ராசனம் முதலான ஆசனப்பயிற்சிகளும் உட்டியான பந்தம், அக்கினி சாரா கிரியா, நௌலி பயிற்சிகளும் சிறுநீரக குறைபாடுகளை நீக்கவும், அவ்வுறுப்புகள் நல்லாரோக்கியத்துடன் சீராகச் செயற்படவும் உதவுகின்றன. ஒவ்வொரு மண்டல உறுப்புகளது இயக்கங்கள் மற்றும் சீரான செயற்பாடுகள் ஆசன நிலைகளால் முறையாகச் செயற்படுத்தப்படுகின்றன.

(13ஆம் பக்கம் பார்க்க)

# தரமுயர்த்தல் என்ற பெயரிலேயே மாகாண அதிகாரங்கள் பறிப்பு!

## பிரசன்னா குற்றச்சாட்டு

தரமுயர்த்தல் என்ற பெயரில் மாகாணசபைகளின் அதிகாரங்களைப் பறிக்கவே அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக தமிழீழ விடுதலை இயக்கத்தின் பிரதித் தலைவர் இந்திரகுமார் பிரசன்னா தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்றுமுன்திம் (சனிக் கிழமை) நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த நிகழ்வில் இந்திரகுமார் பிரசன்னா மேலும் கூறியுள்ளவை வருமாறு –

தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தின் ஊடாக கிடைக்கப் பெற்றதே இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் ஊடான 13 ஆவது திருத்தச் சட்டம்.

குறித்த 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப் படுத்தும் விவகாரத்தில் அரசாங்கம் கபட நாடகம் ஆடுகின்றது.

இதேவேளை இந்தியா, 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கு ஒத்துழைப்பதாகக் கூறிக்கொண்டு மாத்திரம் இருக்காமல் அதனை செயற்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

மேலும் தற்போதைய அரசாங்கம், மாகாணசபையின் அதிகாரங்களைத் தன்வசப்படுத்தும் செயற்பாடுகளைத் துரிதமாக மேற்கொண்டு வருகின்றது.

ஆகவே, இந்தியா உட்பட சர்வதேச நாடுகள், இந்த 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு, அதனூடாக தமிழ் மக்களுக்குரிய நிரந்தரத் தீர்வைப் பெற்றுத் தருவதற்கு முன்வர வேண்டும். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# குற்றச்செயல்களுடன் தொடர்புகளுடைய 24 பேரைக் கைதுசெய்ய சிவப்பு அறிவிப்பு

குற்றச்செயல்களுடன் தொடர்புடைய 24 போதைப் பொருள் கடத்தலகாரர்களுக்கு சிவப்பு அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

வெளிநாடுகளுக்கு தப்பிச்சென்று தலைமைறைவாகியுள்ள குறித்த கடத்தல்காரர்களை கைது செய்வதற்கு சர்வதேச பொலிஸார் ஊடாக இவ்வாறு சிவப்பு அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதனையடுத்து, போதைப்பொருள் கடத்தல் மற்றும் திட்டமிட்டு குற்றச்செயல்களில் ஈடுபடும் 13 பேர் தொடர்பாக தகவல்கள் கிடைத்துள்ளன எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளார், பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இவர்களில் இருவர் கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்பட்டுள்ளமையுடன், மேலும் 11 பேர் வெளிநாடுகளில் தலைமறைவாகியுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப்பேச்சாளார் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# வாழ்வில் வரமாக வந்த ......

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனவே நமது உடலானது ஆரோக்கியமாக இருக்க வேண்டுமேயானால் நமது மனமும், எண்ணங்களும் ஆரோக்கியமாக இருக்கவேண்டும் என்பது அவசியமானதாகும். இதுதான் அடிப்படை. இங்குதான் யோகம் என்பது எமது வாழ்வுக்குள் வந்துசேருகிறது.

நோய்களை அணுகவிடாது , நோயெதிர்ப்புச் சக்தியை ஏற்படுத்தி, பஞ்ச பூதங்களாலான இந்த உடம்பினைக் காக்கும் பாரிய பணியினை யோகம் ஏற்று நிற்கிறது. இதனால் எங்கள் வாழ்க்கையில் யோகம் தரும் நிலையில் யோகா அமைந்திருக்கின்றது.

வெளியில் உடம்பினை முறுக்கேற்றுவதில் பலர் நாட்டமுடையவர்களாக இருக்கின்றார்கள். அதற்காகப் பலவிதமான பயிற்சிகளிலும் ஈடுபடுகிறார்கள். குஸ்தி போடுவது, கராத்தே பழகுவது, இன்னும் பல விநோதமான விளையாட்டுக்களிலும், பயிற்சிகளிலும், பணத்தைச் செலவு செய்து தமது வெளித் தோற்றத்தைப் பேண நிற்பதை நடைமுறையில் காண்கின்றோம். ஆனால் இவற்றால் எல்லாம் உள்ளுறுப்புகளுக்கு எந்த வித நலன்களும் ஏற்பட்டுவிட மாட்டாது. இந்தப் பயிற்சிகளால் பிரச்சினையினை உருவாக்கும் மனம் கூட அமைதியைப் பெற்றுவிடமாட்டாது.

பணத்தின் அவசியமே இல்லாமல் உடலையும் உள்ளத்தையும் வளம்படுத்தி ஆரோக்கியத்துக்கு வழி வகுக்கும் ஒரே வழி யோகம் மட்டுமேதான். ஏழைகளுக்கும் ஏற்றது. வசதி படைத்தவருக்கும் ஏற்றது இந்த யோகம் ஆகும். மற்றைய பயிற்சிகளுக்கு கூடுதலான உணவுகள் தேவை. யோகப் பயிற்சிக்கோ குறைந்த சாதாரண உணவுகளே போதுமானதாகும். யோகம் பயின்றால் கோபம் குறையும். நிதானம் ஏற்படும். சமநிலை பேணும் எண்ணமுருவாகும். பதற்றம் குறையும்.

யோகத்தின் அருமை கருதி அதனைப் பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழகங்களுக்கும் கொண்டு செல்லும் வகையிலும் முயற்சிகள் நடந்து கொண்டு இருக்கின்றன. மேலை நாடுகளில் மருத்துவம் படிப்பவர்களுக்கே யோகாவை பயிற்றுவிக்கின்றனர்.

யோகாவைக் கடைப்பிடிப்பது என்பது மிகவும் இலகுவானது. யோகா செய்வதற்கெனப் பிரத்தியேகமான இடவ வசதிகள் எல்லாம் தேவையில்லை. சாதாரணமான காற்றோட்ட வசதியுள்ள இடமே போதுமானதாகும். மற்றைய பயிற்சிகளின் போது களைப்பைப் போக்க விதம்விதமான குளிர்பானங்களை அருந்துவார்கள். அல்லது காப்பியோ, தேனீரோ, போன்விட்டா, மைலோ போன்றவற்றையோ வைத்திருந்து நன்றாக அருந்தி மகிழ்வார்கள். பயிற்சி செய்வதுகூட இவற்றை எல்லாம் குடிப்பதற்கோ என்றுகூட எண்ணத்தோன்றுகிறது. இவற்றைக் குடிப்பதால் செய்த பயிற்சியின் பலன் கூட அவர்களுக்குக் கிடைக்காமல் போனாலும் போகலாம்.

இவை எதுவுமே இல்லாமல் நல்ல காற்றோட்டமான இடத்தில் அமைதியாக இருந்து செய்வதுதான் யோகா ஆகும். காசுச் செலவும் இல்லை. கண்டவற்றைக் குடித்து ஆரோக்கியத்தைப் பாழாக்கவும் தேவையில்லை. குறைந்த உணவும் நிறைந்த திருப்தியும் யோகாவின் முக்கியமான அம்சம் எனலாம்.

இராமகிருஷ்ண மிஷனால் நிர்வகிக்கப்பட்ட பள்ளிக்கூடங்களிலே யோகா மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. இலங்கையிலே சுவாமி விபுலானந்த அடிகளாரின் கீழியங்கிய மட்டக்களப்பு கல்லடி உப்போடை சிவானந்தா வித்தியாலயத்தில் விடுதியில் இருக்கும் மாணவர்களுக்கும் ஏனையவர்களுக்கும் கூட ஏறக்குறைய ஐம்பது வருடங்களுக்கு முன்னரே யோகத்தைச் சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள். அங்கு கல்வி கற்றவர்கள் நல்ல திறமையானவர்களாகவும், ஆரோக்கியமானவர்களாகவும் இருக்கின்றமையைக் காணக்கூடியதாக இருக்கிறது.

மனித வாழ்க்கையானது அகவியல், புறவியல் என்று இருகூறுகளைக் கொண்டது. அக ஆரோக்கியத்துக்குத் தியானப் பயிற்சி உதவுகிறது. புற ஆரோக்கியத்துக்கு யோகப்பயிற்சி உதவுகிறது. ஒவ்வொரு மனிதனின் உடம்பில் ஏற்படும் நோயை – தலையில் இருந்து பாதம் வரை, எலும்புக்கும் தசைக்கும், நரம்புக்கும், நாடிக்கும், குருதிக்கும், குடலுக்கும், பல்லுக்கும், பார்வைக்கும், மனதுக்கும், தொண்டைக்கும், தோலுக்கும், மூச்சுக்கும், மூளைக்கும், கைக்கும், வருகின்ற அனைத்து நோய்களையும் மருந்தின் துணையில்லாமலேயே யோகா குணப்படுத்தும் வல்லமை பெற்றது என்பது இத்துறையில் ஆய்ந்தவர்களது, அனுபவப்பட்டவர்களது கருத்தாகும்.

இளமை வரும். சுறுசுறுப்புடன் நினைவாற்றலும் வரும். மனோசக்தியும் மன அமைதியும் உண்டாகும். வீரம் உருவாகும். ஆற்றல் விருத்தியடையும். ஆயுள் பலப்படும். புலமை, நுண்ணறிவு, பழுதில்லா வாழ்க்கை இவை அத்தனையும் தருவது யோகா ஆகும். இவை யாவும் அமைய வேண்டும் என்பதுதானே அனைவரதும் ஆசையும் கனவும் அல்லவா! இவற்றை எமக்கு அள்ளிதரும் யோகா வரம் தரும் யோகமாக எங்கள் வாழ்வில் இருக்கிறது என்பதை நாம் உள்ளத்தில் இருத்திவைப்பது அவசியம்.

சிரித்து வாழவேண்டும். சிறக்கவும் வாழவேண்டும். சதைபெருத்த உடல் பெற்று, சங்கடங்கள் பல பெற்று, சந்தோஷம்தனை இழந்து வாழ்வது வாழ்க்கையல்ல. இளமையுடன், வளமையும், இனிமைநிறை எண்ணமும், பொறுமை நிறை உள்ளமும், பொங்கிவரும் சுகமுமே வையத்துள் வாழ்வாங்கு வாழுதல் என்பதாகும். இந்தச் சிறந்த வாழ்க்கை எமக்கு அளிக்கவல்ல சஞ்சீவியாக அமைந்திருப்பதுதான் யோகா ஆகும். ஆதாலால் யோகா எம்வாழ்வில் வரமாக வந்த நல்ல யோகமே யாகும்.

# யோகக் கலையின்....

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனவே இத்தினத்தினையும் புத்தெழுச்சியுடன் கொண்டாடும் வேளையில் அதன் புனிதம் கெடாதிருப்பதை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பு அனைவரின் முன் விரிந்துள்ளது.

இத்தினத்தை அங்கீகரிப்பதில் முன்னின்று உழைத்தவர் பாரதப்பிரதமர் நரேந்திர மோடி அவர்கள். அவரது அயராத முயற்சியும் இந்து மதத்தின்பால் அவருக்கிருக்கும் ஆழமான காதலும் யோகத்தின் மீதான தீராத பற்றுறுதியும் அவரை அவ்வாறு செயற்படத் தூண்டியதெனில் மிகையில்லை.

இது, இந்து மதம் சார் கலையொன்றுக்குக் கிடைத்த மிகப்பெரும் கௌரவமாகவே கருதப்படும். எனவே இந்து மதம் சார்ந்த கலை வடிவங்கள், பொக்கிஷங்கள் அருகி அழிந்துவரும் நிலையில் தற்காலத்திற்கு மிகவும் அவசியமான யோகக் கலையின் எழுச்சியானது காலத்தின் தேவையாகும். இக்கலையை அதன் புனிதம் கெடாது பேண்தகு நிலையில் வைத்திருப்பதற்கும் வேற்று மதவாதிகளின் பிடியில் சிக்கி சீரழிந்து போகாது காப்பதிலும் அவருக்குப் பெரும் பொறுப்புண்டு. கடமையுண்டு. கடப்பாடுண்டு. அத்தகைய பாரிய பொறுப்பை சிரமேற்கொண்டு அவர் ஆற்றவேண்டிய சில முக்கிய கடமைகளை இவ்விடத்தில் பட்டியலிடுவது மிகவும் பொருத்தமுடையதே.

தற்போது வியாபார மாயைக்குள் அமிழ்ந்து வரும் இக்கலையை மீட்டெடுக்க வேண்டியது அவசியமாகும். அதற்காக யோகத்துறைசார் நிபுணர்களைக் கொண்டு உலக நாடுகளில் யோகப் பயிற்சி மையங்களை ஸ்தாபித்துத் திறமையும் ஆர்வமும் உள்ளவர்களுக்கு இலவசமாகப் பயிற்சி வழங்கி அவர்களைக் கொண்டு கிராமங்கள் தோறும் மக்களுக்கு பயிற்சியளிக்கக் கூடிய வகையில் ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். ஏனெனில் தற்போது புனிதத்துவமான இக்கலையை பலர் வியாபாரமாக்கியும் மலினப்படுத்தியும் வருவது வேதனையளிக்கின்றது. பணமீட்டலுக்காகவும் புகழடைவதற்காகவும் இக்கலையை பயன்படுத்தி வருகின்றனர். அதுமாத்திரமன்றி பாரம்பரிய யோக முறைகளை புறம் தள்ளியும் தமது விருப்பிற்கேற்ப நவீன பயிற்சி முறைகளைப் புகுத்தியும் மக்களிடமிருந்து கச்சிதமாக பணங்கறக்கும் கைங்கரியங்களிலும் ஈடுபடுவது ஏற்புடையதல்ல. எனவே இக்கலையை களங்கப்படுத்துவோரிடமிருந்து நாம் விழிப்புடனிருத்தல் வேண்டும்.

மேலும் வருடந்தோறும் யோக ஆராய்ச்சி மாநாடுகளை நடத்துவதற்குரிய முன்னெடுப்புகளை மேற்கொள்ள வேண்டும். அதற்கு துறைசார் வல்லுநர்களை அழைத்து நடத்தி, அவர்களது சேவைகளுக்கான கௌரவங்கள் வழங்கப்பட வேண்டும். அத்துடன் இம் மாநாடுகளின் போது பொருத்தமான ஆய்வுப் பரப்புகள் தெரிவு செய்யப்பட்டு ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிப்பதற்குரிய வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்து அவ்வாய்வுக் கட்டுரைகளை தொகுத்து கனதியான வகையில் மாநாட்டு நினைவாக ஆய்வுமலராக வெளிக்கொணர்வதற்குரிய எத்தனங்களை ஏற்படுத்த வேண்டும்.

அடுத்த விடயமாக, பாடசாலைகள் முதல் பல்கலைக் கழகங்கள் வரை யோகத்தை ஒரு பாடமாக போதிப்பதற்கான நிலைமைகளை உருவாக்க வேண்டும். இதற்கமைய இலங்கை போன்ற நாடுகளில் கல்விச்சாலைகளில் இத்துறைக்கு அதிகளவு மாணவர்களை உள்வாங்குவதில் முனைப்புக்காட்ட வேண்டியது அவசியமாகும். இதன் மூலம் இக்கலை பற்றியதான பிரக்ஞையை இளம் சந்ததிக்கு கடத்த முடியும். இதனால் சமூக, பொருளாதார, பண்பாட்டு ரீதியில் காத்திரமான மாற்றங்களை ஏற்படுத்த முடியும். வெறுமனே உடற்பயிற்சி முறையாகவே பார்க்கப்படும் இக்காலத்தில் அதனை உள்ளார்ந்த ரீதியாக, தத்துவ நோக்கில் அணுகப்பட வேண்டியது அவசியமாகும். இக்கலை உணர்த்தும் உள்வியல் தத்துவங்களையும் நடைமுறைகளையும் அனைவரும் அறிந்து கொள்வதற்கான சூழமைவைத் தோற்றுவிப்பதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும். இதனொரு கட்டமாகவே கல்விச்சாலைகளில் யோகக்கலை வல்லுநர்களைக் கொண்டு பயிற்சி வழங்கி தரம் வாய்ந்த யோகப் பயிற்சியாளர்களை உருவாக்க முடியும்.

மேற்போன்ற விடயங்களைப் பாரதத்தின் அவதானத்திற்குட்படுத்த வேண்டியது அவசியமாகிறது. எனவே பண்டைய மருத்துவ முறைகளுள் செலவில்லாத, முதன்மையான கலையாக திகழும் இக்கலை மீதான ஆர்வங்கள் தேடல்கள் நாளுக்கு நாள் அதிகரித்துவரும் நிலையில் அதன் மகத்துவமும் உயர்வடைந்து வருவதனை காணக்கூடியதாக உள்ளது. ஒட்டுமொத்தமான அணுகுமுறையில் இதனை நோக்கின் தற்கால அறிவியலுக்கே சவால் விடக் கூடியளவிற்கு ஏராளமான வியக்கத்தக்க வாழ்வியல் அம்சங்களை, பயிற்சி நுட்பங்களை, நோய் குணப்படுத்தும் தன்மையை பயன்பாட்டு ரீதியிலும் தொழிற்பாட்டு ரீதியிலும் தன்னகத்தே கொண்டு காணப்படுகின்றமை விசேட அம்சமாகும். பன்முகத்தன்மை வாய்ந்த ஆரோக்கியம் என்ற கருத்தியலின் அடிப்படையாக விளங்கும். இக்கலையை தற்கால விஞ்ஞான மருத்துவ முறைக்கு இணையாக நிலைபெறச் செய்து, மக்கள் முன் கொண்டு செல்வதற்கு துறைசார்ந்தவர்கள் ஈடுபட்டுழைக்க வேண்டியது அவசியமாகும்.

# முதல் நிலைமைக்கு வலிகாமம் வலயத்தை உயர்த்திய பணிப்பாளர்

## கல்விப் பணியிலிருந்து ஓய்வு பெறும் சுந்தரசிவம்

ந.லோகதயாளன்



சொந்த வலயம் என்ற ஆசையில் மிகவும் உத்வேகத்துடன் பணியாற்றியமையால் மாகாணத்தில் முதலாவது வலயம் என்ற பெருமையை எட்டிப் பிடிக்க முடிந்துள்ளது. பணியாற்றிய காலத்தில் இந்த மன நிறைவோடு ஓய்வு பெற்றுச் செல்லவே விரும்புகின்றேன்.

வலிகாமம் கல்வி வலயம், வடக்கின் முதல்நிலைகல்விவலயம் என உயரும் நிலைமைக்கு வழி சமைத்து 34 ஆண்டுகால கல்வி சேவையில் இருந்து ஓய்வுபெற்றுச்செல்கின்றார் சுப்பிரமணியம் – சுந்தரசிவம்.

1961ஆம் ஆண்டு ஜூன் மாதம் 29 ஆம் திகதி தாளையடி, பண்டத்தரிப்பில் பிறந்து, பண்ணாகம் வடக்கு அமெரிக்கன் மிஷன் த.க.பாடசாலையில் ஆரம்பக் கல்வியைக் கற்று, பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியில் இடை நிலைக் கல்வியைத் தொடர்ந்தார். இதன் பின்பு க.பொ.த. உயர் தரம் வரையில்வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியில் கற்று, பல்கலைக்கழகம் புகுந்து, 1985ஆம் ஆண்டு வர்த்தக துறையில் இருந்து வணிகமானி பட்டம் பெற்ற முதல் மாணவனாக யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் இருந்து வெளியேறினார்.

### முதலாவது ஆசிரிய நியமனம்

1987-12-14 அன்று அம்பாந்தோட்டை ஷாகிராக் கல்லூரியில் ஆசிரியராக முதல் நியமனம் பெற்று 1994-05-04 வரை அங்கேயே பணியாற்றியமையோடு இக் காலப்பகுதியில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமாவினையும் 1994ஆம் ஆண்டு பூர்த்தி செய்து கொண்டார்.

1994-05-05 முதல் 1999-01-03 வரை பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் ஆசிரியராக பணியாற்றினார்.

1999-01-04 முதல் 2012-01-10 வரை வலிகாமம் கல்வி வலயத்தின் கல்வி நிர்வாக பிரதிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றியதோடு 2001ஆம் ஆண்டில் கல்வி முதுமாணிப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டார்.

இதனையடுத்து 2012-01-11 முதல் 2012-04-01 வரையில் மாகாணத் திணைக்களத்திற்கு இணைப்புச் செய்யப்பட்ட நிலையில், 2012-04-02 முதல் 2015-09-08 வரையில் தென்மராட்சி கல்வி வலயத்தின் கல்வி அபிவிருத்திக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து 2015-09-09 முதல் கல்விப் பணிப்பாளர் தர நியமனம் பெற்று 2017-09-08 வரையில் தீவக வலயத்தின் கல்வில் பணிப்பாளராகச் சேவையாற்றினார்.

### வலய பணிப்பாளர் பணியில்

தீவக வலயத்தில் பணியாற்றிய காலத்தில் இருந்து 2017-09-09ஆம் திகதி முதல் 2019-06-11 அன்று வரையில் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளராக பணியாற்றியமையோடு 2019-06-12 முதல் இன்று வரையில் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளராக பிறந்த ஊர், கல்வி கற்ற பாடசாலைகள் உள்ள வரயத்திற்கு நியமிக்கப்பட்டார்.

இவ்வாறு பணி ஓய்வுபெறவுள்ள வலயக் கல்விப் பணிப்பாளரிடம் அவரது சேவைக் கால அனுபவங்கள் தொடர்பில் கேட்டபோது –

சொந்த வலயம் என்ற ஆசையில் மிகவும் உத்வேகத்துடன் பணியாற்றியமையால் மாகாணத்தில் முதலாவது வலயம் என்ற பெருமையை எட்டிப் பிடிக்க முடிந்துள்ளது. பணியாற்றிய காலத்தில் இந்த மன நிறைவோடு ஓய்வு பெற்றுச் செல்லவே விரும்புகின்றேன்.

அரச பணியில் இருந்து ஓய்வு பெறவேண்டிய வயதினை அடைந்தமையினால் அடுத்தவருக்கு வழிவிட்டுச் சென்றாலும் உயிரும், உடல் இயக்கமும் உள்ள வரையில் எனது கல்விப் பணி தொடரும் என்கின்றார்.

1987 ஆம் ஆண்டு எமது பிரதேசங்கள் இந்திய இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த காலத்தில் ஆசிரியப் பணிக்கு அம்பாந்தோட்டைக்குச் சென்று வரும் எம்மை இங்கே சிலர் சந்தேக கண்கொண்டு பார்க்கும் நிலையும் இருந்தது. பணியிலிருந்து வரும் போது ஆனைக்கோட்டையில் வைத்து இந்திய இராணுவத்தின் தாக்குதலுக்கு இலக்காகும் துரதிர்ஷ்ட அனுபவமும் இடம்பெற்றது.

அதன் பின்பு 1988 ஆம் ஆண்டு இறுதியில் ஜே.வி.பி. பிரச்சினை எழுந்தநேரம் – 1990ஆம் ஆண்டு வரை போகும் பாதை எங்கும் பேரூந்துகளில் இருந்து இறக்கி நடத்தப்படுவோம். அப்போது அச்சத்தின் மத்தியிலான பயணமாகவே அவை இருக்கும். இருந்தபோதும் ஜே.வி.பி. பிரச்சினை என்பதனால் தமிழர்களிற்கு பெரிதாகப் பாதிப்பு ஏற்படாது என்ற ஒரு நம்பிக்கையின் அடிப்படையில் பயணம் தொடரும்.

### மீண்டும் பிறந்தேன்

இந்த மனநிலைமையும் நீண்டகாலம் நீடிக்கவில்லை. அதாவது 1990ஆம் ஆண்டு ஜூன் மாதம் இலங்கை அரசிற்கும் புலிகளிற்குமான போர் ஆரம்பித்தபோது ஜே.வி.பி. காலத்தில் எப்போதும் தமிழன் தமிழன் எனக் கூறி முன்னே சென்ற நாம், தமிழ் என்று சொன்னாலேயே உயிர் போகும் அச்சம் நிலவிய காலத்தில் தெற்கிலே – அதுவும் அம்பாந்தோட்டையில் – பணியாற்றியமை ஒரு தனியான படிப்பினையைத் தந்தது.

ஆனால் வீடு வருவதோ அல்லது திரும்பிப் பணிக்கு போவதோ 3 நாள் பயணமாக இருக்கும். அப்போது கிளாலிப் படகுச் சேவை ஊடான பாதையாலேயே பயணிக்க வேண்டும்.

1993ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2ஆம் திகதி சனிக்கிழமை. அன்று மீண்டும் பிறந்தேன் என்றே கூறலாம். அன்று இரவு ஒரு படகில் 14 பேர் பயணித்தோம். அவ்வாறு பயணித்த சமயம் நடுக்கடலில் ‘நேவி’ குறுக்கே வந்து விட்டது. எம்மை நோக்கி சுட்டபடி வந்த படகில் இருந்த நேவி திடீரென எமது படகில் இருந்தவர்களை வெட்டி வீழ்த்தினர். இதனை எண்ணும்போது இன்றும் நெஞ்சு பதறுகின்றது.

இவ்வாறு வெட்டிச் சாய்த்ததில் நான் பயணித்த படகில் இருந்த கிளிநொச்சி மாவட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் ஒருவர் உட்பட 9பேர் படகிலேயே உயிரிழந்தனர். இருவர் படுகாயத்துடனும் நான் உட்பட இருவர் எந்தக் காயமும் இன்றியும் உயிர் தப்பிய நிகழ்வு உடலில் உயிர் உள்ளவரையில் மறக்க முடியாத நிழ்வாகவே உள்ளது. இதன்போது மொத்தம் 4 படகில் வந்தவர்கள் வெட்டிக் கொல்லப்பட்டனர்.

### தற்போதைய ஆசிரியர்கள் பேறுபெற்றவர்கள் என்பேன்

1987ஆம் ஆண்டு ஏற்படுத்திய மாகாண சபை சட்டத்தின் மூலம் மக்களிற்கு நன்மை கிட்டியதோ இல்லையோ – எனக்கு சட்டம் அதிகம் தெரியாது – ஆனால் நிச்சயமாக அரச உத்தியோகத்தர்கள் நன்மை பெற்றனர். அது எவ்வாறெனில் மாகாண சபை நிர்வாகத்தின் மூலமாக எனத் திடமாக கூற முடியும். மாகாண சபை ஊடாக நியமனம் பெற்றால் அவர் ஓய்வு பெறும் வரையில் இந்த மாகாணத்திற்குள்ளேயே பணியாற்ற முடியும். அதிலும் இணைந்த வடக்கு, கிழக்கு பிரிக்கப்பட்டமை உத்தியோகத்தர்களிற்கு மேலும் ஒரு வரப்பிரசாதமானது. அது எவ்வாறு எனில் 8 மாவட்டத்திற்குள் இடம்பெற்ற இடமாற்றம் 5 மாவட்டத்திற்குள் மட்டுப்படுத்தப்பட்டது.

இவை ஏதும் தற்போது நியமனம் பெறும் ஆசிரியப் பெருந்தகைகளிற்கு தெரிவதில்லை. மாறாக நியமனம் கிடைத்தவுடன் சொந்த மாவட்டத்தில் பணி வேண்டும் என்ற நோக்கம் பல அதிகாரிகளை பெரும் நெருக்கடிக்குள் தள்ளுகின்றது. எம்மைப் போன்று அம்பாந்தோட்டை எனப் பெயரைக் கூறினால் இன்று போர் இல்லாத காலத்தில் கூடப் பலர் விரும்புவது கிடையாது. ஆனால் அங்கு பணியாற்றிய அனுபவம் எமது மாணவர்களிற்கான பெரும் சொத்தாக மாறும்.

நாம் அங்கு பணியாற்றிய காலத்தில் அம்பாந்தோட்டையில் வர்த்தக துறை ஆசிரியர்கள் பற்றாக்குறை என்பதனால் வடக்கில் இருந்து சென்று பணியாற்றும் என் போன்ற சில ஆசிரியர்கள் தெற்கில் பெரிதும் மதிக்கப்பட்டனர். அதனால் அங்கு பணியாற்ற தடையோ மனக் கஷ்டமோ எமக்கு இருக்கவில்லை.

### பணியின்போது ஏற்பட்ட ஒரு தாக்கம்

2012இல் எமது மாகாணத்திற்கு உட்பட்ட ஆசிரிய இடமாற்றம் செய்த ஓர் விடயத்திற்காக அப்போது இருந்த ஆளுநர் மூலம் எனது பணியை பறிக்கவும் எம்மவர்களே முயன்றனர். இருப்பினும் எனது பணி என்னை மீண்டும் இந்த நிலைமை வரையில் கொண்டு வந்துள்ளது. – என்றார்.

# நிகழ்நிலை கற்பித்தலால் ஆசிரியர்கள் மீதான அழுத்தத்தை உடனடியாக நிறுத்த வேண்டும்





2020 மார்ச் 12 ஆம் திகதி தொடக்கம் கொரோனா நோய் பரவல் காரணமாக பாடசாலைகள் அனைத்தும் மூடப்பட்டன. இந்நிலைமை ஒரு வருடமும் 3 மாதங்களும் கடந்த நிலையில் தொலைக்கல்வி முறைகள் பல காணப்பட்ட போதும் கொவிட் - 19 நிலைமைக்குள் பாதிக்கப்பட்ட பாடசாலைக் கல்வியை கொண்டு செல்வதற்கு அரசாங்கத்தின் ஒரே தீர்வாக காணப்படுவது நிகழ்நிலை(online) கற்பித்தலே.

- இவ்வாறு கூட்டாக இலங்கையின் முன்னணி ஆசிரியர் சங்கங்களான ஆசிரியர் சேவை சங்கம், இலங்கை ஆசிரியர் சங்கம், அகில இலங்கை ஐக்கிய ஆசிரியர் சங்கம், இலங்கை அதிபர் சேவை சங்கம், இலங்கை தேசிய அதிபர் சங்கம், சுயாதீன கல்வி சேவை சங்கம், இலங்கை முற்போக்கு ஆசிரியர் சங்கம், சுயாதீன இலங்கை ஆசிரியர் சங்கம், பயிற்றப்பட்ட மற்றும் கல்வியியற் கல்லூரி ஆசிரியர் சங்கம், இலங்கை தேசிய ஆசிரியர் சங்கம், இலங்கை தொழில்நுட்ப விஞ்ஞான, விஞ்ஞான டிப்ளோமாதாரி சங்கம் என்பன இணைந்து வெளியிட்டுள்ளன.

எனினும் கல்வி அமைச்சு மற்றும் மாகாணக் கல்வி அதிகாரிகள் மூலம் நிகழ்நிலை(online) கற்பித்தலுக்குத் தேவையான கருவிகள் மற்றும் தரவு (data) போன்ற எவ்வித வசதிகளும் ஆசிரியர்களுக்கு ஏற்பாடு செய்து தரப்படாத நிலையில் தற்போது நடைபெறுகின்ற நிகழ்நிலை கற்பித்தலுக்குத் தேவையான செலவுகளை ஆசிரியர்களே சுயமாக மேற்கொள்கின்றார்கள். எனினும் இம்முறையின் மூலம் 60 வீதத்துக்கு அதிகமான மாணவர்கள் பாதிப்படைகின்றனர்.

இந்நிலைமையில் கல்வி அமைச்சு, மாகாண மற்றும் வலய கல்வி பணிமனைகள் மூலமாக ஆசிரியர்கள் சுயமாக மேற்கொள்ளும் நிகழ்நிலை கல்விச் செயற்பாடுகளை மேற்பார்வை செய்து வருகின்றன. ஆசிரியர்களுக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்காமல் அவர்கள் சுயமாக முன்வந்து செய்யும் செயற்பாடுகளை மேற்பார்வை செய்வதை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம். மேலும் சில வலய கல்விப் பணிமனைகள் நிகழ்நிலை கல்வி தொடர்பாக ஆசிரியர்களுக்கு கடுமையான அழுத்தங்களைக் கொடுத்து வருகின்றன. அநேகமான மாணவர்கள் நிகழ்நிலை கற்றலில் பங்குபற்றாத போதிலும் அவ்வாறான மாணவர்களை எப்படியாவது பங்குபெறச் செய்யுமாறு வலயக் கல்விப் பணிமனைகள் அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்குக் கடுமையான அழுத்தத்தைக் கொடுத்து வருகின்றனர்.

அதிபர்கள், ஆசியர்கள் ஆகிய நாம் மேற்படி அச்சுறுத்தலுக்கு அடிபணியாமல் சுயமாக நாம் மேற்கொள்ளும் சேவைகளைக் கண்காணிப்பு செய்ய இடம் கொடுக்காமல் இருக்குமாறு அனைத்து ஆசிரியர்களையும் கேட்டுக்கொள்கின்றோம்.

மேலும் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்கு எவ்வித வசதிகளையும் வழங்காமல் நிகழ்நிலை கற்றலுக்கு அழுத்தத்தைக் கொடுப்பதும், மேற்பார்வை செய்வதையும் உடன் நிறுத்துமாறு கல்வி அதிகாரிகளை கேட்டுக்கொள்கின்றமையோடு, கடமையோடு தொடர்புபடாத சுயமாக கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியர்களை நாம் கேட்டுக் கொள்வது இவ்வாறான அச்சுறுத்தல்களுக்கு அடிபணிய வேண்டாம் என்பதே ஆகும்.

இந்த அறிக்கையில் இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பிரதான செயலாளர் மஹிந்த ஜயசிங்க மற்றும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் ஆகியோர் கையொப்பம் இட்டுள்ளதோடு இலங்கையில் உள்ள பல முன்னணி ஆசிரியர் சங்கங்கள் இணைந்து இக்கோரிக்கையை விடுத்துள்ளதாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் உபதலைவர் சுந்தரலிங்கம் பிரதீப் குறிப்பிட்டுள்ளார்.

# யோகா: ஆரோக்கிய .........

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

யோகக் கலையில் ஆசனம் முதன்மை பெறுகின்றது. ஆசனம் என்பது இருக்கை, அமர்தல் என்று பொருள்படுகின்றது. இருக்க இருக்க இருக்கை தெளியும் என்பர். இதனை 'அசைவற்ற சலனம்' என்கிறார் சான்டர் எலியட். ஆகவே, யோகம் என்பதனை 'செயலில் உன்னத கவனம்' (attention in action) என்று பொருள் கொள்ளும் போது ஆசனப் பயிற்சி என்பது அவ்வனுபவத்தின் தொடக்க நிலையே எனலாம். ஆசனம் என்பது மனதை அலைபாய விடாமல் ஒருமுகப்படுத்தச் செய்வதற்கான நிலையாகக் கருதப்பட்டது. பின்னர் தியானத்துக்கான உட்கார்ந்த நிலை, இருந்த நிலை மட்டுமல்லாமல் முதுகு கீழ்ப்படிய படுத்துச் செய்தல், தலைகீழ் செய்தல், நின்று செய்தல், நிமிந்துபடுத்துச் செய்தல் எனப் பல தளத்தில் இவ்வாசனப் பயிற்சிகள் விரிந்தன. சூரிய நமஸ்காரமும் சாந்தி (சவாசனம்) இவ்வாசனப் பயிற்சியின் தொடக்கமும் முடிவுமாக உள்ளன.

### யோகா எனும் சாதனம்

யோகாவைப் பொறுத்தவரை எல்லாமும் சாதனமாகி விடும். யோகாவின் குறிக்கோள் அதனை அப்பியாசம் செய்பவர்களை விழிப்புணர்வு உடையவராக்குவதேயாகும். பயிற்சி என்பது நாம் எதனைச் செய்ய விரும்புகின்றோமோ அதனைத் திரும்பத் திரும்பச் செய்ய முயற்சிப்பதாகும். அவ்வாறு செய்வதனால் சம்பந்தப்பட்ட அத்தகைய செயற்பாடானது நிபுணத்துவம் பெறுகின்றது. இலகுவாகிறது. அந்தச் செயலில் அவர் நன்கு தேர்ச்சி உடையவராகின்றார். ஆகவே இங்கு வைராக்கியமும் பயிற்சியும் செயற்பாடொன்றில் நிபுணத்துவமாவதற்கு அடிப்படையான செயல்களாகவுள்ளன. இதனையே 'அப்யானு வைராக்கியாஸ்யாம் தன்னிரோத' என்கிறது பதஞ்சலி யோகம்.

உள்ளத்தால் ஏற்படும் இவ்வுணர்வு உடலையும் மாற்றத்திற்கு உட்படுத்துகிறது. உடலும் மனமும் மாற்றத்திற்கு உள்ளாகின்ற போது பூரண மனிதனாக அவனும் மாற்றமடைகிறான். இம்மாற்றம் அறியாமையைக் களைவதனால் மட்டுமே ஏற்படுகிறது. தடுமாற்றமில்லாத பயிற்சியின் மூலம் எது உண்மை? எது மாயை? என்பதைப் பிரித்தறிவதால் அறியாமை சிதறடிக்கப்பட்டுவிடும் என்கிறார் ஓஷோ. மனதை வென்றாலன்றி மாயை ஒழியாது. மனமே மாயையாயிருத்தலின்,

**'பிறப்பிறப்பாம் பெயருடைய விந்தமாயைப்**
**பெருமையினை முடிவுபெறப் பேசவொண்ணாது**
**வறப்பெரிய தன்மனத்தை வென்றான்மாளும்**
**அல்லதொரு வகையாலும் அகற்றலாகா'**

என்கிறது யோகவாசிட்டம். விவேகத்தை இடைவிடாது பயில்வதே அறியாமையை ஒழிப்பதற்கான வழியாகும் என்பது பதஞ்சலி முனிவரின் சிந்தனை. இந்த விவேகமானது யோக அப்பியாசத்தினால் பெற்றுக் கொள்ளக் கூடியது. அறியாமை அகன்று, மனமாசு நீங்கி, உள்ளம் தூய்மையடைந்த நிலையில் புதிய சிந்தனையுருவாக்கத்திற்கும் செயலூக்கத்திற்கும் யோக அப்பியாசங்கள் வழிசமைக்கும்.

### அட்டாங்க யோகம்

மனம் மற்றும் உடல் நலத்தைப் பராமரித்துப் பேணுவதற்கான அல்லது திடமாகத் தக்க வைத்திருப்பதற்கான தேர்ந்த திறனாகவும், உபாயமாகவும் யோகம் உள்ளது. யோகம் என்பது வெறுமனே ஆசனத்தைக் குறிப்பதன்று. எட்டு அங்கங்களும் சேர்ந்ததே யோகம். அட்டாங்க யோகமானது மனதிற்கும் உடலிற்கும் இடையிலான உறவுகளினுடைய ஆழமான அறிவு, அடிப்படையான பயிற்சி ஆகியனவற்றைப் பெறுவதற்கான மனோ உடலியல் முறைமை சார்ந்த ஒன்றாகவும் உள்ளது. யோக மகரிஷி கோபாலானந்தர்,

1. முறையான பயிற்சி
2. முறையாக உடலைத் தளர்த்துதல்
3. முறையான மூச்சுப் பயிற்சி
4. முறையான உணவு
5. நல்ல சிந்தனையும் தியானமும்

என்றவாறு யோக தத்துவத்தினை ஐந்து பிரிவுகளாக விளக்குகின்றார். இதன்படி யோகத்தில் முறையான பயிற்சி அவசியம். இத்தகைய பயிற்சியினை நல்ல குருவிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். அதன் பின் குருவின்றி அப்பியாசம் செய்வதனை வழக்கமாக்கிக் கொள்ளலாம்.

### இளைஞரை வழிப்படுத்தும்

இளைய சமுதாயத்தினரிடையே காணப்படுகின்ற மன அழுத்தங்கள், உளைச்சல்கள், பழிவாங்கும் எண்ணங்கள், விட்டுக்கொடுப்பற்ற தன்மைகள், புரிதலின்மைகள், வன்முறைகள், முறையற்ற பாலியல் நடத்தைகள் முதலிய சமூகப் பிறழ்வுகளை நீக்கி ஆரோக்கியமான உடலமைப்பையும், உளநலத்தையும் மேம்படுத்துவதற்கு யோகா சிறந்த சாதனமாகவுள்ளது.

முதியவர்கள் தமது முதுமைக் காலங்களில் உடல், உள நோய்களால் பாதிக்கப்படுகின்றனர். நோய்கள் இலகுவாக அவர்களை ஆட்கொண்டு விடுகின்றது. மன உளைச்சல், ஞாபகமின்மை, நித்திரையின்மை, உடற் பலவீனம், தள்ளாடும் நடை, தளர்ந்த பேச்சு, எலும்பு முறிவு போன்ற உபாதைகளால் பாதிக்கப்படுகின்றனர். முதுமைக் காலங்களில் ஆரோக்கியத்துடனும் மனமகிழ்வுடனும் வாழ்வதற்கு எளிமையான யோகப் பயிற்சிகள் உதவுகின்றன. இவர்கள் நாளாந்தம் தங்களால் செய்யக்கூடிய பயிற்சிகளை கிரமமாகச் செய்து வந்தால் உடலுள ஆரோக்கியத்தில் முன்னேற்றம் ஏற்படும். இதனால் முதுமையில் தோன்றும் ஏக்கம், மனக்கவலை, மன உளைச்சல், உடற்சோர்வு முதலியன நீங்கி மகிழ்வுடன் வாழ்வர். தொடர்ச்சியான பயிற்சிகளால் மனோதிடம் அதிகரித்து வாழ்விலேற்படும் பன்முகமான சவால்களை எதிர்கொள்ளும் பக்குவநிலை உருவாகும்.

இவ்வாறாக இந்தயோகப் பயிற்சியினால் எண்ணிறைந்த நன்மைகளுண்டு. யோகப் பயிற்சியினை சிறு வயது முதற்கொண்டு முறையாகப் பயில்பவர்கள் வளமான உடலையும், நலமான உணர்வு, கூரிய அறிவு, பொலிவான தோற்றம், ஞாபக சக்தி உடையவர்களாக விளங்குவர். பெற்றோர்கள் தங்கள் மரபணுக்களில் உள்ள குறைகள் நீங்கப்பெற்று ஆரோக்கியமான பலசாலிகளான பிள்ளைகளைப் பெற்றுக்கொள்ள இயலும். பரம்பரை பரம்பரையாகத் தாக்கும் சில நோய்களைத் தவிர்க்க முடியும். மரபணுச் சீர்குலைவுகளைச் சீர்படுத்த இயலும். புற்றுநோய், இதயநோய், ஆஸ்துமா, மலட்டுத் தன்மை, மூட்டுவாதம், நரம்பு மண்டல நோய்கள் போன்ற நோய்களுக்குரிய நிவாரணியாகவும் இதனைப் பயன்படுத்த முடியும். ஊனச்சதைகள் பற்றிக் கொள்ளாதிருப்பதனால் உறுதியான உடலமைப்பைப் பெறமுடியும். அகச்சுரப்பிகளின் செயற்பாடுகளும், நரம்பு மண்டலச் செயற்பாடுகளும் சீராக இடம் பெறவும் ஏதுவாகின்றது.

### சர்வதேச யோகா தினம்

இவற்றின் புரிதல்களோடு யோகாவை சர்வதேச தினமாக பிரகடனப்படுத்தும் யோசனையானது 2014ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 27 ஆம் திகதி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியினால் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் ஆற்றிய உரையின் போது விடுக்கப்பட்டிருந்தது. அதன்படி யோகாவை சர்வதேச தினமாக பிரகடனம் செய்யும் தீர்மானம் 2014ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 11ஆம் திகதி ஐக்கிய நாடுகளுக்கான பொதுச்சபையில் இந்தியத் தூதுவரால் முன்மொழியப்பட்டது. 2015 ஆம் ஆண்டு உலகின் அனைத்துப் பாகங்களிலும் முதலாவது சர்வதேச யோகாதினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. உலகிலுள்ள 191 நாடுகளில் சுமார் 252 நகரங்களில் யோகா தினம் கடைப்பிடிக்கப்பட்டது.

### இலங்கையில் யோகா

இலங்கையில் பல்வேறு இடங்களிலும் இடம்பெற்ற யோகா நிகழ்விற்குரிய செய்முறை விளக்கங்களை இந்திய கலாசார நிலையம், ஸ்கை கொன்சியஸ்நெஸ் அமைப்பு, பிரம்ம குமாரிகள் ராஜயோக அமைப்பு, ஓம் ஸ்பேஸ் அமைப்பு, வாழும் கலை அமைப்பு, செத் செத யோகா அமைப்பு முதலியன வழங்கியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்தில் பாடசாலைகள் மற்றும் நல்லூர் நாவலர் மணிமண்டபம், நல்லூர் அறுபத்து மூன்று நாயன்மார் மடம், நல்லை ஆதீனம், வேதாந்த மடம், சின்மய மிஷன் முதலிய இடங்களில் தினமும் யோகப் பயிற்சியளிக்கப்படுகின்றது.

### யோகாவுக்குத் தனியான துறை யாழ். பல்கலையில் முயற்சி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துநாகரிகத் துறையினர் நடாத்திய இரண்டு அனைத்துலகச் சைவ மாநாடுகளில் யோகாவினை அளிக்கை செய்திருந்தனர். யாழ் யோக அரங்கத்தைச் சேர்ந்த இளைஞர்களின் பங்களிப்புடன் இந்நிகழ்வு இடம்பெற்றது. இன்று காலத்தின் தேவையையுணர்ந்து இந்துக்கற்கைகள் பீடத்தினர் யோகவியலுக்கெனத் தனியான துறையொன்றினை உருவாக்குவதற்கான முன்வரைவினை பீடச் சபையில் முன்வைத்துச் செயற்பட்டிருக்கின்றமை அதன் அடுத்த கட்டப் பரிமாணத்தையே துலாம்பரமாக்குகின்றது.

நிறைவாக யோகம் என்பது உடலுள நோய்களை நீக்கவும் அவற்றின் ஆரோக்கியத்தினைக் காப்பதற்கும் வல்லதாக உள்ளது. இன்று யோகாவின் முக்கியத்துவம் அதனை உலக அரங்கில் தனித்தவியல்புடன் நிலைநிறுத்தியுள்ளது. சர்வதேச தினங்களில் மட்டும் இதனை அப்பியாசப்படுத்தாமல் தினசரி வாழ்வில் சிலமணிகளை ஒதுக்கி தொடர்பயிற்சிக்கு எம்மைத் தயார்படுத்த வேண்டும். ஒவ்வொரு மனிதனும் தான் செல்லும் பாதைகளில் வெற்றியடைய நல்ல உடல் மற்றும் மன ஆரோக்கியம் அவசியமென்பதனை உணர வேண்டும். இதற்கு தொடர் யோக அப்பியாசங்கள் துணைபுரியும். எனவே மனிதனின் ஆரோக்கிய வாழ்வியலுக்கென அமைந்த ஓர் நெறியாகவும் மனிதனின் ஆரோக்கிய வாழ்க்கையின் குறிகாட்டியாகவும் யோகா திகழும் என்பதில் மாற்றமில்லை.

காலைக்கதிர் Kalaikkathir


### வீட்டிலிருந்தான வேலை (Work From Home - WFH)

அரசாங்கத்தினால் வீட்டிலிருந்தான வேலை (Work From Home - WFH) முறைமை கொண்டு வரப்பட்டது. இது எமக்கு குறிப்பாக அரச உத்தியோகத்தர்களுக்கு ஓர் புதிய விடயமாக இருந்தது. எனினும் எனக்கோ எமது திணைக்கள உத்தியோகத்தர்களுக்கோ இது ஓர் பெரிய விடயமாகப்படவில்லை. ஏனெனில், எமது திணைக்களம் எந்தக் காலத்திலும் தமது Capacityக்கு மேற்ப்பட்ட வேலைகளையை செய்து வருகின்றது. குறிப்பாக அரசினால் வருடாந்தம் வழங்கப்படும் மீண்டுவரும் செலவீனம் மற்றும் விசேட நிதி மூலங்களின் ஊடாக செயற்படுத்தப்படும் வேலைகள் நீங்கலாக வெளிநாட்டு நிதி நிறுவனங்களான உலக வங்கி (Worl Bank),ஆசிய அபிவிருத்தி வங்கி (Asian Development Bank - ADB), ஜப்பான் வங்கி (JICA) போன்ற பல்வேறு நிறுவனங்கள் விசேட கருத்திட்டங்கள் (Rroject), மற்றும் ஏனைய திணைக்கள வேலைகள் என நீண்ட வேலைப் பட்டியல்களுடன் தனித்து அலுவலக வேலைகளில் மட்டுப்படுத்தி செய்து முடிக்கப்பட முடியாமல் வீடுகளிலும் வதிவிடங்களிலும் அலுவலகங்களிலும் செய்து பழக்கம் கொண்டவர்கள் என்ற அடிப்படையில் ஆகும்.

சுகாதார வழிகாட்டல் நடைமுறைகளுக்கமைய




வேலை நிமித்தம் எந்நேரமும் ஓடிக்கொண்டிருந்த எங்களுக்கு முற்றுமுழுதாக குடும்பத்துடன் நேரம் செலவிடுவதற்கான சந்தர்ப்பம் சிறப்பாகவே அமைந்தது. எனினும் இந்நிலையிலும் முழுவதுமாக முடங்கிக்கிடக்காது விளையாட்டுகள், ஆடல் பாடல்கள், சிறு சிறு அரட்டைகள், ஒன்றாக சமைத்து உண்டு சந்தோசமாக கழிந்தது. அதைவிட இக்காலத்தில் வீட்டுத்தோட்டம் செய்தல் பிரபலமானது. நாங்களும் வீட்டுத்தோட்டம் செய்வதில் எமது ஆர்வத்தினை காட்டினோம்.



# கொரோனாவுக்கு எதிரான போராட்டம்

எந்திரி நவரட்னம் சுதாகரன்
பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர்,
முல்லைத்தீவு, பிராந்தியம்.

## ஓர் அனுபவத் தொடர்

அலுவலர்கள் நாளாந்த அலுவலக கடமைகளின் நிமித்தம் வேலைகளின் முன்னுரிமை அடிப்படையில் மார்ச் 20 ஆம் திகதி சமூக வலைத்தளம் (Viber) மூலமாக ஒன்றிணைத்து எனது வழிகாட்டலின் கீழ் தொடர்ச்சியாக அலுவலக கடமைகளினை முன்னெடுத்தேன். அத்துடன் இக்காலகட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து தொலைபேசி மூலமாகவும் ZOOM செயலி மூலமாகவும் கலந்துரையாடல்கள் மேற்கொண்டிருந்தேன். எனினும் களத்தில் விஜயம் செய்து நேரடியாக செய்ய வேண்டிய வேலைகள் குறிப்பாக கட்டுமான வேலைகள், நீர்ப்பாசனம் மேற்கொள்ளல், பங்குதாரர்களுடன் கலந்துரையாடல் என்பன மேற்கொள்ள முடியாத சூழல் எமது திணைக்கள நடவடிக்கைகளுக்கு பெரும் நெருக்கடியாக அமைந்தது.

இந்நிலையில் யாரும் எதிர்பார்த்திராத வகையில் 2020 மார்ச் 22 அன்று யாழ்ப்பாணத்தில் முதலாவது கொவிட் தொற்றும் பதிவாகியது. பிறநாட்டிலிருந்து யாழ்ப்பாணம் வருகை தந்த மதபோதகர் ஒருவரே இதற்கு காரணமானார். மக்கள் மத்தியில் இந்நிலை பெரும் அதிருப்தியினையும் அச்சத்தினையும் ஏற்படுத்தியது.

சமூக வலைத்தளங்களில் முதன்மை செய்தியாக கொவிட் தொற்றுத் தொடர்பான செய்திகளே காணப்பட்டன. இதனைத் தொடர்ந்து நோய்த்தொற்றிலிருந்து பாதுகாப்பினைப் பெற்றுக்கொள்ள அனைவரும் சுயகாப்பினை மேற்கொண்டனர். நானும் சுடுநீர் அருந்துதல், குடிநீர் அருந்துதல், உடற்பயிற்சிகள் மேற்கொள்ளல் என என்னாலான செயற்பாடுகளினை குடும்பத்தினருடன் இணைந்து மேற்கொண்டேன். இவ்வாறாக நாளாந்த நிலைவரங்கள் அமையப் பெற்ற நிலையில் நாட்டின் உயர் ஆபத்து மண்டலங்களின் காலவரையறையற்ற ஊரடங்கு உத்தரவுகளை நீடித்ததன் காரணமாக அரசாங்கம் வீட்டிலிருந்தான வேலைக்காலத்தினை 2020 ஏப்ரல் 03 வரை நீடித்தது.

ஊரடங்கு எனும் நிலையினை எதிர்கொள்வது சற்று கஷ்டமாகவே காணப்பட்டது. நாளாந்த கடமைகளின் நிமித்தம் ஓய்வின்றியும் சோர்வின்றியும் புத்துணர்ச்சியுடன் சுறுசுறுப்பாக செயற்பட்டுக்கொண்டிருந்த நிலையில் வீட்டில் முடங்கிக்கிடப்பது ஏற்க முடியாத நிலையாகவே காணப்பட்டது.

ஊரடங்கு காலப்பகுதியில் அலுவலக கடமைகள் எனது வழிகாட்டலின் கீழும் அலுவலர்களின் ஒத்துழைப்புகளுடனும் வீட்டிலிருந்தே மேற்கொண்டேன். இதனை விட இக்காலப்பகுதி சற்று வித்தியாசமாகவே காணப்பட்டது. வேலை நிமித்தம் எந்நேரமும் ஓடிக்கொண்டிருந்த எங்களுக்கு முற்றுமுழுதாக குடும்பத்துடன் நேரம் செலவிடுவதற்கான சந்தர்ப்பம் சிறப்பாகவே அமைந்தது. எனினும் இந்நிலையிலும் முழுவதுமாக முடங்கிக்கிடக்காது விளையாட்டுகள், ஆடல் பாடல்கள், சிறு சிறு அரட்டைகள், ஒன்றாக சமைத்து உண்டு சந்தோசமாக கழிந்தது. அதைவிட இக்காலத்தில் வீட்டுத்தோட்டம் செய்தல் பிரபலமானது. நாங்களும் வீட்டுத்தோட்டம் செய்வதில் எமது ஆர்வத்தினை காட்டினோம்.

அதே சமயம் சமூக நலனோன்பு நடவடிக்கைகளினையும் அக்கறை கொண்டு மேற்கொண்டு வந்தேன். இக்காலப்பகுதிகளில் வருமானமட்டம் குறைந்த மக்களின் அத்தியாவசிய தேவைகளும் அதிகரித்து காணப்பட்டிருந்தது. பல குடும்பங்கள் உணவுக்கும் கஷ்டப்படுவதினை உணரமுடிந்தது. நாளாந்த கூலி வேலை செய்து பசியாற்றும் குடும்பங்கள் எமது மாகாணத்தில் எத்தனையோ உள்ளன. எனது நண்பர் குழாம் மற்றும் கழக அமைப்புகளுடன் அவர்களுக்கு வேண்டிய உதவிகளினையும் செய்து வந்தேன். கிளிநொச்சி நகர றொட்டரி கழகத்தின் குழாமுடன் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் எப்பாகத்திலிருந்தும் உதவி தேவைப்படுவோருக்கு மனமுவந்து உதவியாற்றி வந்தேன். கஷ்டத்தில் உள்ளோருக்கு உதவியாற்ற சந்தர்ப்பம் கிடைக்கப்பெறின் அவர்கள் நிச்சயமாக கடவுளின் அனுக்கிரகத்தினை பெற்றுள்ளார்கள் என்பதற்கு எவ்வித மாற்றுக்கருத்துமில்லை. அதுபோல் இவ் இக்கட்டான சூழ்நிலையில் உதவிகளை வழங்கியது மனதிற்கு பூரண திருப்தியினை அளித்தது. என்னுடன் உடனிருந்து செயற்பட்ட எனது நண்பர் குழாத்துக்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றிகளினை கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மேலும் ஊரடங்கு காலப் பகுதியில் வேலைகளின் முன்னேற்ற நிலைவரங்கள், கொவிட்19 காலப்பகுதியில் பாதுகாப்பான மற்றும் மேற்கொள்ள வேண்டிய அத்தியாவசிய நடைமுறைகள் குறித்த ஆலோசனைக் கூட்டங்களிலும் சுகாதார நடைமுறைகளுக்கமைய கலந்துகொண்டேன். இவ்வாறாக எவ்வித தடங்கலுமின்றி அனைத்து செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வரப்பட்டதுடன் இக்காலத்தில் மாவட்டங்களுக்கிடையிலான பயணக்கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டிருந்தன.

ஏப்ரல் நடுப்பகுதியில் கட்டுப்பாடுகள் சற்று தளர்த்தப்பட்ட நிலையில் அலுவலக செயற்பாடுகளின் இயக்கத்தின் நிமித்தம் அலுவலகத்திற்கு கிருமிநாசினி தெளிக்கப்பட்டு அலுவலக சூழலில் வைரஸின் தாக்கத்தினை எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு திணைக்கள நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. எனினும் அலுவலக இயக்கத்தினை முழுமையாக மேற்கொள்ள சாத்தியமான நிலை காணப்படவில்லை. தொடர்ந்தும் சமூக வலைத்தளங்களினூடாக சற்றும் தளர்வின்றி பணிகளை செவ்வனே நிறைவேற்றிக் கொண்டிருந்தேன்.

படிப்படியாக மட்டுப்படுத்தப்பட்ட அலுவலர்களுடன் அலுவலக நடவடிக்கைகள் மேற்கொள்ளக் கூடியதாக இருந்தது. எனினும் மட்டுப்படுத்தப்பட்டளவிலேயே ஏப்ரல் மாத செயற்பாடுகள் ஓடிக்கொண்டிருந்தன. இக்காலப்பகுதியில் சிறுபோக நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. சிறுபோக செயற்பாட்டுக்கான ஈவு வழங்கல், நீர் வழங்கல் என்பன திட்டமிடப்பட்டவாறு உரிய காலப்பகுதிக்குள் வழங்கப்பட்டு விவசாய நடவடிக்கைகளுக்கு எவ்வித பாதிப்புமின்றி திட்டமிட்டு செயற்படுத்தப்பட்டன.

மே மாதம் கொவிட்19 தொற்றின் எதிர்வு சற்று கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதுடன் நாளாந்த செயற்பாடுகள் ஓரளவு சாதாரணமாக இயக்க நிலைக்கு வந்துகொண்டிருந்தது. அலுவலகத்தில் உத்தியோகத்தர்களுக்கு சுகாதார நியமங்களுக்கமைய அறிவுறுத்தல்களினையும் விழிப்புணர்வுகளினையும் வழங்கியமையுடன் அவர்களின் சுயகாப்பிற்கு திணைக்கள தலைவர் எனும் வகையில் என்னால் திணைக்கள நியமங்களை மீறாததாகவும் எவ்வித பங்கமுமின்றி உரிய பொறிமுறைகளினை வகுத்து வழங்கியிருந்தேன். இதற்கிடையில் ஊரடங்கினால் பாதிக்கப்பட்டோருக்கான உதவி வழங்கல் நடவடிக்கைகளினையும் எவ்வித குறையுமின்றி தொடர்ச்சியாக மேற்கொண்டிருந்தோம்.

### இலங்கையில் கொவிட் - 19 இன் இரண்டாம் அலை

கொவிட் 19 இன் இரண்டாவது அலை 2020 ஒக்டோபர் 05ஆம் திகதி மினுவாங்கோடா மற்றும் திவூலப்பிட்டியா முடக்கத்துடன் ஆரம்பமானது. இக்காலப்பகுதியில் சற்றும் தளர்வின்றி எனது செயற்பாடுகள் அனைத்தினையும் திட்டமிடப்பட்டவாறு செயற்படுத்திக் கொண்டிருந்தேன். திணைக்கள வேலைத்திட்டங்கள், அபிவிருத்தி நடவடிக்கைகள், பெரும்போக விவசாய நடவடிக்கைகள், விளையாட்டு நிகழ்வுகள் என அனைத்துச் செயற்பாடுகளும் சுகாதார நடைமுறைகளினை பின்பற்றியவாறே சற்றும் தளர்வின்றி நடைபெற்றுக்கொண்டிருந்தன.

தொடரும்

# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

**தரம் - 7** **கணிதம்** **அலகு 10**

## பின்னங்கள்

அலகுப் பின்னம் - தொகுதி எண் 1 ஆகவுள்ள பின்னம் அலகுப் பின்னம் ஆகும்.

உ+ம் - $\frac{1}{2}$, $\frac{1}{3}$, $\frac{1}{4}$, $\frac{1}{5}$, ----------------------------

முறைமைப் பின்னம் - யாதாயினும் பின்னம் ஒன்றில் பகுதி எண்களை விட தொகுதி எண் குறைவாக உள்ள பின்னம் முறைமைப் பின்னம் எனப்படும்

உ+ம் - $\frac{2}{5}$, $\frac{4}{11}$, $\frac{9}{22}$, $\frac{99}{100}$, ----------------------------

முறைமையில்லாப் பின்னம் - யாதாயினும் பின்னம் ஒன்றில் பகுதி எண்ணை விட தொகுதி எண் அதிகமாகவுள்ள பின்னம் முறைமையில்லாப் பின்னம் எனப் படும்.

உ+ம் - $\frac{9}{7}$, $\frac{7}{3}$, $\frac{29}{6}$, $\frac{100}{3}$ ----------------------------

**பயிற்சி**


**01.** கீழே தரப்பட்டுள்ள பின்னங்களில் முறைமைப் பின்னங்களைத் தெரிந்து எழுதுக.

உ+ம் - $\frac{2}{5}$, $\frac{8}{3}$, $\frac{1}{9}$, $\frac{5}{2}$, $\frac{6}{10}$, $\frac{29}{4}$, $\frac{4}{9}$, $\frac{1}{100}$

------------------------------------------------

**02.** கீழே தரப்பட்டுள்ள பின்னக் கூட்டங்களில் பெரிய பின்னத்தை தெரிந்து எழுதுக.

உ+ம் - $\frac{1}{3}$, $\frac{1}{2}$, $\frac{1}{5}$,



= $\frac{1}{2}$

(1) $\frac{1}{2}$, $\frac{5}{8}$, $\frac{1}{10}$ ________________

(2) $\frac{1}{9}$, $\frac{1}{8}$, $\frac{1}{9}$ ________________

(3) $\frac{3}{4}$, $\frac{2}{10}$, $\frac{2}{5}$ ________________

(4) $\frac{1}{6}$, $\frac{3}{4}$, $\frac{1}{12}$ ________________

**03.** வெற்றிடங்களில் ">", அல்லது "<" அல்லது "=" எனும் குறியீடுகளை இட்டு நிரப்புக.

உ+ம் 01. $\frac{1}{2}$ [>] $\frac{1}{4}$  02. $\frac{2}{5}$ [<] $\frac{2}{3}$

$\frac{1 \times 2}{2 \times 2}$ [>] $\frac{1}{4}$  $\frac{2 \times 3}{5 \times 3}$ [<] $\frac{2 \times 5}{3 \times 5}$

$\frac{2}{4}$ [>] $\frac{1}{4}$  $\frac{6}{15}$ [<] $\frac{10}{15}$

(1) $\frac{5}{9}$ [ ] $\frac{4}{9}$

(2) $\frac{2}{4}$ [ ] $\frac{4}{8}$

(3) $\frac{1}{4}$ [ ] $\frac{4}{6}$

(4) $\frac{1}{4}$ [ ] $\frac{4}{5}$ [ ] $\frac{8}{10}$

**04.** தந்தை தன்னிடமிருந்த பணத்தில் $\frac{1}{3}$ ஐ கண்ணனுக்கும் $\frac{2}{5}$ ஐ ராஜாவுக்கும் $\frac{4}{15}$ ஐ மீனாவுக்கும் கொடுத்தார். எனின் ஆகக் கூடிய பணத்தைப் பெற்றவர் யார்?

----------------------------------------------------------------

**05.**

| | கலப்பு எண் | முறைமையில்லாப் பின்னம் |
|---|---|---|
| i) | $3\frac{2}{3}$ (+ →, ← ×) | $\frac{3 \times 3+2}{3} = \frac{9+2}{3} = \frac{11}{3}$ |
| ii) | $7\frac{1}{7}$ | ________ |
| iii) | $8\frac{1}{2}$ | ________ |
| iv) | $20\frac{3}{4}$ | ________ |
| v) | $33\frac{1}{3}$ | ________ |

**06.** முறைமையில்லாப் பின்னங்களை கலப்பு எண்களாக மாற்றி எழுதுக.

i) $\frac{7}{2}$ = $3\frac{1}{2}$  (2 ) 7 : 6 → [3], மீதி [1])

ii) $\frac{46}{20}$ = ________

iii) $\frac{9}{4}$ = ________

iv) $\frac{18}{4}$ = ________

v) $\frac{25}{9}$ = ________

**07.** பின்வரும் பின்னங்களைத் தீர்த்து எளிய வடிவில் தருக.

(i) $1\frac{1}{3} + 2\frac{1}{4}$

$= \frac{4}{3} + \frac{9}{4}$

$= \frac{4 \times 4}{3 \times 4} + \frac{9 \times 3}{4 \times 3}$

$= \frac{16}{12} + \frac{27}{12}$

$= \frac{16+27}{12}$

$\frac{43}{12}$  (12 ) 43 : 36 → 3, மீதி 7)

$= 3\frac{7}{12}$

(ii) $\frac{4}{12} + \frac{3}{9}$

$= \frac{4 \times 3}{12 \times 3} + \frac{3 \times 4}{9 \times 4}$

$= \frac{12}{36} + \frac{12}{36}$

$= \frac{12+12}{36}$

$= \frac{24}{36}$

$= \frac{24 \div 12}{36 \div 12}$

$= \frac{2}{3}$

(iii) $2\frac{1}{4} + 1\frac{3}{4}$

(iv) $\frac{3}{20} + \frac{7}{30}$

(v) $4\frac{2}{3} + 2\frac{1}{3}$

(vi) $2\frac{2}{5} + 1\frac{1}{2} + 3\frac{7}{10}$

ப.லாவண்யா
உள்ளகப்பயிற்சி ( யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயம்)

வழிகாட்டலும் ஆலோசனையும் :- திருமதி கம்சானந்தி முகுந்தன்
( விரிவுரையாளர் யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி)

**இவ்வினாத்தாளுக்குரிய விடைகள் நாளையதினம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.**

# 9 மாவட்ட பொது வைத்தியசாலைகளை மத்தி பறிப்பது வலி. வடக்குப் பிரதேச சபையில் கண்டித்து தீர்மானம்

மாகாண அரச நிர்வாகத்தின் கீழ் உள்ள மாவட்டப் பொது வைத்தியசாலைகள் ஒன்பதை மத்திய அரசு அபிவிருத்தி என்ற பெயரில் கையகப்படுத்துவதைக் கண்டித்து வலி.வடக்கு பிரதேச சபையில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் ஜூன் மாதக் கூட்டம் சபை மாநாட்டு மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை சபையின் தவிசாளர் சோ.சுகிர்தன் தலைமையில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்திலேயே மேற்படி கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

1987 ஆம் ஆண்டு இந்திய-இலங்கை ஒப்பந்தத்துக்கு அமைவாக அப்போதைய பாரதப் பிரதமர் ராஜீவ்காந்தியும் இலங்கையின் முதலாவது நிறைவேற்று ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவும் கூட்டிணைந்து 13 ஆம் திருத்தச் சட்டம் உருவாக்கப்பட்டு மாகாணசபைகள், உள்ளூராட்சி மன்றங்கள் போன்ற ஆட்சிப் பீடங்கள் நிறுவப்பட்டன.

சிறுபான்மை மக்களுக்கான ஓர் இனப் பிரச்சினைத் தீர்வாகவே இந்த 13 ஆம் திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. காணி, பொலிஸ் அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டிருந்தும் அவை எந்தக் காலத்திலும் மாகாண நிர்வாகத்தால் நிர்வகிக்கப்படவில்லை. ஆரம்பத்தில் மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள் என்பன மாகாண நிர்வாகத்தின்கீழ் இருந்தன. பின்னர் 2007 ஆம் ஆண்டளவில் அவை பறிக்கப்பட்டன.



மின்சாரசபை, முன்பள்ளிகள் என்பவை பிரதேசசபையின் கீழ் இருந்து மெல்லப் பறிக்கப்பட்டன. தற்போது மாகாண நிர்வாகத்தில் உள்ள சிறந்த ஆயிரம் பாடசாலைகளை தேசியப் பாடசாலையாக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் மத்திய அரசு பறித்தெடுக்கின்றது. இது மாகாண கல்வி அமைச்சை ஒரு வெறுமைக்குள் தள்ளுகின்ற நிலைமை ஆகும்.

தற்போது சுகாதார அமைச்சின் கீழ் உள்ள அதிகாரங்கள் பிடுங்கப்படுகின்றன. இலங்கை முழுவதும் ஒன்பது மாவட்டப் பொது வைத்தியசாலைகளை மத்தி அபிவிருத்தி என்ற பெயரில் எடுக்கின்றது. அதில் நான்கு மாவட்டப் பொது வைத்தியசாலைகள் எமது வடக்கு மாகாணத்துக்குரியவை. வடக்கு சுகாதார அமைச்சின் கீழ் உள்ள அவர்களின் அதிகார நிர்வாகத்தின் முக்கியமானவையாகக் கொள்ளப்படுபவை இந்த 4 மாவட்டப் பொது வைத்தியசாலைகளே ஆகும். அவற்றை மத்தி எடுப்பதை நாம் ஒருபோதும் ஏற்கமாட்டோம். ஆளுநர் அலுவலகத்துக்கு முன் மக்களைத் திரட்டி பாரிய போராட்டம் நடத்துவோம்.

இலங்கை அரசமைப்புப் படி தேசிய, போதனா, விசேட வைத்தியசாலைகளே மத்திய அரசின் கீழ் உள்ளவை ஆகும். மாகாணப் பொது வைத்தியசாலை, மாவட்டப் பொது வைத்தியசாலை, ஆதார வைத்தியசாலை, பிரதேச வைத்தியசாலை மற்றும் மருத்துவ மனைகள் மாகாண அரச நிர்வாகத்தின் கீழ் உள்ளவை.

இவ்வாறிருக்க, ஒரு மாவட்டப் பொது வைத்தியசாலையை அதே தரத்தில் மத்தி கையகப்படுத்துவது 13 ஆம் திருத்தச் சட்டத்தின் படி 1987 ஆம் ஆண்டு மாகாணசபைகள் உள்ளூ ராட்சி மன்ற திருத்தச்சட்டத்தையும் நாட்டின் அரசமைப்பையும் மீறுகின்ற செயற்பாடாகும்.

ஆகவே, வலி.வடக்கு பிரதேசசபையில் இந்த விடயத்தை வன்மையாகக் கண்டித்து ஏகமனதான தீர்மானமும் நிறைவேற்றப்பட்டு இது தொடர்பில் உரிய தரப்பினருக்கு அறிவிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

## பொதுமக்களை முழந்தாளிட வைத்த சம்பவம்; இராணுவ வீரர்கள் இருவர் உடனடி இடமாற்றம்

மட்டக்களப்பு - ஏறாவூர், மிச்நகர் பகுதியில் பொதுமக்கள் சிலரை, இராணுவத்தினர் முழந்தாளிட வைத்த சம்பவம் தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என இராணுவத் தளபதி தெரிவித்தார்.

மேலும் சம்பவத்துடன் தொடர்புடைய இராணுவ வீரர்கள் இருவரையும் உடனடி இடமாற்றம் செய்துள்ளோம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஏறாவூர் மிச் நகர் பிரதேசத்தில் பயணக் கட்டுப்பாட்டை மீறிச் செயற்பட்ட சிலரை, இராணுவத்தினர் பிடித்து, வலுக்கட்டாயமாக முழந்தாளிட வைத்து, கைகளை உயர்த்துமாறு பணித்துள்ளனர்.

இந்த சம்பவம் சமூக வலைத்தளங்களில் வைரலாகி, தற்போது பேசுபொருளாக மாறியுள்ளது.

இந்நிலையிலேயே சம்பவத்துடன் தொடர்புடைய இராணுவத்தினர் இருவரை உடனடி இடமாற்றம் செய்துள்ளோம் எனவும் அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இராணுவத் தளபதி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசியின் இரண்டாவது டோஸிற்காக பைசர் தடுப்பூசியை ஏற்றுவது குறித்து தொடர்ந்தும் ஆய்வு

கொழும்பு, ஜூன் 21

அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசியின் இரண்டாவது டோஸிற்காக பைஸர் தடுப்பூசியை ஏற்றுவது தொடர்பாக ஆய்வுகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் தலைவர் விசேட வைத்தியர் பிரசன்ன குணசேன இந்த விடயம் தொடர்பாகத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மாதத்திற்குள் கொரோனாத் தடுப்பு வேலைத்திட்டத்துக்காக 52 லட்சம் தடுப்பூசிகள் கொள்வனவு செய்யத் திட்டமிடப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் அவற்றுள் 22 லட்சம் தடுப்பூசிகள் இந்த மாதம் கொண்டுவரப்படவுள்ளன என்றும் அவர் கூறியுள்ளார்.

## 24 லட்சத்து 55 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு தடுப்பூசியின் முதலாவது டோஸ் செலுத்தப்பட்டது

இலங்கையில் இதுவரை 24 லட்சத்து 55 ஆயிரத்து 180 பேருக்கு கொரோனாத் தடுப்பூசியின் முதலாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை மாத்திரம் 9 ஆயிரத்து 577 பேருக்கு சீனாவின் சினோபோர்ம் தடுப்பூசியின் முதலாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ளது.

மேலும் சினோபோர்ம் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் கடந்த சனிக்கிழமை 16 ஆயிரத்து 534 பேருக்கு செலுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, இதுவரை 3 லட்சத்து 57 ஆயிரத்து 868 பேருக்கு கொவிஷீல்ட் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ளது.

மேலும் இதுவரை 95 ஆயிரத்து 470 பேருக்கு ஸ்புட்னிக் வி தடுப்பூசியின் முதலாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ளது.

## இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 8 | முக்கோணிகளும் நாற்பக்கல்களும் | கணித அலகு 12

**1) பக்கங்களின் அடிப்படையில்**
1. இருசமபக்க முக்கோணி
2. சமபக்க முக்கோணி
3. சமனில் பக்க முக்கோணி

**கோணங்களின் அடிப்படையில்**
4. கூர்கோண முக்கோணி
5. விரிகோண முக்கோணி
6. செங்கோண முக்கோணி

**2) முக்கோணங்களின் அகக்கோணம்**
1. $X = 75^{\circ}$
2. $X = 125^{\circ}$
3. $X = 20^{\circ}$
4. $X = 35^{\circ}$
5. $X = 60^{\circ}$
6. $X = 45^{\circ}$

**3) நாற்பக்கலின் அகக்கோணம்**
1. $X = 80^{\circ}$
2. $X = 155^{\circ}$
3. $X = 36^{\circ}$
4. $X = 45^{\circ}$
5. $X = 53^{\circ}$

**4) முக்கோணியின் புறக்கோணம்**
1. $X = 125^{\circ}$
2. $3X = 150$
3. $X = 135^{\circ}$
4. $X = 72^{\circ}$
5. $X = 120^{\circ}$

**5) நாற்பக்கலின் புறக்கோணம்**
1. $X = 60^{\circ}$
2. $X = 110^{\circ}$
3. $X = 45^{\circ}$
4. $X = 60^{\circ}$

தாமினா சுபாகரன்
யா/ செங்குந்த இந்துக் கல்லூரி.

## ஐ.தே.கட்சியின் தேசியப் பட்டியல் எம்.பி. பதவி எனக்கே கிடைத்திருக்க வேண்டும்

### என்கிறார் ஜோன் அமரதுங்க



கொழும்பு, ஜூன் 21

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி தனக்கே கிடைத்திருக்க வேண்டும் என முன்னாள் அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், ஜோன் அமரதுங்க கடும் அரசியல் தீர்மானம் ஒன்றை எடுக்கத் தயாராகி வருகிறார் எனக் கூறப்படுகிறது.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவுடன் இணைவதா இல்லையா என்பது தொடர்பாக எதிர்காலத்தில் தீர்மானிக்கப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

கட்சியில் முன்னுரிமை தருவதாகக் கூறி சஜித் பிரேமதாஸ அழைத்த நேரத்தில் அதனை ஏற்றுக்கொள்ளாது, ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்தேன் எனவும் எனினும் ஐக்கிய தேசியக் கட்சி தனக்கு வழங்கிய வாக்குறுதியை மீறியுள்ளது எனவும் ஜோன் அமரதுங்க குறிப்பிட்டுள்ளார்.

தேசியப் பட்டியலில் முதலில் தனது பெயர் குறிப்பிடப்பட்டிருந்த நிலையில், அதனைக் கவனத்தில் கொள்ளாது, ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கிடைத்த தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ரணில் விக்கிரமசிங்க பெற்றுக்கொண்டுள்ளமையின் மூலம் தோல்வியடைந்தவர்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்புவதில்லை என்ற கொள்கையை மீறியுள்ளார் எனவும் அமரதுங்க குற்றம் சுமத்தியுள்ளார்.

தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடையாத தனக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் உறுப்பினர் பதவி கிடைக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் தான் இருக்கிறார் எனவும் தேசியப் பட்டியலில் தனது பெயரை சேர்த்துக் காவிட்டால், தேர்தலில் போட்டியிடும் நிலைப்பாட்டில் இருந்தார் எனவும் அவர் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும் தான் ஏமாற்றப்பட்டுள்ளார் எனவும் அமரதுங்க மேலும் தெரிவித்துள்ளார்.

# மாகாண அரசைப் பாதுகாக்க இந்தியா முயற்சி எடுக்கவில்லை

## சிவசக்தி ஆனந்தன் சாடல்



இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு 30 வருடங்கள் கடந்துள்ள நிலையில், மாகாண அரசாங்கத்தைப் பாதுகாப்பதற்கு இந்தியா எந்தவொரு நடவடிக்கையையும் இதுவரை எடுக்கவில்லை என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் கடந்த சனிக்கிழமை ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் சிவசக்தி ஆனந்தன் மேலும் கூறியுள்ளவை வருமாறு -

இலங்கை - இந்திய ஒப்பந்தம் முழுமையாக நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டிருந்தால், தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்களைத் தடுத்திருக்க முடியும்.

இந்த விடயத்தில் ஏனைய தமிழ்த் தலைவர்கள் தவறிழைத்துள்ளமையுடன் இலங்கை அரசாங்கமும் பாரிய தவறிழைத்துள்ளது.

மேலும் இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு 30 வருடங்கள் கடந்துள்ளன. அதாவது போருக்குப் பின்னரான காலப்பகுதியிலாவது, மாகாண அரசாங்கத்தைப் பாதுகாப்பதற்கு எந்தவொரு முயற்சிகளையும் இந்தியா எடுக்கவில்லை.

இந்நிலையில் இன்றுள்ள அரசு, மாகாணங்களுக்கு இருக்கின்ற அதிகாரங்களையும் பறித்தெடுக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளது.

எனவே இந்தியா, எதிர்காலத்தில் தமிழ் மக்களுக்கு ஒரு நிரந்தர அரசியல் தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கு தனது முழு முயற்சியையும் மேற்கொள்ள வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

# சிறிய கட்சிகளை அரசிலிருந்து விலக்க நடக்கின்றது சூழ்ச்சி

## சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் கூறுகின்றார்

அரசாங்கத்திற்குள் இருக்கும் சிறிய கட்சிகளின் தலைவர்களை அமைச்சரவை மற்றும் அரசாங்கத்தில் இருந்து நீக்கும் சூழ்ச்சி நடைபெற்று வருவதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

குருநாகலில் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

நாம் சிந்திக்க வேண்டிய இந்த நேரத்தில் சூழ்ச்சி ஒன்று நடைபெற்று வருகிறது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் சம்பந்தப்பட்ட சிறிய கட்சிகளை அரசாங்கத்தில் இருந்து நீக்குவதே அந்த சூழ்ச்சி.

எமக்குப் பலத்தை கொடுத்த கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களை அமைச்சரவையில் இருந்து நீக்க முயற்சித்து வருகின்றனர்.

அரசாங்கத்தில் இருந்து நீக்கும் இந்த செயற்பாடு முன்னெடுக்கப்பட்டால், எதிர்காலத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் அந்த நிலைமை ஏற்படலாம் எனவும் தயாசிறி ஜயசேகர குறிப்பிட்டுள்ளார்.

# யாழ். பல்கலை வணிக முகாமைத்துவ பீட நுண்நிதி தகைமை கற்கை அறிமுக நிகழ்வு



**(இ.கலையமுதன்)**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீடத்தால் நடத்தப்படுகின்ற நுண்நிதி தகைமைச் சான்றிதழ் (**Diploma in Micro Finance**) கற்கை நெறியின் நான்காம் அணியின் அறிமுக நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை இணைய வழியாக-நிகழ்நிலையில் இடம்பெற்றது.

திருநெல்வேலி, பால் பண்ணை வீதியில் அமைந்துள்ள வணிக முகாமைத்துவ பீடத்தில், பீடாதிபதி பேராசிரியர் பா. நிமலதாசன் தலைமையில் இணைய வழி வாயிலாக இந்தக் கற்கை நெறியின் ஆரம்ப நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா, கற்கை நெறி இணைப்பாளரான சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி தர்ஷிகா பிரதீஸ், துறைத் தலைவர்கள் மற்றும் நிதி முகாமைத்துவத் துறை விரிவுரையாளர்கள், உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். தற்கால கொரோனாப் பரவல் தடுப்புச் செயலணியின் அறிவுறுத்தலுக்கமைவாக, சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்பட்டு இந்த அறிமுக நிகழ்வு இடம்பெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீடத்தால் நடத்தப்படுகின்ற ஒரு வருட காலத்தைக் கொண்ட நுண்நிதி தகைமைச் சான்றிதழ் கற்கை நெறியின் நான்காம் அணியின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் அனைத்தும் இணைய வழியாக - நிகழ் நிலையிலேயே மேற்கொள்ளப்படவுள்ளன. நிதிசார் நிறுவனங்கள், வங்கி ஊழியர்கள் உட்பட 27 பேர் இந்த அணியில் கல்வி பயில்வதற்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இணைய வழி வாயிலாக நடத்தப்படும் முதலாவது நுண் நிதி தகைமைச் சான்றிதழ் கற்கை நெறியின் முதல் அணி இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# இதுவரை 700 பேருக்கு முல்லைத்தீவில் தொற்று!

முல்லைத்தீவில் இதுவரை 700 பேருக்கு கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் 492 பேர் குணமடைந்துள்ளனர் என சுகாதாரப் பணியகம் தெரிவித்துள்ளது.

கடந்த மே மாதம் 17 ஆம் திகதி முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதியில் இயங்கிய ஆடைத்தொழிற்சாலை ஒன்றில் பணிபுரிபவர்களுக்கு ஏற்பட்ட கொவிட் தொற்று காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு, முள்ளியவளை பொலிஸ் பிரிவுகள் முடக்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டன.

புதுக்குடியிருப்பு நகர்பகுதியில் உள்ள ஆடைத் தொழிற்சாலையில் சுமார் 1,500 பேர் வரையான பணியாளர்கள் பணியாற்றி வருகின்ற நிலையில் அவர்களில் கடந்த மே மாதம் 17 ஆம் திகதி 327 பேருக்கு கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

மேலும் தொடர் நாள்களாக பல்வேறு பகுதிகளில் எழுமாறாக மேற்கொண்ட பி.சி.ஆர். பரிசோதனைகளின் முடிவில் இதுவரை 700 பேருக்கு கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதாரப் பணியகம் தெரிவித்துள்ளது.

அவர்களில் 492 பேர் குணமடைந்துள்ள நிலையில் தொடர்ந்து 207 பேர் சிகிச்சை பெற்றுவருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. மேலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 169 குடும்பங்களைச் சேர்ந்த 475 பேர் தொடர்ந்தும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் கிளிநொச்சியில் உலருணவு





**(இ.கலையமுதன்)**

யாழ்ப்பாணம், ஜீன் 20

சந்நிதியான் ஆச்சிரமத்தால் கிளிநொச்சி மாவட்டத்தின் செல்வாநகர் கிராம மக்களுக்கு நிவாரணப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

செல்வாநகர் கிராம சேவையாளர் ஊடாகத் தெரிவு செய்யப்பட்ட சுமார் 110 குடும்பங்களுக்கு தலா 3 ஆயிரம் ரூபா பெறுமதியான அத்தியாவசிய உலர் உணவுப் பொதிகள் கடந்த சனிக்கிழமை வழங்கி வைக்கப்பட்டன.

சந்நிதியான் ஆச்சிரமத்தின் மோகனதாஸ் சுவாமிகள், செல்வாநகர் கிராம சேவகர் மற்றும் சக்திவேலன் ஆலய நிர்வாகிகள் ஆகியோர் கலந்துகொண்டு மக்களுக்கான நிவாரணப் பொதிகளை வழங்கிவைத்தனர்.

இதன்போது தொடர்ச்சியாக மக்களுக்கான நிவாரணப் பணியாற்றி வருகின்ற மோகனதாஸ் சுவாமிகள் சக்திவேலன் ஆகியோர் ஆலய நிர்வாகிகளால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

# தினம் ஒரு விவசாயத் தகவல்

Agriculture Information

## 2020 இல் பழவர்க்கங்களது உற்பத்தி

மாழ்பழம், வாழைப்பழம், பப்பாப்பழம், கொய்யாப்பழம், வத்தகைப்பழம் என்பனவற்றின் உற்பத்தியில் ஏற்பட்ட கணிசமான மேம்பாடுகளின் காரணமாக பழவர்க்கங்களின் உற்பத்தி முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 3.1 சதவீதம் கொண்ட வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2020இல் பழவர்க்கங்களின் உற்பத்தி 3.1 சதவீதத்தினால் அதிகரித்தது.

ஆய்விற்குரிய ஆண்டுப்பகுதியில், ஐ.அ.டொலர் 33.1 மில்லியன் பெறுமதியான 38, 725 மெ.தொன் பழங்கள் ஏற்றுமதி செய்யப்பட்ட வேளையில், ஐ.அ.டொலர் 58.1 மில்லியன் பெறுமதியான 52, 778 மில்லியன் மெ.தொன் கொண்ட அப்பிள், மண்டறின், தோடம்பழம் மற்றும் திராட்சை என்பனவற்றை உள்ளடக்கிய பழங்கள் இறக்குமதி செய்யப்பட்டன. சிறந்த ஏற்றுமதிகளுக்கு உள்நாட்டு பழங்களும் காய்கறிகளும் தேவைப்படுகின்ற போதும், உள்நாட்டு உற்பத்தியாளர்களினால் தொடர்ச்சியான அடிப்படையில் சிறந்த தரமான உற்பத்திகளைப் பெருமளவில் வழங்க முடியாமலுள்ளமை பழவர்க்கங்களின் ஏற்றுமதித் துறையினை அபிவிருத்தி செய்வதற்கு பெரும் தடையாகக் காணப்படுகின்றது. வேளாண்மை உள்ளீடுகளைப் பயன்படுத்துவது மற்றும் அறுவடை செய்வது, உற்பத்தியாளர்களுக்கும் ஏற்றுமதியாளர்களுக்குமிடையில் நேரடி இணைப்புக்களை உருவாக்குவது என்பன தொடர்பில் சிறந்த வேளாண்மை நடைமுறைகளை மேம்படுத்துவதும் ஒப்பந்த ரீதியான பயிர்ச்செய்கை முறைமைகளை மேலும் அபிவிருத்தி செய்வதும் பழவர்க்கங்களின் ஏற்றுமதிகளை மேம்படுத்துவதற்கு முக்கியமானவையாகும்

தகவல் மூலம் மத்திய வங்கி அறிக்கை 2020

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

# ‘மொட்டு’ கூட்டணிக்குள் மோதலை தவிர்க்க இரு முனை சந்திப்புகள்!

ஆளுங்கட்சியின் முக்கிய இரு கூட்டங்கள் நாளையும், நாளைமறுதினமும் நடைபெறவுள்ளன.

ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரின் பங்குபற்றலுடன் நடைபெறும் இந்தக் கூட்டங்களில் தீர்க்கமான சில முடிவுகள் எடுக்கப்படலாம் என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரச கூட்டணிக்குள் ஏற்பட்டிருந்த முறுகல் நிலை எரிபொருள்களின் விலை உயர்த்தப்பட்ட பின்னர் விடுக்கப்பட்ட அறிக்கை மற்றும் அறிவிப்புகளால் வெளிச்சத்துக்கு வந்தன.

எரிபொருள்களின் விலை உயர்வுக்கான பொறுப்பையேற்று வலுசக்தி அமைச்சர் கம்மன்பில பதவி துறக்கவேண்டும் என ‘மொட்டு’ கட்சியிலுள்ள பஸிலின் சகாக்கள் வலியுறுத்தி வருகின்றனர். பஸிலின் ஆசியுடன்தான் சாகர காரியவசம் காரசாரமானதொரு அறிக்கையையும் விடுத்திருந்தார் என அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

இந்த அறிக்கையால் கொதிப்படைந்த கம்மன்பில சாகரவுக்கு பதிலடி கொடுத்தார். பகிரங்க விவாதத்துக்கும் அழைத்தார். சாகரவுக்கு ஆதரவாக ‘மொட்டு’ கட்சிக்கு ஆதரவு வழங்கும் பங்காளிக் கட்சிகள் அணிதிரண்டன. எனினும், பஸிலின் சகாக்கள் பின்வாங்கவில்லை. கம்மன்பில பதவி துறக்கவேண்டும் என்பதில் உறுதியாகவுள்ளனர்.

அத்துடன் எரிபொருள்களின் விலை குறைக்கப்படவேண்டும், மக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தி வருகின்றனர்.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே ஆளுங்கட்சி தலைவர்கள் கூட்டம் நாளை நடைபெறவுள்ளது. இதன்போது சமகால அரசியல் நிலைவரங்கள் பற்றியும், எதிர்காலதிட்டங்கள் சம்பந்தமாகவும் கலந்துரையாடி தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளன.



மறுநாள் ஆளுங்கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டம் காரசாரமானதாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. கூட்டணிக்குள் எழுந்துள்ள முரண்பாடுகளுக்கு முடிவு கட்டப்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

# ஏறாவூர் சம்பவத்துக்கு குவியும் கண்டனங்கள்

## படையினருக்கு இடமாற்றம்



மட்டக்களப்பு மாவட்டம், ஏறாவூரில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் இரு இராணுவ அதிகாரிகளுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது என இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

பயணக் கட்டுப்பாட்டை மீறினர் என்ற குற்றச்சாட்டுக்காக ஏறாவூர் பகுதியில் மக்கள் சிலரை தரையில் முழந்தாளிட வைத்து இராணுவத்தினர் தண்டனை வழங்கினர்.

இது தொடர்பான புகைப்படங்கள் சமூகவலைத்தளங்களில் வெளியானதையடுத்து இந்தச் சம்பத்துக்கு கடும் கண்டனங்கள் குவிந்து வருகின்றன.

இந்நிலையிலேயே, அதனுடன் தொடர்புபட்ட இராணுவ அதிகாரி ஒருவரும், சிப்பாய் ஒருவரும் இடமாற்றப்பட்டுள்ளனர்.

விசாரணைகளின் பின்னர் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று இராணுவப் பேச்சாளர் கூறியுள்ளார்.

# முல்லைத்தீவில் தொடர் திருட்டு: 4 சிறுவர்கள் வசமாகச் சிக்கினர்

முல்லைத்தீவு, ஜூன். 20

முல்லைத்தீவு – விசுவமடுப் பகுதியில், நீண்ட நாள்களாக, வீடுகளுக்குள் புகுந்து, நீர் இறைக்கும் இயந்திரம் உள்ளிட்ட பெறுமதியான பொருள்களைத் திருடி வந்த கொள்ளையர்கள் நால்வர், கிராம மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு, புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள், 17,18 வயதுகளையுடையவர்கள் எனவும், இவர்கள் விசுவமடு – குமாரசாமிபுரம், வள்ளுவர்புரம், மாணிக்கபுரம், இளங்கோபுரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுவர்கள் நால்வரும், விசுவமடு மேற்குப் பகுதியில் உள்ள வீடொன்றில், நேற்று அதிகாலை, திருட முற்பட்டபோதே, கிராம மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சிறுவர்கள், மேலும் பல கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்று விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சந்தேகநபர்களை முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## போதைப்பொருள் கடத்தல்;

# தப்பிய 24 பேருக்கு சிவப்பு அறிவித்தல்

வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்று தலைமறைவாகியுள்ள 24 போதைப்பொருள் கடத்தல்காரர்களைக் கைது செய்வதற்கு சர்வதேச பொலிஸார் ஊடாக சிவப்பு அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

சிவப்பு அறிவித்தலுக்கு அமைய, போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் கடத்தல், திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் 13 பேர் தொடர்பிலேயே தகவல்கள் கிடைத்துள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவர்களில் இருவர் கைதுசெய்யப்பட்டு நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளமையுடன், மேலும் 11 பேர் வெளிநாடுகளில் தலைமறைவாகியுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறியுள்ளார்.

பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய ஏனைய சிலருடன் மொத்தமாக 24 பேர் வெளிநாடுகளில் தலைமறைவாகியுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# முதியோர் இல்லத்தில் தேரர் அடித்துக்கொலை

பமுனுகம, உஸ்வெட்டகொய்யவா பகுதியில் உள்ள முதியோர் இல்லம் ஒன்றில் தங்கியிருந்த தேரர் ஒருவர் அடித்துக் கொலைசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த முதியோர் இல்லம் மனநிலை பாதிக்கப்பட்டவர்களுக்காக ஒதுக்கப்பட்டது எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

மனநலம் பாதிக்கப்பட்டு அங்கு தங்கிருந்த 73 வயதுடைய ஜா – எல பகுதியைச் சேர்ந்த தேரர் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று விசாரணை மேற்கொண்டுவரும் பமுனுகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


## மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் ‘காலைக்கதிர்’ சேவையைப் பெற்றுக்கொள்ள **076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை – அதிகாலையும் மாலையும் – உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.


## ‘டெல்டா’ வைரஸ் அடையாளம் காணப்பட்ட

# தெமட்டகொடை சுகாதாரப் பிரிவில் மேலும் 26 பேருக்குக் கொரோனா!

தெமட்டகொடை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடந்த 24 மணிநேரத்துக்குள் மேலும் 26 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கொரோனா பரவல் தடுப்பு செயற்பாட்டு மையம் விடுத்துள்ள அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, தெமட்டகொடைப் பகுதியில் அதிக வீரியம் கொண்ட கொரோனா (டெல்டா) திரிபு தொற்றிய ஐவர் ஆரம்பத்தில் அடையாளம் காணப்பட்டிருந்தனர்.

இதேவேளை, கொழும்பு மாவட்டத்தில் கடந்த 24 மணிநேரத்துக்குள் 411 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.